

# ஞானச்சுடர்

மாசி

மலர் 2009




நூலகம்

வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு.**

**பொருள்:** ஐம்பூதங்களுந் தோன்றுவதற்கு மூலமாயுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவைகளின் தோற்றத்தை அறிய வல்லவனது அறிவினிடத்தே இவ்வுலகின் இயல்பு இருக்கின்றது. (27)

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

**பொருள்:** நிரம்பிய கல்வியுடைய துறவிகளின் பெருமையை, அவர்களின் மந்திரங்களாகிய சொற்களே (கண்ணெதிரில்), காட்டிவிடும். (28)

## நற்சிந்தனை



### நமச்சிவாயப் பதிகம்

ஆறுதல்பெற அடியர்பாற்சென் றவர்பணிவிடை
ஆற்றிலேன்
மாறுகொள்புலன் வழியிற்சென்று மயங்கினேன்
மயங்காமலே
தேறுதல்தர என்னிடம்வரச் சித்தமில்லையோ
தெய்வமே
கூறனேயுமை நான்மறக்கினுங் கூறுநா
நமச்சிவாயவே (7)

அப்பர் சுந்தரர் மாணிக்கர்தமக் கருளருளிய அத்தனே
முப்புரமெரி செய்தமூர்த்தியே மூவர்போற்றும் முதல்வனே
ஒப்பிலாதவொ ருவனேயுமை பாகனேயுறு துணைவனே
அப்பனேயுனை நான்மறக்கினு மரற்றுநா
நமச்சிவாயவே (8)

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்

வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 134

## 2009 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிவனுக்கு உகந்த..... | ஆர்.வீ. கந்தசாமி | 1 - 2 |
| 'ராம' பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 3 - 5 |
| எத்தனைகோடி துன்பம்..... | முருகவே பரமநாதன் | 6 - 9 |
| சைவ பாரம்பரியங்களுள்.... | த. சுகந்தன் | 10 - 11 |
| சைவசமய பக்தி..... | க. நாகேஸ்வரன் | 12 - 16 |
| நன்னாரதர் நவிலும்.... | சிவ. சண்முகவடிவேல் | 17 - 19 |
| வட இந்திய ஸ்தல யாத்திரை | | 20 - 22 |
| துறவிகளின் பார்வையில்..... | யாழ் வதிரிவாசன் | 23 - 24 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 25 - 27 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ. மகாலிங்கம் | 28 - 32 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 33 - 35 |
| தேவாரங்களில் அறம்.... | இ. சாந்தகுமார் | 36 - 37 |
| நித்திய அன்னப்பணி | | 38 - 39 |
| மூடர் | வாரியார் சுவாமிகள் | 40 - 43 |
| கௌரவிப்பு நிகழ்வு | | 44 - 46 |
| ஆத்திசூடி | ஔவையார் | - 47 |
| சந்நிதியான் ஆச்சிரமம்.... | திரு மு. திருநாவுக்கரசு | 48 - 49 |
| செய்திச் சிதறல் | | 50 - 51 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 52 - 54 |
| வண்ணமயில் மீதேறி... | எம்.கே. இளையப்பு | - 55 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 56 - 58 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல. Q.D/38/NEWS/2009**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# தைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

133ஆவது தைமாத மலருக்கான வெளியீட்டுரையினை யா/ கனகரெத்தினம் மகாவித்தியாலய ஆசிரியரான மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் உலகம் எவ்வாறு தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றதோ அதேபோல இஞ்ஞானச்சுடர் மலரும் உலகம் எங்கும் 11 வருடங்கள் கடந்து 12ஆவது ஆண்டில் காலடி வைத்து பிரகாசிப்பது சாதாரண விடயமல்ல என்பதையும் தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டார்.

ஆரம்பகாலத்தில் சிறிய அளவில் அரும்பித்த ஞானச்சுடர் சஞ்சிகையின் செயற்பாடு இவ்வருடம் புதுமெருகுடனும் பலவித வளர்ச்சிக் கட்டங்களுடனும் வெளிவந்துள்ளமை சிறப்பிற்குரிய ஒன்றே அகும். அத்துடன் இம்மலரின் சகல வளர்ச்சிகளுக்கும் ஆற்றங்கரை வேலவனின் அருளே என வியந்துகூறி தனது வெளியீட்டுரையை நிறைவுசெய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

12ஆவது ஆண்டில் காலடி வைக்கும் முதலாவது மலரை யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபரான திரு ஆ. சிவநாதன் அவர்கள் மதிப்பீடு செய்தார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையில் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் ஒரு பணியைக்கூட எம்மால் செய்யமுடியாது என்ற உண்மையை நாம் இன்று இந்த கௌரவிப்பு நிகழ்விலேயே கண்டுகொள்ள முடிகின்றதுடன், பணிகளில் தலையாய பணியாக ஞானச்சுடர் வெளியீடும் அன்னதானப் பணியும் விளங்குகின்றது என்றும் விளக்கிக்கூறினார்.

இஞ்ஞானச்சுடர் மலரில் இடம்பெறும் கருத்துக்கள் உலகம் முழுவதும் உள்ள அன்பர்களை சென்றடைகின்றது. அதுமட்டுமல்லாமல் ஞானச்சுடர் மலர் செல்லும் இடங்களில் எல்லாம் அவர்கள் சந்நிதியானை நினைப்பதற்கும் வணங்குவதற்கும் காரணமாகவும் விளங்குகின்றது.

2009ஆம் ஆண்டு தைமலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள ஆழமான கருத்துக்களை மண்டபத்தில் கூடியிருந்த கட்டுரையாளர்களுக்கும் முருகன் அடியார்களுக்கும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்கூறியதுடன் இம்மலரை போற்றிப்பாதுகாக்க வேண்டியது எங்கள் அனைவரினதும் கடமையே எனக்கூறி தனதுரையை நிறைவுசெய்தார்.

உ

# சுடர் தரும் தகவல்

ஈழத்தின் எந்தப்பகுதிக்குச் சென்றாலும் எல்லாத் திசைகளிலும் இந்து ஆலயங்களும் இந்துமத வழிபாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் காணமுடியும். தமிழ் மக்கள் மிகமோசமான நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ்மக்கள் தாம் வாழ்ந்துகொண்டிருக்கும் பகுதிகளில் எல்லாம் இந்து ஆலயங்களைப் பராமரிப்பதிலும் அவற்றின் நித்திய பூசைச் செயற்பாடுகள் போன்றவற்றை நிறைவேற்றுவதிலும் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது.

இவ்வாறான இந்துசமயச் செயற்பாடுகள் மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே இலங்கையில் இடம்பெற்றுவருவதை இட்டு நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைய முடிகின்றது. இன்று வரலாறுகள் மாற்றப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்ற சூழ்நிலையிலும் சைவசமயம் இவ்வாறு இலங்கையின் பல பாகங்களிலும் பேணப்பட்டுவருவதற்கு அதன் தொன்மையான வரலாறுதான் காரணமாக உள்ளது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஈஸ்வரங்கள் என்று சிவாலயங்கள் ஐந்து குறிப்பிடப்படுகின்றன. இராமேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம் என்று குறிப்பிடப்படும் இந்த ஐந்து சிவாலயங்களில் இராமேஸ்வரம் தவிர்ந்த ஏனைய நான்கு சிவாலயங்களும் இலங்கையில் அமைந்திருக்கும் சிறப்பை நாம் நோக்கமுடியும். இவற்றைவிட ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வராலயம், கொழும்பு பொன்னம்பல வானேஸ்வரர் ஆலயம் போன்ற பிரசித்திபெற்ற ஏனைய சிவன் ஆலயங்களையும் நாம் இவ்விடத்தில் மனம் கொள்வது பொருத்தமானது.

சிவாலயங்கள் மட்டுமின்றி ஏனைய தெய்வங்களுக்கான ஆலயங்களும் இந்த சிவன் ஆலயங்களைப்போன்றே இலங்கை முழுவதும் பரந்து விரிந்து காணப்படுகின்றன. இவ்வாறு இலங்கை முழுவதும் புராதன காலத்திலிருந்து காணப்படுகின்ற சைவ ஆலயங்கள் பல்வேறு வகையான சிறப்பு இயல்புகளைக்கொண்டு விளங்குகின்றன. இவ்வாலயங்களை வழிபட்டு ஆன்மீகஈடேற்றம் பெற்றுவருகின்ற சைவமக்களது தொன்மையும் அவர்களது வழித்தோன்றல்கள் தமது மூதாதையர்களது வழிபாட்டு முறைகளை தொடர்ந்து பின்பற்றி வருகின்ற பாங்கும் பாராட்டக்கூடிய அம்சங்களாகவே உள்ளன.

சகோதர மொழியைப் பேசுகின்றவர்கள்கூட வேறு பல விடயங்களில் வேற்றுமையுணர்வுகளை வெளிப்படுத்தினாலும் சைவ ஆலயங்களை வழிபடுவதிலும் அதனூடாக ஆன்மீக ஈடேற்றம் பெறுவதிலும் அக்கறை உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். தொன்மைமிக்க முன்னேஸ்வராலயத்தில் சகோதர இனத்தவர்களும் ஆசாரசீலர்களாக வந்து வழிபாடு செலுத்துவதை நாம் இன்று காணலாம்.

உ

# திருவருள் சுரக்க வேண்டினமே

ஆறொரு பாலும் கடலொரு பாலும்
அமைந்திடும் சந்நிதிக் கோயில்
ஆதிமூலத்திலே ஆறுமுகா வுன்
அழகிய வடிவேலும் பிறங்கும்

பேறென அடியார் பிறங்கிடும் வேலில்
பெரும் பெயர் உன்தனைப் போற்றி
பெரும் புகழோடு அலங்காரம் பாடி
பெட்புடன் அடிபணிந் திடுவோம்

ஆரணம் போற்றும் சந்நிதி யாயுன்
அற்புதத் தாலெமக் கினிய
அருள்வர மெல்லாம் பொருளெம் பிறங்க
அள்ளியே தந்தருள் பணிந்தோம்

தாரணி மார்பா சண்முக நாதா
சந்நிதி யமர்ந்திடு முருகா
சங்கரன் மகனே ஐங்கரன் சோதரா
அருளுடை யடியவர்க் கரசே

வாரணக் கொடியுடன் வள்ளிக்கொடி யோடு
மரகத மயிலேறி நீயே
வாதையுாய்ச் சேவற் கொடிவீசி யெம்முள்
வரவேண்டும் வரவேண்டும் ஐயா!

பூரண மோதகம் பாலமு தோடு
பொன்தினை மாவிளக் கிட்டோம்
புண்ணியனே யெங்கள் கண்ணியா வுன்தன்
புனிதமாம் சரணடி நாமே

சீரணி சந்நிதி சைவப் பேரவையோர்
செய்திடும் அன்னக் கொடையை
சிறப்புடன் என்றென்றும் செய்திட நீயே
திருவருள் சுரக்க வேண்டினமே.

*புலவர்மணி,*
*கலாபூஷணம்*
*ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார்*

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு செ. சம்பந்தநாதன்**
(லண்டன்)

**திரு N. உதயகுமார்**
(கனடா)

**திரு N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)

**திரு சொக்கலிங்கம் ஆசிரியர்**
(நாவற்குழி)

**திரு ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)

**திருமதி த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)

**கனம் அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ.ம. வித்தியாலயம்)

**திரு த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)

**திரு V.R. கனகராசா**
(சண்றைஸ் ஸ்ரூடியோ, சுண்ணாகம்)

**திரு ம. இரங்கநாதன் ஆசிரியர்**
(நெல்லியோடை, அச்சுவேலி)

**கனம் தலைவர்/ செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

**திரு சி. பத்மநாதன் J.P**
(கனன் போட்டோபிரதி நிலையம், பருத்தித்துறை)

**திரு V.S.P. குமார் (ஸ்ரீகுமார்)**
(உரிமையாளர், கல்பனா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி)

**திரு சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

**திரு சு. இராமச்சந்திரன்**
(ரலன்ற் கல்வி நிறுவனம், குடவத்தை, துன்னாலை)

**திரு வ. நந்தகுமார்**
(அம்மன்கோவிலடி, கரணவாய் தெற்கு)

**உரிமையாளர்**
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)

**திரு சி. மகாலிங்கம் J.P**
(மலையான் தோட்டம், கொற்றாவத்தை)

**திரு சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**கனம் தலைவர்/ செயலாளர்**
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
**திரு சு. செல்வரெத்தினம்**
(K.K.S. வீதி, சுண்ணாகம்)
**திரு உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
**திரு உரிமையாளர்**
(புகழ் ஸ்ரோர்ஸ், K.K.S. வீதி, சுண்ணாகம்)
**திரு ஐ. லோகஞானம்**
(பிரதம அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)
**திரு உரிமையாளர்**
(உதயன் விற்பனை நிலையம், சங்கானை)
**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்**
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
**திரு ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
**திரு செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**திரு V. அரியராசா**
(இளை வரைவல்லுனர், தொண்டைமானாறு)
**திரு அ. அரியகுமார் அதிபர்**
(யா/ சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)
**திரு க. இரத்தினசிங்கம் J.P**
(இளை. கிராம சேவையாளர், கரணவாய் மத்தி)
**திரு N. இரவீந்திரன்**
(இளை. மக்கள்வங்கி உதவிமுகாமையாளர், உரும்பராய்)
**திரு க. யோகேந்திரநாதன் G.S**
(தும்பளை, பருத்தித்துறை)
**திரு உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
**திரு செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
**திரு லயன் அ.த.க. கிருஷ்ணராஜா J.P**
(உரும்பராய்)
**திரு சி. பஞ்சலிங்கம்**
(ஞான வைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செல்வி ஷாலினி தேவேந்திரா**
(ஒஸ்கா வீதி, உரும்பராய்)

**திரு இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு, சுண்ணாகம்)
**திரு இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், யாழ்ப்பாணம்)
**திரு சி. குகதாசன்**
(தேவாலயவீதி, சங்கானை)
**திரு உரிமையாளர்**
(உதயா பேக்ஹவுஸ், வல்லைவீதி, சங்கானை)
**திரு N.K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**திரு உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
**திரு உரிமையாளர்**
(அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம், திருநெல்வேலி)
**திரு குமாரலிங்கம் செல்வரஞ்சன்**
(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)
**திரு சோ. புவனதாஸ்**
(சங்கானை)
**திரு த. விவேகானந்தன்**
(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)
**திரு S. வசந்தகுமார் G.S**
(உரும்பராய்)
**திரு ப. அருந்தவம்**
(பேரியந்தோட்டம், சுழிபுரம்)
**திரு இ. இராமஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**


காசுக்கட்டளை
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
**T.P.NO. 021-2263406**
**060-2219599**
**FAX.NO. 021-2263406**

காசோலை
**செ. மோகனதாஸ்**
**க. இல. 7342444**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

# ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பணிகள்

# (01.01.2009 - 25.02.2009 வரை)

- அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் ஓராண்டு தினத்தையொட்டி சந்நிதி ஆலயத்தில் சரீரத் தொண்டுகளை மேற்கொள்ளும் அடியவர்களுக்கு உடுபுடவைகள் 01.01.2009 அன்று வழங்கப்பட்டது.

- குடத்தனை பிரதேச சபையில் அமைந்துள்ள வலிக்கண்டி மீள்குடியேற்றத் திட்டத்தில் வெண்மதி முன்பள்ளி சிறுவர்களுக்கான சத்துணவுகளை 20.01.2009 அன்று தொடக்கம் ஒவ்வொரு மாதமும் வழங்கிவருகின்றது.

- வடமராட்சி பிரதேச சபை பிரிவில் யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை மாணவர்களின் திருக்குறள், பண்ணிசை, வாய்ப்பாடு போட்டிகளுக்காக பெறுமதிமிக்க பரிசில்கள் 23.01.2009 அன்று வழங்கப்பட்டது.

- மருதங்கேணி பிரதேசசபை பிரிவில் பல்கலைக்கழக மட்டத்திற்கு தெரிவாகிய 07 மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு அவர்கள் அனைவருக்கும் பெறுமதிவாய்ந்த ஆங்கில அகராதிகள் 30.01.2009 வெள்ளிக்கிழமை அன்று கையளிக்கப்பட்டது.

- இலக்கணாவத்தை உடுப்பிட்டியைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பத்தலைவி ஒருவருக்கு ஆச்சிரமத்தில் மாதாந்த உதவிப்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் உதவிப்பணம் வழங்கப்பட்டது.

- யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பாடசாலை தரம் 1ஐச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் அதிபரால் வழங்கப்பட்ட சீருடைத் துணிகளைத் தைத்து 13.02.2009 வெள்ளிக்கிழமை அன்று கையளிக்கப்பட்டது.

உ

# சிவனுக்கு உகந்த சிவராத்திரி

திரு ஆர்.வி. கந்தசாமி J.P அவர்கள்

சைவசமயத்தவர்களின் முழு முதற் கடவுளான சிவபெருமானுக்கு உகந்த சிவவிரதங்களுள் "சிவராத்திரி விரதம்" சிறப்புமிக்கது. ஆதியும் அந்தமும் இல்லாத, பிறப்பும் இறப்புமில்லாத, எதுவிதமான அவதாரங்களையும் எடுக்காத, "முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பெற்றியனாக" விளங்குகின்ற சிவபெருமான், ஆன்மாக்களுக்கு அருளைச் செய்பவர். சந்திரசேகரர், உமாமகேஸ்வரர், பிச்சாடனர், கல்யாணசுந்தரர், வீரபத்திரர், அர்த்த நாரீஸ்வரர், தட்சணாமூர்த்தி, இலிங் கோற்பவர் முதலான பல்வேறு மூர்த்தங்களில் வழிபடப்படுபவர். "வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளுபவர்"

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை: அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை" என்பது திருமூலர் வாக்கு. நாளெல்லாம் சிவனை நெஞ்சார வழிபடப்பெறும் நாளாக இருப்பினும், தொன்மை தொடங்கி இன்றுவரை 'சிவராத்திரி' முதலான சிறந்த நாட்கள் சைவசமய மரபில் புனிதமும் பொருளும் நிறைந்தவை ஆகத் திகழுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட சிவராத்திரிகள் இருப்பினும், மாசி மாதத்துக் கிருஷ்ணபட்சத்தின் சதுர்த்தசித் திதியில் வருகின்ற மகாசிவராத்திரியே உலகம் முழுவதிலுமுள்ள இந்துக்களால் போற்றப் படுகின்றது. சைவசமயிகளால் பக்தி சிரத்தையுடன் நோன்பிருந்து, நித்திரை விழித்திருந்து, சிவனைத் தியானித்து, வழிபாடியற்றப்படுகிறது.

**"செங்கணானும் பிரமனும் தம்முளே**
**எங்கு தேடியும் இங்கவர் காண்கிலார்**
**இங்குற்றே னென்று இலிங்கத்தே தோன்றினான்**
**பொங்குசெஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே"**

என்ற அப்பர் தேவாரத்தின்படி, "யார் பெரியவர்" என்ற அகந்தை கொண்டு போட்டியிட்ட பிரமனுக்கும் திருமாலுக்கும் எதிரே சோதிப்பிழம்பாய் எழுந்தருளி, அதன் அடிமுடி தேடியறிபவரே பெரியவரெனச் சொல்லிய சிவப்பிரமத்தின் அடியைக் காணப் பன்றியுருவில் திருமால் சென்றதும், அன்னப்பறவை வடிவில் முடியைக் காணப் பிரம்மா சென்றதும், இருவராலும் காண முடியாத தெய்வீக ஒளியின் பெருமிதம் சொல்லற்கரியது என உணர்ந்த பிரமனும் திருமாலும் தத்தம் தவறுணர்ந்து சிவனை வழிபட்டதும் இந்தச் சிவராத்திரி தினத்திலேயே எனப் புராணங்கள் கூறுகின்றன. இருவருக்கும் அழகிய சோதிலிங்க வடிவில் காட்சி கொடுத்தார் சிவபெருமான்.

அவருடைய அதே வடிவினை அடியவர்களும் வழிபட்டுப் பயனடையும் திருநாளே இச்சிவராத்திரியாகும். சிவராத்திரி விரத மகிமை பற்றிய பல கதைகளுள. அவ்விரதத்தினை அனுஷ்டித்துப் பயன்பெற்ற அடியார் வரலாறுகளும் நிறைய உண்டு.

காட்டில் மிருகங்களுக்குப் பயந்த வேடனொருவன் வில்வமரத்தில் ஏறியிருந்ததும், விழித்திருப்பதற்காக இரவுமுழுவதும் வில்வ இலைகளைப் பறித்துக்கீழே போட்டதும், அவை மரத்தின் கீழே இருந்த சுயம்பு இலிங்கத்தின் மேல்பட்டதும், அதன் பயனாக அந்தவேடன் முக்தி பெற்றதும் ஒருகதை. இன்னுமொரு கதையைப் பார்ப்போம்.

இமயமலைக்குப் பக்கத்தில், மரங்கள் அடர்ந்த காடொன்றில், வன விலங்குகள் யாவும் சுதந்திரமாய் வாழ்ந்து வந்தன. அங்கு வசித்துவந்த குரங்கொன்று, சாயந்தரவேளை நெருங்கி விட்டபடியால் மரத்தில் தூங்குவதற்காகத் தாவிப்பாய்ந்தபோது, அங்கிருந்த தேன் கூட்டைத் தட்டிவிட, தேன் கூட்டிலிருந்த தேனீக்கள் எல்லாம் குரங்கைக் கொட்டிட, வேதனையுற்ற குரங்கு கோபத்துடன் தேன்கூட்டைக் கசக்கிப் பிழிய, அதிலிருந்து வழிந்ததேன், மரத்தின் கீழுள்ள சுயம்புலிங்கத்துக்கு அபிஷேகமானது. மேலும், தேனீக்கள் கொட்டிய வலி காரணமாக நித்திரை கொள்ளாத குரங்கு, மரத்தின் இலைகளைப் பறித்துக் கீழே போட்டபோது, அவையும் இலிங்கார்ப்பணமாயின. காரணமறியாமலேயே குரங்கு செய்த சிவ அர்ச்சனையானது, பார்வதி சமேதராய்ச் சிவபெருமான் காட்சிகொடுத்து, அடுத்த பிறப்பில் முசுகுந்தச்சக்கரவர்த்தியாகச் சோழர்குலத்தில் பிறக்க அருளிய சிவனருட் பேறு குரங்குக்குக் கிட்டியது.

கந்தபுராண காப்பியத்தில் முசுகுந்தன் வரலாறு கூறப்பட்டுள்ளது. சிவபூசை செய்தபலனை அவன் அனுபவித்தான். வல்லமையும், நிதியும் வாய்ந்த மன்னனாக விளங்கினான். தேவருலகுக்குத் துன்பம் விளைவித்த வாலன் என்னும் அசுரனை அடக்கித் தேவேந்திரனுக்கு உதவினான். அதற்குப் பரிசாகத் தேவேந்திரன் அளித்த ஏழு சிவமூர்த்தங்களைப் பெற்றுக்கொண்டான். பூவுலகில் அவற்றைத் தாபித்து வழிபட்டான். உளிபடாமலேயே உருவான அந்தச் சிவமேனிகளை “விடங்கள்” எனக் கூறுவர். முசுகுந்தச் சக்கரவர்த்தி பிரதிஷ்டை செய்த “சப்தவிடங்கதலங்கல்” இன்று பூலோக சிவத்தலங்களாகப் பெருமைபெற்றுள்ளன. அறியாமலே செய்த சிவபூசைப் பயன் இவ்வளவு என்றால், அறிந்தே செய்யும் சிவபூசையின் பேறு பெரிதல்லவா? அதற்கு உகந்த நாளே சிவராத்திரி விரத நாளாகும்.

திருநந்தி தேவரிடம் இவ்விரதத்தின் மகிமை பற்றி உபதேசம் பெற்ற சூரியன், முருகன், விஷ்ணு, பிரம்மா, மன்மதன், யமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் ஆகியோர் சிவராத்திரி விரதத்தினை மேற்கொண்டு பல்வேறு வரங்கள் பெற்றுய்ந்தார்கள் எனப் புராணங்கள் கூறுகின்றன. இவையனைத்தும் சிவராத்திரி விரதமகிமையை எமக்கு உணர்த்துகின்றன. நாமும் ஆண்டுதோறும் வரும் சிவராத்திரி விரதத்தினை அனுஷ்டித்து, சிவனுடைய அருளினைப் பெறுவோமாக.

உ

(தொடர்ச்சி...

# 'ராம' பிரம்மம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்**

**கௌசல்யா ஸுப்ரஜா ராம**
**பூர்வ ஸந்த்யா ப்ரவர்த்ததே**
**உத்திஷ்ட நரசார் தூல**
**கர்த்தவ்யம் தைவ மாவந் நிகம்**

முதல்முதலாக ஸ்ரீராமனும், இளையபெருமாளும் யாகம் காக்கச்சென்றபோது தூங்கும்நேரம் விஸ்வாமித்திரர் சுப்பிரபாதம் பாடினார்.

கோசலை மனங்குளிர அவள் மணிவயிறு வாய்த்தவனே! காலை வேளையாகி விட்டது. நாம் தினம்தோறும் செய்யவேண்டிய சந்தியாவந்தனம் போன்ற கருமங்களைச் செய்யவேண்டும். எனவே நீ எழுந்தருள்வாயாக!

**"என்ன தவம் செய்தனை யசோதா**
**எங்கும் நிறை பரபிரும்மம் உனை அம்மா என்றழைக்க"**

என உருகுகிறார் ஒரு கவிஞர். அழகுக் கண்ணன் அம்மா என்பதைக் கேட்கும் பெருமை கொண்ட யசோதையின் செவிகளையே பேறுபடைத்தவை என்றார். அவனைத் தாங்கிய தேவகியின் கருப்பையை என்னவென்றுகூற....! கர்ப்பக்கிருஹம் என்று ஆலயத்திலுள்ள மூலவரின் சன்னதியைக் குறிப்பிடுவார்கள். தேவகியின் கருப்பை உண்மையிலேயே கர்ப்பக்கிருஹம்தான். ஆண்டவனைத் தன்னுள் ஏந்திய உறுப்பாயிற்றே. அதேபோன்று ராமனை ஈன்றெடுத்த கோசலையின் கருப்பையும் பெரும்பேறு பெற்றவை. கோசலை மனங்குளிர அவள் மணிவயிறு வாய்த்தவன் ஸ்ரீராமன்.

**மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்**
**செம்பொன்சேர்**
**கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத் தென்கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ.**

கோசலையின் குலமதலையை, தசரதனின் குலக்கொழுந்தை, சனகனின் மருமகனை, மைதிலிதன் மணவாளனை, பரதனுக்கு பாராளும்படர் செல்வம் தந்த வனை, ஆராவன் இளையவனோடு அருங்கானகமடைந்தவனை, சிற்றன்னை சொல் கொண்ட சீராமனை, சுற்றமெலாம் பின்தொடர தொல்கானகமடைந்தவனை அற்றவர்கட்கருமருந்தை, அயோத்தி நகர்க் கதிபதியை, வில்லுக்கு ஒருவனை, வாலியைக்கொன்று அரசை இளைய வான ரத்துக்களித்தவனை, மலையதனால் அணைகட்டி மதிள் இலங்கை அழித்த வனை, தேவர்களுக்கு அமுதம் அளித்த

வனை, தேவரையும், அசுரரையும் திசை களையும் படைத்தவனை, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை, காகுத்தனை குலசேகர ஆழ் வார் உள்ளம் உருகத் தாலாட்டி மகிழ்கிறார். ஆழ்வார்கள் எல்லோரும் ஸ்ரீராமனைப் பாடிப் பணிந்துள்ளார்கள்.

வால்மீகி இராமாயணம், கம்ப ராமாயணம் தவிர இன்னும் பல இராமா யணங்கள் உண்டு. சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற காப்பியங்களிலும் இராமா யணம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தனுக்கே அலங்காரம் செய்த சந்தக் கவியான அருணகிரிநாதரும் தமது அமுத மான திருப்புகழில் பல பாடல்களில் இராமா யணத்தைப் பாடியுள்ளார். அந்தப் பாடல் களில் மற்றவர்கள் சொல்லாத பல தகவல் களையும் சொல்லியிருக்கிறார். திருப்புகழில் முதற்பாடலிலேயே "முத்தைத்தரு" எனத் தொடங்கிய திருப்புகழிலே "பத்துத் தலை தத்தக்கணைதொடு" எனத் தொடங்கி இரா மாயணத்தை விவரிக்கிறார்.

முதலில் ராமரின் திருஅவதாரம். இராவணனின் கொடுமை தாங்காத தேவர் களின் வேண்டுகோளுக்கிணங்கி தசர தனுக்கு மகனாக வந்துதிக்கிறார் மகா விஷ்ணு. இதை அருணகிரிநாதர்,

"மேலை வானோ ருரைத் தசரதற் கொருபாலனாகி யுதித்து" என அழகுபடத் திருப்புகழில் சொல்கிறார். பாலனாகி என் றால் ஒப்பற்ற குழந்தை என்று பொருள். ராமரைக் கோசலாதேவி மிகுந்த அன்புடன் வளர்த்து வருகிறாள். ராமர் தள்நடையிட்டு நடக்க ஆரம்பித்தார். நடக்கத் தெரியாத குழந்தையை நடக்கச் செய்வதும், அது தடுமாறிக்கொண்டு நடந்துவருவதைக் கண்டு மகிழ்வதும் தாயின் செயல்! யசோதை கண்ணனின் நடையழகைக் கண்டு மகிழ்ந்து, "கண்ணா! நீயல்லனோ நடையழகன். உன்னைச் சதுர்கதி; என்று எல்லோரும் கூறுகிறார்களே! அந்த நடை யழகை, உன் மெல்லடித் தாமரைகளை தரைமீது மெல்லவைத்து 'யானைக்குட்டி போல்' நடந்துவா" சார்ங்கபாணி தளர்நடை நடந்துவா, அனந்தசயனனே, மாமணி வண்ணனே, வாசுதேவனே, முகில் வண்ணனே, திருமார்பனே, இருட்கேசனே, திரிவிக்ரமனே, செங்கண்மாலே, கேசவனே, ஆயர் குலத்தினில் வந்துதோன்றிய அஞ் சனவண்ணனே தாயார் மகிழ தளர்நடை நடந்துவா என்று கண்ணனின் நடையழகில் யசோதை மகிழ்ச்சியில் திளைக்கிறாள்.

கோசலை ஒருநாள் ராமரைப் பால் குடிக்க அழைத்தாள். அன்று என்ன வாயிற்றோ, ராமர் பால்குடிக்க மறுத்தார். கோசலை கெஞ்சினாள். ராமர் சற்றுத் தள்ளிப்போய் நின்று கோசலையைப் பார்த் தார். இந்தக் கட்டத்தை அருணகிரிநாதர் வர்ணிக்கும் அழகு காண்போம்.

**எந்தை வருக ரகு நாயக வருக**
**மைந்த வருக மகனே இனி வருக**
**என் கண் வருக எனதாருயிர் வருக**
**அபிராம இங்குவருக அரசேவருக முலை**
**உண்க வருக மலர் சூடிட வருக**
**எனப்பரிவினொடு கோசலை புகல வருமாயன்...**

எனத் "தொந்திசரிய" எனும் திருப் புகழில் பாடுகிறார். இந்தப் பாடலில் 'வருக' என்னும் வார்த்தை பத்துமுறை வருகிறது. மகாவிஷ்ணுவினுடைய அவதாரங்கள் பத்து.

**ஒருவன் குணாதிசயத்தை அவனது நண்பனை வைத்துக் கணிக்கலாம்.**

நமக்காகப் பத்துமுறை இறங்கிவந்த ஸ்வாமியை, அதனால்த்தான் அருணகிரி நாதரும் பத்துமுறை 'வருக' என அழைக் கிறார். தசாவதாரத்தில் ஒன்று ராமாவதாரம். 'வருமாயன்' என்பது அடுத்த அவதாரத்தில் ஆயர்குலத் தீபமாக, கண்ணனாக வரப் போகிறார் என்பதாகக் கொள்ளலாம். பல முறை அழைத்தும் ராமர் வராததால் பொறுமை மிக்க கோசலை பரிவோடு அவ ரைக் கூப்பிடுகிறாளாம். ராமரின் குழந்தைப் பருவத்தை அவ்வளவு அழகாகச் சொல் கிறார் அருணைமுனிவர்.

சூரியன் சுக்ரீவனாகவும், இந்திரன் வாலியாகவும் தோன்றி வானர அரசர்களாக இருந்தார்கள். பிரம்மதேவர் ஜாம்பவனாக சேனைகளுக்குத் தலைவனாகத் தோன் றினார். அக்கினிபகவான் நீலனாகவும், ருத்திரன் சிறப்புவாய்ந்த அனுமனாகவும் அவதரித்தனர். ஒப்பில்லாத தேவர்களெல் லாம் ராமருக்கு உதவ இப்படி பூமிக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கெல்லாம் தலைவராக இருந்த ராமர் அசுரர்களை அழித்தார்.

ஸ்ரீ ராமரின் இளமைப் பருவத்தில் ஒப்பற்ற தவசியான விஸ்வாமித்திர முனிவர் வந்தார். அவருடைய யாகத்தைக் காக்க ராமலட்சுமணர் அவருடன் காட்டுக்குச் சென்று யாகத்திற்குத் தீங்குசெய்யும் தாட கையை ராமர் வதம் செய்கிறார். தாடகை யின் கோபம், ராமர் எய்த அம்பின் வேகம், யாகத்தை ராமர் கட்டிக்காத்த வேகம் திருப் புகழில் பாடியுள்ளார். ராமர் அகலிகைக்கு அருள் செய்ததை அருணகிரிநாதர் பல பாடல்களிலே சொல்லியிருக்கிறார்.

**க(ல்)லின் வடிவமான**
**அகலிகை பெ(ண்)ணான**
**கமலபத மாயன் (திருப்புகழ்)**

என்று ராமரின் திருவடித் தாமரை களைப் புகழ்கிறார் அருணகிரிநாதர். ஸ்ரீராம பிரானின் மென்மையான, தாமரைப் பாதங் கள் பட்ட இடங்களெல்லாம் பட்டமரம் ஒன்று கொத்துக் கொத்தாக பூக்கள் பூத்துக் குலுங்குவதைப்போல் துளிர் விட்டுப் பிரகாசிக்கும். கல்லின்மீது ஸ்ரீராமபிரானின் பாதம் பட்டவுடன் கணவரின் சாபத்தால் கல்லாகிக் கிடந்த அகலிகை பாப விமோ சனம் பெற்றாள். சம்சார சாகரத்தில் மூழ்கித் தத்தளிக்கும் நமக்கு பகவானின் பாதக் கமலங்களே சரணம். (தொடரும்.....

## பலியை நிறுத்திய வள்ளலார்

சென்னை ஏழு கிணறுக்கு அருகிலுள்ள வீரசாமி தெருவில் துலுக்காணத்தம்மன் கோயில் இருக்கிறது. பலவருடங்களுக்கு முன்பு அந்தக் கோயிலில் ஆடுகளையும் கோழிகளையும் பலிகொடுத்து வந்தார்கள்.

வள்ளலார் அந்தத் தெருவழியே வந்துகொண்டு இருந்தபோது ஓர் அன்பர் அவரிடம், "அம்மனைப்பற்றி நீங்கள் பாடவேண்டும்" என்று சொன்னார். உடனே வள்ளலார், "கோயிலில் உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்தினால் பாடுகிறேன்" என்றார்.

அம்மன் கோபித்துக் கொள்வாளே என்று அஞ்சியவர்களிடம் வள்ளலார், "அம்மன் நல்லவள் உயிர்க்கொலை செய்து நீங்கள் வழிபடுவதைத்தான் அவள் விரும்பமாட்டாள்" என்று கூறினார். மக்களும் "இனி நாங்கள் பலிகொடுக்கமாட்டோம்" என்றனர். உடனே வள்ளலாரும் துலுக்காணத்தம்மன் மீது "பஞ்சரத்தினம்" என்று ஐந்து பாடல்கள் பாடினார். அன்றுமுதல் அந்தக்கோயிலில் ஆடு கோழிகளை பலியிடுவது நிறுத்தப்பட்டது.

*நல்ல மனச்சாட்சி மென்மையான தலையணை.*

உ

# எத்தனைகோடி துன்பம் வைத்தாய்!

**திரு ஆழ்கடலான் முருகவேள் பரமநாதன் அவர்கள்**

இப்புவியின் சுழற்சி மிலேனியத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இக்கால வேளை கணனியுகமாகப் பேசப்படும் உலகமே நெருங்கிவிட்டது, சுருங்கிவிட்டது என்பர். குக்கிராமங்கள் பூமண்டலத்தில் முன்நிற்கின்றன. விஞ்ஞான, இயந்திர யுகமிது. தொலைதொடர்பு சாதனங்கள், மின்னஞ்சல்கள், ஈமெயில்கள் சுடச்சுடச் செய்திகளைப் பரிமாற்றம் செய்கின்றன. நாகரிகம் கொழிக்கும் இப்பூப்பந்தில் எத்தனைகோடி சீவராசிகள். அறுநூறு மில்லியனையும் தாண்டிய மக்கள் சமுத்திரம். புதுமை சாதிக்கும் இம் மனித கூட்டத்தின் மத்தியில் எத்தனை மனித ஓலங்கள், அவதிகள், முனகல்கள், எங்கெங்கும் நிம்மதியில்லை, அமைதியில்லை, சாந்தம் சமாதான வாழ்வில்லை, கண்ணீரும் கம்பலையும்தான். நெற்றியிலே கவலைக் கோடுகள் முகத்திலே துக்கத்தின் சாயல்கள். இடைஞ்சல்கள், உயிரிழப்புக்கள். காயுருத, கனியுருத, பூவுருத, அரும்புருத, கலந்துருக என்ற மரண அறிவித்தல்கள். மனிதாய நலம் அவல ஓலங்களின் நுகர்வுகள். காலங்கெட்டுப்போனதென்றும், கலியுகத்தின் கோலமென்று பரவலாக எல்லாரும் பேசிக்கொள்கிறார்கள். போரிடும் உலகத்தை வேரொடுகளைவோமென்று கவிபாடியென்ன? மனிதகுலமே இன்னலிற் தத்தளிக்கிறது. மேற்கும் கிழக்கும் மனித இனம் சிறந்தது எனப் பேசிக்கொள்வர். ஆனால் புனிதமான வாழ்க்கையினின்று புழுப்போல் நெளிகிறார்கள். இதற்கான காரணிகளைக் கண்டு அவற்றினின்றும் விடுபட ஆவன செய்தல் மக்கட் சமுதாயத்தின் கடமையாம்.

மகாகவி பாரதியார் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்- அத்தனையும் வண்ணக்களஞ்சியம்" (9- இறைவர்) எனப் பாடினார். ஆனால் அவர் கவலையை எண்ணி எண்ணி நெடுந்தூரம் நடந்தார். கருதிக் கருதிக் கவலைப்படுவார். கவலைக் கடலைக் கடியும் வடிவேல் எனப்பாடி விநாயகரிடம் எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி- "மனத்திற் சலனமிலாமல் மதியில் இருள் தோன்றாமல்" என்று விண்ணப்பம் செய்தார். கண்ணன் பற்றிய இறுதிப்பாடலிலே

**பொன்னை உயர்வைப் புகழைவிரும்பிடும்**
**என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று**
**நின்னைச் சரணடைந்தேன்**

சுதந்திரமானவனாக இரு, எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.

**மிழமையு மச்சமும் மேவி யென்நெஞ்சில்**

**குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று**

**நின்னைச் சரணடைந்தேன்**

**கண்ணன் பாட்டு 23**

மற்றவர் துன்பங்கண்டு தான் வேதனைப்பட்டார்.

**நெஞ்சு பொறுக்கு திலையே– இந்த**

**நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்**

**அஞ்சி யஞ்சிச் சாவார் – இவர்**

**அஞ்சாத பொருளில்லை அவனியிலே**

பாரதஜனங்களின் தற்காலநிலை

**தேடிச் சோறுநிதந்தின்று – பல**

**சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்**

**வாடித் துன்பமிக உழன்று – பிறர்**

**வாடப் பல செயல்கள் செய்து – நரை**

**கூடிக் கிழ்ப்பருவ மெய்தி – கொடுங்**

**கூற்றுக் கிரையெனப்பின் மாயும் – பல**

**வேடிக்கை மனிதரைப் போலே – நான்**

**வீழ்வே னென்று நினைத்தாயோ?**

**யோகசித்தி 4**

கழிந்தகால நிகழ்வுகளை மனதிலே சுமந்து கவலைப்படுவதும், கழிவிரக்கப்படுவதும் மனிதஇயல்பு. எனவே கழிந்ததற்கிரங்கேல். கழிவிரக்கப்படேல் என்ற அறிவுரை அறிஞர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இதை மனதிலே உள்வாங்கிய பாரதியார் சிந்தித்து ஓர் பாடல் தந்துள்ளார்.

**சென்றதினி மீளாது மூடரேநீர்**

**எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து**

**கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து**

**குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டாம்**

**இன்றுபுதி தாய்ப் பிறந்தோம் என்று நீவிர்**

**எண்ண மதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**

**தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்**

**தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பிவாரா**

**வேதாந்தப் பாடல்கள் 20 (சென்றதினி)**

கவலை யாரைத்தான் விட்டது. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தந்த நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் கவலையில் ஆழாமல் இருக்க ஒரு பாதை சொல்லப்படுகிறது.

**என்றும் துயர்உ ழக்கும் ஏழைகாள்**

**நீங்கள் இளங்**

**கன்று போல் துள்ளிக் களித்து இரீர்**

**அன்று நடம்**

**பணம் வந்துபோகும், நல்லொழுக்கம் வந்து வளரும்.**

**இட்ட புயங்கத்து இருசரண மேசரணென்று**
**அட்ட புயங்கத் தாற்கு ஆளாய்**

***பொருள்:-***

எப்போதும் வருந்துகின்ற அறிவில்லாத மக்களே! நீங்கள், முற்காலத்தில் காளியன் என்னும் சர்ப்பராசன் மீது கூத்தாடிய எம்பெருமானது இரண்டு திருவடிகளே தஞ்சமாகும் என்று உறுதிகொண்டு, திரு அட்ட புயங்கம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருமாலுக்கு அடிமைப்பட்டு, இளங்கன்று போலப் பயமறியாமல் துள்ளிக்குதித்து அகமகிழ்ந்து இருங்கள்.

தவராஜசிங்கமாயும், சிவராஜசிங்கமாயும் திகழ்ந்த தாயுமான சுவாமிகள் அனுபவித்து ஓர் பாடல் இயற்றியுள்ளார்.

**சிந்தைத் துயரென் றொருபாவி**
**சினந்து சினந்து போர்முயங்க**
**நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை**
**நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்**
**எந்தப் படியுன் அருள்வாய்க்கும்?**
**அந்தப் படிநீ அருள் செய்வாய்**
**பந்தத் துயரற் றவர்க் கெளிய**
**பரமானந்தப் பழம் பொருளே**

**தன்னையொருவர் 7 தாயுமானவர்**

பந்தத்துயர்- பிறவியால் வந்த துன்பத்தினை, அற்றவர்க்கு- நீங்கினவர்க்கு, எளிய- எளியனாகிய, பரமானந்தம்- மேலான இன்பத்தைத் தருகின்ற, பழம் பொருளே!- பழைய பொருளே! சிந்தைத்துயர் என்ற - மனோதுக்கமென்கிற, ஒரு பாவி- ஒருபாவி, சினந்து சினந்து- கோபித்து, கோபித்து, போர்முயங்க- போரினைச் செய்ய, நிந்தைக்கு இடமாய்- நிந்தனைக்கிடமாகி, சகவாழ்வை- பிரபஞ்ச வாழ்க்கையை நிலை என்று நிலையான தென்றறிந்து, நிற்கின்றேன்- பற்றுள்ளவனாய் நிற்கின்றேன், உன்- தேவரீரது, அருள்- திருவருள் எந்தப்படிவாய்க்கும்- எவ்வாறு கிருபை செய்குவாய் அவ்வாறு அருள்புரிவாயாக.

மனிதவாழ்வின் ஒவ்வொரு கணமும் போவது ஒவ்வொரு நாளுக்குச் சமம். நாளென ஒன்று போற்காட்டி உயிர் ஈரும்வாள் என்றார் வள்ளுவனார். வறுமை, நோய், துன்பம் போன்ற பல இன்னல்களைத் தாண்டியே நம்வாழ்வை மேற்கொள்ளவேண்டியுளது. கொடிது கொடிது வறுமைகொடிது என்றார் ஔவையார். ஏன் அஃகியகன்ற ஆன்றோரில் ஒருவரான அபிராமிப்பட்டர் மனித வாழ்வின் நெருக்கடிகளை வரிசைப்படுத்தி நமக்குக் காட்டுகிறார் இப்படி.

**மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த**
**வெகுளி யானதுந் துரத்த**
**மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிக**
**வேதனைகளுந்து ரத்த**

*நெற்றியைக் காயப்படுத்துவதைவிட முதுகை வளைத்துச் செல்வது மேல்.*

**பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்தமிகு**
**பசியென் பதுந்துரத்த**
**பாவந் துரத்த பதிமோகந் துரத்த**
**பலகா ரியமுந் துரத்த**
**நகையுந் துரத்த ஊழ்வினையுந் துரத்த**
**நாளும் துரத்த வெகுவாய்**
**நாவரண் டோழகால் தளர்ந்திடும் என்னை**
**நமனுந் துரத்து வானோ?**
**அகிலஉல கங்கட்கும் ஆதார (தெய்வமே)**
**ஆதிகடவூரின் வாழ்வே**
**அமுதீசா ஒருபாகம் அகலாத சுகபாணி**
**அருள்வாழி! அபிராமியே!**

**அபிராமி பதிகம்.**

**புண்ணிலே புகுந்த கோல் எனத் துயரம்**
**புகுந்தெனைக் கலக்கியபோதும்**
**கண்ணிலே எனது கருத்திலே கலந்த**
**கருத்தனே நின்றனை அல்லால்**
**மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை**
**மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்**
**நண்ணிலேன் வேறென் றெண்ணிலேன் உன்னையே**
**நம்பினேன் கைவிடேல் எனையே**

**அருட்பா ஆயிரம் பக். 227**

அது அலைபோல் வரும் துன்பங்களுக்கு முகம்கொடுத்து எதிர்த்துப் போராடி **வெற்றி** காண்பதே வாழ்வாகும்.

**ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்**
**பாயாதோ ஐயா பகராய் பராபரமே.**

**தாயுமான சுவாமிகள்.**

## பரம்பொருளாம் எங்கள் சிவனார்

ஆனந்த வடிவாய் நடராசர் உருவிலே
ஐந்தொழில் புரிபவர் அடியவர்க் கருள்பவர்
ஞான வடிவாய் தெட்சணா மூர்த்தியாய்
நாடிடும் அடியவர்க் குபதேசம் செய்பவர்
வானவர் போற்றிட உமையுடன் வந்து
மங்கள வடிவாய் மக்களுக் கருள்பவர்
மோன வடிவாய் முழுமுதற் பொருளாய்
முத்தியைத் தருபவர் எங்கள் சிவனார்

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்*

**இயற்கையோடு போராடி வெற்றிகாண முடியாது.**

உ

# சைவ பாரம்பரியங்களுள் மனித விழுமியங்கள்

திரு த. சுகந்தன் அவர்கள்

மனித வாழ்வினை மேம்பாடானதெனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே மனித விழுமியங்கள் எனப்படுகின்றது. நாம் எமது வாழ்விற் பேணி வளர்க்கவேண்டிய உயர்ந்த பண்புகள் பல உள்ளன. அவற்றுள்ளே செய்நன்றி மறவாமை, பணிவு, நேரந் தவறாமை என்னும் மூன்று விழுமியங்கள் முக்கியமானது.

சிவபெருமான் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர். அநாதி காலம் தொடக்கம் ஆணவமலத் தொடர்புடைய ஆன்மாக்கள் அம்மல நீக்கம் பெற்று உய்யும் பொருட்டு அவர் எமக்கு இவ்வுடம்பையும் கருவி காரணங்களையும் உலகங்களையும் நுகர்வுப் பொருட்களையும் தோற்றுவித்துத் தந்துள்ளார். அத்தனையுந் தந்த இறைவனுக்கு நாம் கடன்காரர்களாக இருக்கின்றோம். அதனால் காலை எழுந்தவுடன் நாம் இறைவனை மனத்தால் நினைத்து, வாக்கினால் துதித்து, உடம்பினால் வணங்குவது நமது கடமை. நாம் எந்த நாளும் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனும் அதுவாகும்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்னும் திருக்குறளிற் குறிப்பிடப்படும் செய்நன்றி கொன்றார்க்கு எடுத்துக்காட்டாக நாம் இருக்கமுடியாது. உயரிய மானிடப் பிறவியையும் இன்னோரன்ன பல கருவிகளையும் நமக்குத் தந்த தலைவனை எந்நாளும் ஒரு கணநேரமாயினும் சிந்திப்பதும் வந்திப்பதும் நம் கடனாகும். "தலையே நீ வணங்காய்" என்றார் அப்பர். அவன் தந்த தலையினால் அத் தலைவனை ஒருநாளில் குறைந்தது ஒரு தடவையாவது வணங்குதல் வேண்டும். அதுபோலவே அவன் தந்த கரங்களினால் கடிமலர் தூவித் தொழுதல் வேண்டும். அவ்வாறு இறைவணக்கம் புரியாதவன் தன் கடமையை மட்டுமன்றி நன்றியையும் மறந்த பாவத்தினால் பெருந் துன்பமுறுவான். இறைவணக்கம் புரியாதவன் படும் இன்னல்களைப் பின்வரும் பாடல்களில் பட்டினத்தடிகள் எடுத்துரைக்கின்றார்.

**"ஆற்றோடு தும்பையணிந்தாடும் பலவாணர்தமைப்**
**போற்றாதவர்க் கடையான மூண்டேயிந்தப் பூதலத்திற்**
**சோற்றாவி யற்றுச்சுக மற்றுச் சுற்றத் துணியுமற்றே**
**யேற்றாலும் பிச்சைகிடையாமலே ஏக்கற் றிருப்பார்களே"**

பதற்றம் பலவீனத்திற்கு அறிகுறி, அவசரம் அறிவிழுப்பிற்கு அறிகுறி.

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ நினைப்பவன் இறைவனை இயலுமான வரையில் வணங்குதல் வேண்டும். இறைவனுக்கு நன்றியறிதல் உடையவனாக வாழும் ஒருவனுக்கே கண்கண்ட தெய்வங்களான தாய் தந்தையர்க்கும் அவர்கள் செய்த தியாகங்களை நினைத்துத் தன் கடமைகளைச் செய்யமுடியும். எனவே எம் வாழ்நாள் முழுவதும் செய்நன்றியறிதல் என்னும் விழுமியப் பண்பைப் பேணிக் கடைப்பிடிக்க வேண்டும்.

மனிதனுடைய நற்குணங்களில் நனி சிறந்து விளங்குவது பணிவுடைமை ஆகும். கல்வி, கேள்வி, செல்வம், பட்டம், பதவி முதலிய பல இருப்பினும் பணிவு என்ற ஒன்று இல்லையானால் ஒருவனிடம் எவை இருந்தும் பயனில்லை. உண்பதற்கு உகந்ததாக ஆக்குவதற்கு உப்பு இன்றியமையாதது போல மனித வாழ்விற்குப் பணிவுடைமை இன்றியமையாதது. "எல்லார்க்கும் நன்றாம் பணிதல்" என்றார் வள்ளுவர். பணிவுடையார் தமது வாழ்விலே சிறப்புறுவார்கள். ஆயினும் பணிவு என்ற அந்த அரியகுணம் எம்மில் அநேகருக்கு அமைவதில்லை. அதனால் எமது மனத்தில் அகங்காரம் குடிகொள்ளுகிறது. கல்வி, செல்வம், பட்டம், பதவி, கௌரவம் என்று இன்னோரன்ன எமது தேட்டங்கள் எம் மனதில் உள்ள அகங்காரத்தை வளர்க்கின்றன அத்தகைய அகங்காரம் எம்மை விட்டு அகலும்வரை பணிவுடைமை என்னும் விழுமியப்பண்பை எம்மாற் பெறமுடியாது. எமது ஆன்மா முத்திப்பேறு அடைவதற்கு முக்கிய தடை அகங்காரமே என்றும், அகங்காரம் அகன்றாலே ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிபிறக்கும் என்றும் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. நேரந்தவறாது கருமம் ஆற்றும் பண்பு பேணி வளர்க்கப்பட வேண்டும். அதனாலேதான் "அன்று அறிவாம் என்னாது அறஞ்செய்க" என்றார் வள்ளுவப் பெருந்தகை. எமது சமயம் உணர்த்தும் முக்கிய அம்சமாக தருமம்-கடமை உள்ளது. நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என ஆறுமுகநாவலர் கூறிய கூற்றில் அத் தர்மம் வலியுறுத்தப்படுகிறது. நேரந்தவறாமற் கருமம் ஆற்றும் பண்பினை நாம் கடைப்பிடிக்காத காரணத்தால் உடம்பு கிடைத்ததன் பயனில் நாட்டம் இல்லாதவர்களாய் பயனற்ற செயல்களில் ஈடுபடுகின்றோம்.

இந்த உடம்பு எமக்குக் கிடைத்ததன் பயனை உடம்புக்குள் உள்ள உத்தமனைக் கண்டு பிறவியின் பயனைப் பெற்றுவிட வேண்டும் என்று பின்வரும் பாடல்களில் திருமூலர் சித்தரித்துக் கூறுகின்றார்.

**"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை யறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே யர்ச்சிக்கத் தானிருந்தானே"**

எனவே உடம்புள்ள போதே உடம்பிலான பயனைப் பெறுவதற்கு சிவயோகத்தைப் பெற்று உய்தல் வேண்டும்.

**மனிதர்கள் உயிரோடு இருக்கும்வரையில் அவர்களுடைய மதிப்புத் தெரிவதில்லை.**

உ

# சைவசமய பக்தி இலக்கியங்களின் அடிப்படைகளும் பயன்பாடுகளும்

திரு வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்

உலகச் சமயங்களின் வரலாறுகள் மிகவும் சுவாரஸ்யமானவை. சமூகம் சமயத்தைச் சார்ந்தே வளர்ந்துவந்துள்ளது. வரலாறு, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், கலைகள், கல்வி, கண்டுபிடிப்புக்கள் என்னும் துறைகளினூடே மனுக்குலத்தின் மகத்தான தொடர் வரலாற்றை அறிய முடிகிறது. சமய இலக்கியங்களின் அடிப்படைகளையும், பொருள் மரபுகளையும், அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்துகொள்வதற்குச் சமயவரலாறு, இலக்கிய வரலாறு நாயன்மார்வரலாறு, விக்கிரகவியல்வரலாறு என்பன பெரிதும் துணைபுரியவல்லன. எனவே சமய பக்தி இலக்கியத் தோற்றத்திற்கான பின்னனிகளைச் சமயங்களின் ஒளியிலே அறிவதற்குரிய சிந்தனைகளை இச்சிறிய கட்டுரையிலே நோக்குவோம்.

உலக மதங்களின் வரலாறு (1) என்னும் நூல் இந்துமதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம், புத்தமதம், சமணம், சீக்கியமதம், யூதமதம், பார்ஸிமதம் என்னும் மதங்கள்பற்றி ஆராய்கிறது. 'இந்து மதம்' என்னும் முதற் கட்டுரையில் மேல் வருமாறு எழுதியுள்ளமை நோக்கற்பாலது.

**"தனி ஒரு மனிதனின் பெயரால் குறிப்பிடாமலும்**
**எந்த ஒரு கடவுளின் பெயரால் குறிப்பிடாமலும்**
**மக்கள் சமுதாயத்தின் பெயரால் குறிப்பிடப்படும்**
**பெருமை பெற்றது இந்துமதம் "என்றும் நிரந்தரமானது"**

என்ற கருத்தில் சநாதன மதம் என்றும், வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால் வைதீகமதம் என்றும், பிராமணங்கள் பின்பற்றுவதால் பிராமண மதம் என்றும், உபநிடதக் கருத்துக்களைக் கைக்கொண்டு நடப்பதால் உபநிடதமதம் அல்லது வேதாந்த மதம் என்றும் இதைக் கூறுகின்றனர். இந்துமதம் மதமாற்றத்தில் நம்பிக்கை கொள்வதில்லை. எந்தமதமும் உண்மையாக வாழ்ந்தால் நன்மையைத் தரமுடியும் என்று அது நம்புகிறது. இந்துமதத்திற்குத் தனிஒரு ஸ்தாபகர் கிடையாது.

(2) சிந்துவெளியிலே கண்டுபிடிபட்ட சிந்துவெளிச் சின்னங்கள் சைவ சமயத்தின் அடிப்படைகளை வெளிப்படுத்தின. ஹரப்பாவின் பழைய நாகரிகச் சின்னங்கள் சைவச்சார்புள்ள நாகரிகமே அங்கு நிலவியது என்பதை மெய்ப்பித்துள்ளன. யோகிகளின் உருவங்கள், பசுபதி, சிவனின் சிற்பங்கள், மரம், பாம்பு இவற்றைப் பூசைப்பொருட்களாகக் காட்டுகின்ற அடையாளங்கள், தேவி, சக்தி வழிபாட்டின் சின்னங்கள் போன்றவை காணப்படு

கின்றன. இவை இந்துமதத்தின் அங்கமான சைவவழிபாட்டுமுறைகளின் ஆதி உருவங் களாக இருக்கவேண்டும் என்று எண்ணச் செய்கின்றன.

இந்துசமய நூல்கள் சுருதி, ஸ்மிருதி எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

(3) வேதங்கள் அறிவுநூல்கள். வேதங்களில் மந்திரங்கள் உள்ளன. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவே வேத இலக் கியங்கள். இருக்கு வேதத்தில் 16552 மந்திரங்கள் உள்ளன. யசுர் வேதத்தில் 2086உம், சாமவேதத்தில் 1875உம் அதர் வண வேதத்தில் 5987 மந்திரங்களும் உள் ளன. சைவசமயத்தின் மிகப்பழைய பெருமைபெறும் இலக்கியங்கள் வேதங் களாகும். இருக்குவேதம் மிகப்பழைய மந்திரங்களைக் கொண்டது. இது கிருஷ்ண த்வைபாயனர் என்ற வேதவியாசரால் பலருக்குச் சொல்லித்தரப்பட்டது. இருக்கு வேதம் துதிகளின்தொகுதி யசுர் வேதத்தில் வேள்விபோன்ற சடங்குகளுக்குரிய விதிகள், முறைகள் அவற்றின் பயன்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. உலக மதங்களெல்லாம் இசையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது பேருண்மை. ஆனால் சைவ இலக் கிய வரலாற்றிலே இசையுடன்கூடிய வேத மாகச் சாமவேதம் அமைந்துள்ளது. வேதங் களை அருளிச்செய்தவர் இறைவன். வேத வியாசரால் நான்கு வேதங்களாக வகுக்கப் பட்டன. சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என்று வேதப்பகுதிகள் உள்ளன. வேதவழிபாட்டு மரபே இன்றும் சைவத்திருக்கோயில்களில் பாராயணமுறைமையுடன், ஆகமவழிபாட்டு முறைமையாக உண்டு. சைவசமய இலக்கியங்களுட் புராணங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. புராணங்கள் 18. திருமுறை வரலாற்றிலே 'பஞ்சபுராணம்' என்னும் மரபில் பெரியபுராணம் பன்னிரண் டாந் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. இதிகாசங்கள் எனப்படுபவை மகாபாரதம், இராமாயணம் என்பன.

சமூகத்தில் மனிதன் ஆற்றவேண் டிய கடமைகளை வகுத்துத் தருபவை, தருமசாஸ்திரங்கள். 'ஸ்மிருதி' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'நினைவு' என்று பொருள். தருமசாஸ்திரங்கள், இதிகாசங் கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசனங் கள் ஆகியவை ஸ்மிருதிகளாகும். மனு ஞாக்யவல்கியர், பராசரர் போன்ற பெரியோர் கள் இந்த நூல்களை இயற்றியுள்ளனர். திருவள்ளுவர் போன்றோரும் ஸ்மிருதிக் காரர்களே.

ஆகமங்கள் கடவுளின் திருவுருவ வழிபாட்டுக்குரிய வழிகளைக் கூறும் நூல் கள்.(4) தந்திரங்கள் என்பன மந்திரங் களுக்கு ஒத்து உடலின் உறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளும் கோலங்களையும் பொருட்களையும் வைக்கவேண்டிய இடங் கள், முறைமைகளைக் குறிக்கும் தந்திர சாஸ்திரங்கள் கூறும் சில யோகமுறைகள் கிரியைகள் முதலியன பயங்கரமானவை. சரியாகப் பின்பற்றாவிட்டால் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே இவை அதிகமாகப் புழக்கத்தில் கிடையாது.

பொதுவாக இந்து மதத்தை அறிய பிரஸ்தானதிரயங்கள் எனப்படும் உபநிஷதங்கள், பிரம்மசூத்திரங்கள், கீதை இம்மூன்றும் அடிப்படை நூல்களாகும்.

(5) இந்துமதத்தில் எல்லாவற்றிற்குமே மதிப்புண்டு. வேதாந்தத்திற்கு அளிக்கப் படும் பெருமை யோகிகளுக்கு உண்டு. பக்தர்களுக்கும் உண்டு. சிவனை வழிபட் டால் கிடைக்கும் சித்தி பலன்கள்-

*உன்னால் தீபம் ஏற்றப்படுமாயின் நீ தீக்குச்சியாய் இருப்பது தவறேயில்லை.*

விஷ்ணுவையோ சூரியனையோ வழிபடுபவனுக்குக் கிடைக்கும். பக்தனுக்குள்ள பெருமை பொதுநல ஊழியனுக்கும் உண்டு. அனைவருக்கும் ஒரே நிபந்தனை தான். உண்மையாக முறைப்படி வழிபட வேண்டும். அது ஒன்றுதான் உரைகல். மறுபிறவி, விதிப்பயன், சாதி முறைமை, வர்ணாச்சிரமம், தவப்பயன் என்பன சரியாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும். ஞான மார்க்கம், பக்திமார்க்கம் என இரு மார்க்கங்கள் உள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நெறிகளும் சைவசமயத்தில் உண்டு.

பக்திமார்க்கமே உணர்ச்சிகொண்ட மனிதர்களுக்கு மிகவும் பயன்படுவதாகும். (6) பக்தியின் வகைகள் ஒன்பது வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. சிரவணம் - ஆண்டவனின் கதை, லீலைகள், புகழ், பெருமை கேட்டல்
2. கீர்த்தனம் - அவற்றைச் சொல்லல்
3. ஸ்மரணம் - அவற்றை எண்ணியிருத்தல்
4. பாதஸேவனம் - ஆண்டவனுக்கு சேவை செய்தல்
5. அர்ச்சனம் - பூசைசெய்தல் (அர்ச்சித்தல்)
6. வந்தனம் - ஆண்டவனைத் துதித்தல்
7. தாஸ்யம் - அவனுக்கு அடிமை காத்தல்
8. சக்யம் - அவன் நட்பை வேண்டிப்பெறல்
9. ஆத்மநிவேதனம் - ஆத்மசமர்ப்பணம்.

இவற்றை எதைமேற்கொண்டாலும் அது பக்திதான். "கர்மமார்க்கம்" என்று சைவத்தில் உண்டு. தெய்வத்தை எந்த உருவத்தில் கண்டாலும் அதை வழிபடுகின்றவன் தான் செய்யும் காரியங்களில் தாம் என்ற எண்ணம் நீத்து பயனில் விளைவையும் மறந்து செயலாற்றும் நோக்கே "கர்மமார்க்கம்" என்பதன் அடிப்படை.

'யோகமார்க்கம்' என்பது யோகம் பெற்றுச் சித்திபெற்ற சித்தர்கள் பற்றியது. இவர்களின் பேச்சும் நடத்தைகளும் நம் பகுத்தறிவுக்கு விநோதமாகவும் விரோதமாகவும் காணப்படும். 'அட்டாங்கயோகம்' பழகிப்பயன்பெறுவது மிகவும் கடினமானதாகும்.

'சித்தாந்தம்' அற்ற சம்பிரதாயம் உயிரற்ற உடல்போலாகும். சைவமதத்தில் துவைதம், வைணவம் (விசிஷ்டாத் வைதம்), சைவசித்தாந்தம், வேதாந்தம் என்கிற அத்வைதம் என்ற நான்கு கோட்பாடுகள் உள்ளன. துவைதம் என்றவுடன் 13ஆம் நூற்றாண்டில் முற்கூறில் வாழ்ந்த ஸ்ரீ மத்துவாச்சாரியார் பெயர் நினைவுக்கு வருதல் வேண்டும். விசிஷ்டாத் வைதம் என்பது பக்திமார்க்கத்தின் ஒரு அங்கமாகவே கொள்ளப்படுகிறது. இந்தப் பக்தி இயக்கம் தெற்கே (தமிழ்நாட்டில்) 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளிலே நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் நிலைபெற்றது. ஆண்டாள் என்ற பெண், திருப்பாணாழ்வார் என்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் முதலிய பன்னிரண்டு ஆழ்வார்கள் வளர்த்த பக்தி நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்கள் என்ற பக்திநூலாக வெளிவந்துள்ளது. பக்தியை ஞானத்துடனும் கருத்துடனும் இணைத்து நாதமுனி, ஜமுனாச்சாரியார், இராமானுஜாச்சாரியார் என்ற ஆசாரியர்களால் வகுக்கப்பட்ட ஒரு சித்தாந்தமே "விசிஷ்டாத்வைத

**மனிதன் மட்டும் ஒழுங்காக இருந்தால் நல்ல எண்ணங்கள் தாமாகவே உதிக்கும்.**

சித்தாந்தம்" எனவும் அதற்கு ஆச்சாரியாராக ஸ்ரீ இராமானுஜரையும் கொள்ளப்பட்டிருக்கிறது. இவர் 12ஆம் நூற்றாண்டினர். பரம்பொருள் வெறும் தத்துவமல்ல, நிர்க்குணமல்ல, சகுணமூர்த்தியேதான்.

பக்தியின் ஒரு வழியாலேயே உயிர்கள் மோட்சமடைய முடியும். பக்தியின் எல்லைதான் சரணாகதி. சரணாகதி என்பது தன்னை முழுமையாக ஸ்ரீ நாராயணனிடம் ஒப்படைப்பதாகும். கர்மம், ஞானம் இரண்டுமே பக்திக்கு அங்கங்கள். எல்லாச் சம்பிரதாயங்களிலுமே குருவுக்கு மிக உயர்ந்த இடம் உண்டு. இந்த மார்க்கத்தில் அது மிகவும் அதிகம். மோட்சம் என்றால் உயிர் பரமபதம் அடைந்து அவனுக்குக் கைங்கர்யம் செய்வதாகும். (7)

சைவசித்தாந்தம், வேதாந்தம், ஆகமம் இரண்டையும் அடிபொற்றியது. இதன்படி பரமேசுவரன் சிவனே. அவனுக்கு அனைத்து ஆற்றலும் உண்டு. அவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிந்தவன்; மாறாதவன்; ஆதிஅந்தமற்றவன்; முழுமை பெற்றவன்; அன்பே உருவானவன்; உயிர்கள், பசுக்கள் என்று அழைக்கப்படும். அவைகளும் பதியைப் போலவே சச்சிதானந்த சொருபிகள் ஆனால் அவை தங்களை அநித்யமாகவும் அறிவற்றவையாகவும் எண்ணிக்கொண்டு விடுகின்றன. மும்மலங்கள் பற்றிப்பேசப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற அனுட்டானங்கள் மூலமாகவே உயிர் பக்குவமடைய முடியும். தகுதிபெற்ற உயிருக்குச் சிவனே வந்து வழிகாட்டுவான். சைவசித்தாந்தங்கள் பதினோராம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஒரு முழுச் சித்தாந்தமாக உருப்பெற்றுவிட்டது. இதற்கு ஆதாரம் 28 சைவாகமங்கள், வேதங்கள், தேவாரங்கள், பெரியபுராணம், மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலியனவாகும். மெய் உணர்வை அடைய பக்திமார்க்கமே சிறந்த வழி. மறைகளுரைக்கும் உட்பொருளை உணராது வெற்றுச் சடங்குகளால் பயன் ஒன்றும் விளையாது என்று சங்கரர் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். சங்கரர் தாம் கண்ட புதுநெறியை விளக்க இந்தியா பூராவும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு பத்ரிநாத், துவாரகை, பூரி, சிருங்கேரி, காஞ்சி ஆகிய இடங்களில் மடங்கள் அமைத்து அவற்றைச் சமயப்பிரசாரம் செய்யும் நிலைக்களங்களாக்கினார். காசியில் தம் கொள்கையை விளக்கப் பள்ளி ஒன்றை நிறுவினார்.

இந்துமதம் சார்ந்த பெரியோர்கள் எதையும் தடுக்கவில்லை. ஆனால் அவர்கள் அறிவுக்குத் தக்கபடி பொருளையும் பொருத்தத்தையும் தெரிந்துகொண்டு செய்யச் சொல்லிக்கொடுத்தார்கள்.(9) வழிபாடு, நோன்புகள், உற்சவங்கள் இம்மூன்றும் தனித்தனி வீடுகளிலும் கோயில்களிலும் நடக்கின்றன.

உருவவழிபாடு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சாமியறையில் உண்டு. இறை உருவங்களின் படங்கள் வைக்கப்பட்டிருக்கும். தூபதீபங்காட்டி வழிபடுவதும் மிகவும் எளிமையாகத் தேவாரத் தோத்திரங்கள், திருவாசகம், திவ்யப்பிரபந்தங்கள், மந்திரங்கள், பக்திப்பாடல்கள், கீர்த்தனைகள், தனிப்பாடல்கள் என்பன பக்தியுணர்வுக்கு உருக்கொடுத்துப் பாடப்படுவதுண்டு. சடங்குகளும் நோன்புகளும் வழிபாட்டுக்கு மெருகு சேர்க்கின்றன. பெண்கள் சில விரதங்களைக் கைக்கொண்டு வழிபாடு செய்வர். குறிப்பாகக் கந்தசஷ்டியும், கௌரிக் காப்பு நோன்பும் குறிப்பிடற்பாலன. சுருங்கச்

சொன்னால், ஒவ்வொரு இந்துவும் மனச் சாந்தி பெறவும், வீடுபெறவும் அவனுக்கு வழிகாட்டியாக ஒரு கோவில் வேண்டும். அதனுள் ஒரு தெய்வம் வேண்டும். அந்தத் தெய்வத்தின் அருள் வேண்டும். இதைத் தான் விசுவரூபமாகவும், அணுவின் உருவத் திலும் காட்டித் தருகிறது. இந்துமதம். (10) "மனிதர்களுக்குக் கிடைத்த ஒரேபற்று இறைவனே" என்பதால் அவ்விறைவனை வணங்கிக் "காரியசித்திக்குப் பக்தி அவ சியம்" என்பதையுணர்ந்து தாங்க முடியாத துன்பம் வரும்போது இறைவனின் பாதத்தை உறுதியுடன் பற்றிக்கொள்ளவேண்டும். நிரம்பிய பக்தியுடன் துன்பத்தைத் தாங்கும் சக்தியை இப்பிறவியிலேயே அளிக்குமாறு இறைவனிடம் வேண்டிக்கொள்ள பக்தி இலக்கியங்கள் வேண்டும். இலக்கியங்கள் வேண்டுதல்களுக்கு ஏற்றவை.

(நக்கீரர், காரைக்காலம்மையார், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தாயுமானவர், திருமூலர், சேரமான், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கச்சியப்பச்சிவாச்சாரியார், சேக் கிழார் போன்றோர், சைவ இலக்கியங் களின் பிதாமகர்கள்). (தொடரும்...



**30.01.2009 ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கியோரைக் கௌரவிக்கும் நிகழ்விற்கு வருகை புரிந்திருந்த நல்லை ஆதீன குரு முதல்வருடன் ஆக்கங்களை வழங்கியவரில் ஒருபகுதியினரை இடமிருந்து வலமாக திரு கந்தசத்தியதாசன், T. நாகராசா, திரு ஐ.கோ. சந்திரசேகரம், திரு மூ. சிவலிங்கம், திரு நித்தியதசீதரன் ஆகியோரை மேலே உள்ள படத்தில் காணலாம்.**

*மௌன நிலையில் தியானம் செய்வதே ஞானநிலையின் உச்ச நிலையாகும்.*

உ

# நன்னாரதர் நவிலும் நல்லுபதேசம்

**திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்**

முந்தொரு ஞான்று சூரன் ஆதிய அசுரர்க்கு அஞ்சிய இந்திரனும் இந்திராணியும் தமது வடிவத்தை மாற்றித் தேவலோகத்தினின்றும் நீங்கிப் பூலோகம் சென்றார்கள். அதனால் எப்பற்றில்லாதவர்க்கும் ஒட்டபற்று விளங்கும் பொன்னகரம் சந்திரனும் நட்சத்திரங்களும் இல்லாத இராக்காலம் போலப் பொலிவினை இழந்தது.

சுவர்க்க உலக வளங்கள் எல்லாம் வறண்டது. துன்பதுயரங்கள் துள்ளத் தொடங்கின. இன்பம் இலைமறை காயாயிற்று. வானோர் உள்ளம் வருந்தியது. எங்கு பார்த்தாலும் புலம்பல் ஓசை பொங்கி வழிந்தது. எல்லோருடைய கண்களிலும் தெண்ணீர் நண்ணியது. சுவர்க்கம் உயிர் போனவர் போலப் பொலிவினை இழந்து அழுந்தியது.

இன்னவை நிகழ்வதற்கு முன்னராக இந்திரனுடைய தம்பி உபேந்திரன் வானவர் உலகத்தை விட்டுச் சென்றான். வைகுண்டத்தில் உபேந்திரன் வைகினான்.

அந்த நாட்களில் இந்திரனுடைய மைந்தன் சயந்தனும் சிறியதோர் தந்தை தன்னைக் காண்பது கருதி வைகுண்டம் போந்தான். சயந்தன் சிறிது காலம் வைகுண்டத்தில் மாண்பொடு வதிந்தான்.

சயந்தன் ஸ்ரீ வைகுண்டத்தில் வைகும்நாளில் பொன்னுலகத்தில் எதிர்பாராத புதுப்புதுச் சம்பவங்கள் நிகழ்வுற்றதைக் கேள்வியுற்றான்.

தந்தையும் தாயும் தம் உருமாறித் தேவ உலகத்தைவிட்டு வெளியேறி விட்டார்கள். சென்ற இடம் யாது என யாருக்கும் தெரியாது. அவுணர்கள் அழகிய பொன்னுலகினுள் புகுந்து எங்குதேடியும் இருவரையும் காணாது திரும்பிச் சென்றார்கள். அல்லோல கல்லோலப்படும் அமரர் உலகத்தில் அரசன் இல்லாது தேவர்கள் அலமந்தார்கள்.

தந்தைக்குத் தளர்ச்சி ஏற்படும் காலத்தில் தங்கள் குடித்தலைமையை எல்லாம் மைந்தர்கள் தாங்கவேண்டியது தருமமாகும். அறனும் அதுவே.

பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணத்தில் "முன்னிருந்த மைந்தன் முகம் நோக்கி நாகன்,

**"மூப்பெனைவந் தடைதலினால் முன்பு போல்**
**என்னுடைய முயற்சியினால் வேட்டை யாட**
**இனி எனக்குக் கருத்தில்லை, எனக்கு மேலாய்**
**மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு**
**மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும்**
**உன்னுடைய மரபுரிமை தாங்கு வாய் என்**
**றுடைதோலும் சுரிகையும்கைக் கொடுத்தான் அன்றே.**
**தந்தைநிலை உட்கொண்டு தளர்வுகொண்டு**

*தீமை என்று கருதப்படும் செயல்கள் யாவற்றையும் நீக்கிவிடு.*

**தங்கள்குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற**
**வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு**
**மனங்கொண்ட குறிப்பினால் மருமை கொண்டு"**

என்பதனால் உலகியல் வழக்கு உண்மையை உணரலாம்.

சயந்தனும் சிந்தையில் பொன் னுலகின் புலம்பலைக் கருதுகின்றான். 'எந்தையோ இங்கு இல்லை. நான் என் நகர் காப்பேன்' என்று மைந்தன் புந்தியில் உன்னினான். சயந்தன் பொன்னகர் தன் னில் போந்தான்.

பொன்னகர் புகுந்த மைந்தன் புலம்பும் தேவரைக் கண்டான். தந்தை தாயைக் காணான். துன்பக் கடலில் தோய்ந்தான். ஏக்கம் மிக்கான். இரக் கத்தில் ஆழ்ந்தான். செய்வதறியான். சயந் தன் பித்தரைப்போல உற்றான்.

இந்திரன் மைந்தன் இவ்வாறு தத்தளிக்கும் அந்நாளில் நாரதமுனிவர் ஆங்கு நண்ணினார். சயந்தனை இழந்து நின்ற சயந்தனைத் தேற்றச் சிந்தை கொண்டார்.

நாரதர் என்னும் நற்றவச் சீர்சால் முனிவர் வரவுகண்டு எதிர்கொண்டான் சயந்தன். நடுக்கத்தோடு எழுந்து முனி வரை முன் வணங்கினான். தவமுனி வரைத் தக்க ஆசனத்தில் அமரச் செய் தான். சயந்தன் முனிவர் முன்னாகப் பணி வுடன் நின்றான். நின்றிடும் அரசிளங் குமரன் நாரதரைப் பார்த்து நவில்வான்.

"நற்றவ நாரத முனிவரே! நாளும் நம்மை நலிவு செய்யும் நன்மை அறியாத சூரற்கு அஞ்சி என் பிதா மாதாக்கள் மாயமாக மறைந்து சென்றார்கள். சென்ற இடம் தெரிந்திலேன். இந்தத் தீமை நம்மை விட்டு நீங்கும் காலம் உளதோ? தவமுனிவரே, சாற்ற வேண்டும்" என்று ஏங்கினான் இந்திரன் மைந்தன்.

தருக்கினை இழந்து நின்ற சயந் தன் இத்தன்மை கூறினான். நாரதர் விரை வில் சயந்தனுடைய சங்கடங்களை உணர்ந்து கொண்டார். பொங்கு பேரரு ளோடு சயந்தனை நோக்கினார். முனிவர் அரச ஆசனத்தில் சயந்தனை அமரச் சொன்னார். பின்னர் பின்வருமாறு அமரர் முன்னவன் மைந்தன் மனம் கொளத் தேற்றுவார்.

"இந்திர மைந்தா! ஒருவருக்குத் தீங்கு வந்தடையுமாறும் நன்மை வந்து சேருமாறும் அவர் செய்த வினையினால் வந்தடையும். பிறரால் இன்பதுன்பங்கள் வந்து ஒருவரைத் தாக்காது. (இதனைத் தாம் தாம் செய்தவினை தாமே அனுபவிப் பார் என்றார் மூதாட்டியார் ஔவையார். புறநானு தானும்,

**'தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"** என்னும் 192)
**அமுது நஞ்சு இரண்டினுக்கும் ஒங்கிய சுவையின் பேதம்**
**உதவினாரும் உளரோ!**

"சயந்த! மேலும் கேள்! முழு வதையும் உணர்ந்த மேலோர் இன்பம் வந்தடைந்த காலத்தில் இனிதென மகிழ்ச்சி அடையார். அதற்கு எதிர் மாறாகத் துன்பம் தொடரும்போதும் மனம் மருண்டு சோர்வடையார். இன்பமும் துன்பம் தானும்

உடற்கு இயைந்த பெற்றி என்று தேர்வார். முன்புசெய்த வினையைச் சிந்திப்பார். ஆன்றோரும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்றார் அன்றோ!

நாரத முனிவர் மேலும் சயந் தனுடைய நன்முகத்தை நாடி மேலும் சில நல்வார்த்தை நவில்வதானார்.

"வறியவர் செல்வராவர். செல்வர் பின்னர் வறியராவர். சிறியவர் சிறந்தோ ராவர். சிறந்தவர் ஒரு காலத்தில் தாழ்ந்த வராவார். அவரவர்களுடைய ஊழ்வினைப் பயனால் முறை முறை இது நிகழும் கண்டாய்! சூரியன் கதிர்களை வீசி வலம் வரும் உலகத்து இயற்கையும் இதுவே யாகும்.

"மகனே! இன்னமும் கேட்பாய்! ஆக்கமும் அழிவுதானும் வறுமையும் அல்லது மகிழ்ச்சியாவும் உயிர்களுக்கு என்றும் நிலையென நினைக்கலாமோ? மிக உயர்ந்த முழுமதியின் தண்ணிலாக் கதிரின் கற்றை வளர்ச்சியும் தேய்வும் முறை முறை நாளும் பொருந்திற்று அன்றோ?

ஆதலின் மைந்த! உங்கள் தாழ் வும் அவுணர்தம் உயர்வும் நில்லாது, இது உண்மை எனக் கொள்வாய். பொன் னகரைப் புறக்கணித்துப்போன உன் தாதையும் பயந்த தாயும் தமது உருக் கரந்து கடிதேகினார்கள். பூலோகத்தில் மறைந்து வாழ்வர் போலும்.

"மகனே! உன்னுடைய பிறப் பிற்கு முன்னம் அமரர்களுக்கு அலக்கண் ஆற்றிய ஆனைமுகத்து அவுணன் அழி யும் வண்ணம் உன் தந்தை அயராது முயன்றான். அதனைப்போல இந்தக் கொடும் சூரனை அடும் வண்ணம் கடும் முயற்சியில் முயல்வான்.

நாரதமுனிவர் இவைபோன்ற இனிய ஏதுக்கள் பல எடுத்தியம்பினார். "இன்னினி வெஞ்சூரன் தானும் துஞ்சிடும். உங்கள் துன்ப துயரங்கள் விட்டு நீங்கும். பழைய வாழ்வில் மீண்டும் மகிழ்வீர்கள். மகனே! நான் சொல்லுவதை நம்புவதில் ஐயப்படாதே" என்று நாரதமுனிவர் தம் நற்சிந்தனையை நிறைவுசெய்தார்.

சயந்தகுமாரன் மனம் தேறுதல் அடைந்தான். முனிவர் விடைபெற்றுச் சென்றார்.

நன்னாரதர் நல்லுபதேசத்தைக் கேட்ட சயந்தன் மனத்திட்பம் பெற்றான். எதையும் தாங்கும் இதயத்துடன் சயந் தன் தேவர்களுக்கு உற்ற துணையாக உம்பர் உலகில் உறைந்தான்.

## தாயன்பு

கடைசிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த தன் தாயாரைப் பார்ப்பதற்காக அவ்வப்போது செல்வார் கிருபானந்த வாரியார். தாயாரின் அருகில் சென்றதும் தமது உடற் பருமனைப் பொருட்படுத்தாது நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிடுவார். கண்பார்வை அப்போது சற்று குறைந்திருந்ததால், விழுந்து வணங்கிய தன் மகனை அருகில் அழைத்து அணைத்து "என்னப்பா... இப்படி துரும்பா இளைச்சிட்டியே?" என்று கரிசனத்துடன் சொல்வாராம் அவரின் தாயார். இந்தத் தகவலைக் கூட்டத்தில் சொல்லிவிட்டு "இந்த உடம்பு உங்கள் பார்வைக்கு எப்படித் தெரிந்தாலும் என் தாயாரின் அன்புப் பார்வைக்கு துரும்புதான்" என்று சொல்லிவிட்டு குலுங்கிச் சிரிப்பார் வாரியார். அதுதானே தாயன்பு!

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தல யாத்திரை

**காலம்: 13.07.2008 ஞாயிறு பகல் 10 மணி**

**இடம்: கதிர்காமம்.**

கதிரைமலையின் உச்சியை அடைந்த யான் கனத்த மனத்துடன் கோயிலின் உள்ளே நுழைகிறேன். 2006ஆம் ஆண்டு கதிர்காம யாத்திரைக்கு வந்தது போல இல்லாமல் வெறுங்கையுடன் முருகனைத் தரிசிக்கவந்தது அடியேனைப் பெரிதும் சங்கடப்படுத்தியது. ஆனால், அடுத்து நடந்தது அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த மகிழ்வான சம்பவம். நிகழ்வு உடம்பைப் புல்லரிக்கவைத்தது.

சற்றுத் தூரத்தே மலை உச்சியில் உள்ள பிரமாண்டமான வேல் வடிவில் எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமானுக்கு நைவேத்தியம் தயாரித்துக் கொண்டிருந்த அடியார்கள் கூட்டத்தின் நடுவே எமக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவரும் 2006ஆம் ஆண்டில் கதிர்காம யாத்திரையின் போது மலையுச்சியில் நடைபெற்ற பூசை வழிபாட்டின்போது எம்மோடு இணைந்து கொண்ட இணுவிலைச் சேர்ந்த வரதன் ஆசிரியர் போலல்லவா உள்ளது. நான் காண்பது உண்மையில் அவர்தானா? என்பதை உறுதிப்படுத்தும் முகமாக அவருக்குச் சமீபமாகச் சென்றேன். அவர்தான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அவரின் பின்னால் போய்நின்று வேற் பெருமானுக்கு நேர் எதிரே கீழே அமர்ந்தபடி அவலைப் பிரசாதமாகப் படைப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வரதன் ஆசிரியரின் முதுகில் கையை வைத்தேன். திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்த வரதன் ஆசிரியர், "சுவாமி! நீங்களா? எப்படி? இந்தநேரம்!" என மேலே எதுவும் பேசமுடியாதவராகி விக்கித்து நின்றார். ஒருவாறு சமாளித்து, "நமது முந்தைய பயணத்தை சிந்தித்தபடி இருந்தேன். நீங்கள் அருகிலேயே நிற்கிறீர்கள். பார்த்தீர்களா? முருகன் திருவிளையாட்டை. அவன் வாசலிலேயே மீண்டும் நமது சந்திப்பு" என்று கூறியதுடன் தன்னுடன் அழைத்து வந்த தமது மகளையும் அறிமுகம் செய்து வைத்துவிட்டு நைய்வேத்திய கடமைகளைத் தொடர்ந்து அடியேனைக் கவனிக்குமாறு கூறி எழுந்து கொண்டார்.

முருகனை மனதில் நிறுத்தியபடி நெய்வேத்திய கடமைகளை நிறைவு செய்து, பிரசாதத்தை அருகில் நின்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தேன். எதைச் செய்ய முடியவில்லை என மனம் நொந்தேனோ அதை அப்படியே நிறைவேற்றி வைத்த முருகன் கருணையை எண்ணி வியந்தபடி வெளியே வருகிறோம். வழி நெடுகிலும் பழைய பயண அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு மலையின் அடிவாரத்தை அடைந்ததும் அவர்கள் தம் வழி செல்ல, முற்பகல் 11மணியளவில் கதிர்காமத்திலிருந்து கொழும்பு நோக்கி எமது பயணத்தைத் தொடருகின்றோம்.

**இவ்விடத்தில் நாம் திரு வரதன் ஆசிரியரைப்பற்றி சிறிது பார்ப்போம். அவர் இணுவிலைச் சார்ந்தவரும் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் சிறந்த முருகபக்தர். கதிர்காமக் கந்தன்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். வருடம் தவறாமல் உற்சவ காலங்களில் அவனைத் தரிசிக்கவேண்டும் என்ற பேராவலின் காரணமாக கடந்த வருடமும் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளாது யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமக்கந்தனுக்குகந்த நெய்வேத்தியப் பொருட்களான பலாப்பழம் உட்பட சகல பழவகைகளோடு கப்பல்மூலம் புறப்பட்டு திருகோணமலையை அடைந்து அங்கிருந்து பிரயாணம் செய்து கொழும்பை அடைந்து அங்கே தங்கி இருந்து கல்வி கற்கும் தனது மகளையும் அழைத்துக்கொண்டு பேரூந்தின்மூலம் கதிர்காமத்தை அடைந்தவர். அவரது இச்செயற்பாட்டினை உற்றுநோக்குமிடத்து எல்லா வசதிகளோடு நாம் வெறுங்கையுடன் கதிர்காமத்திற்கு போயிருந்தவேளை எவ்வளவோ இடர்பாடுகள் மத்தியில் கதிர்காமத் தரிசனத்திற்கு கந்தனுக்குகந்த பொருட்களோடு வந்த வரதன் ஆசிரியர் எம்மிலும் மேலானவர் அல்லவா?**

கொழும்பை நோக்கி வரும் வழியில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள "எல்லே" அருவியில் பிரயாண அலுப்புத் தீர நீராடிவிட்டு இரவு 7மணியளவில் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் இருப்பிடத்தை அடைந்தோம். எவ்வித முன்னறிவித்தலுமின்றி நாம் அங்கு சென்றதால் நாட்டில் இடம்பெறும் தற்கால சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும் எம்மோடு பயணித்தவர்களில் சாரதி உட்பட மூவர் இளம்வயதினராக உள்ளதாலும் பாதுகாப்பு காரணங்கள் நிமித்தம் காவற்துறை அலுவலகத்தை அடைந்து பதிவு செய்துவிட்டு வருமாறு சித்தர் பீடத்தைச் சார்ந்தவர்கள் கூறியதன்பேரில் இரவு 7.30 மணியளவில் காவல்த்துறை அலுவலகம் சென்று எமது அடையாள அட்டைகளைக் கொடுத்துப் பதிவுசெய்தபின் சித்தர் பீடத்தில் தங்கினோம்.

**காலம்: 14.07.2008 திங்கள், காலை**

**இடம்: நுவரெலியா.**

காலையில் சித்தர் பீடத்திலிருந்து புறப்பட்டு வரும் வழியில் (சீத- எலியா) சீதை அம்மன் கோவிலைத் தரிசித்தோம். கோயிலின் அருகே நெளிந்து வளைந்து ஓடும் சிற்றருவியின் (முழந்தாளளவு நீரோடை) அடியில் பிரகாசிக்கும் சிறியதும் பெரியதுமான பளிங்குருவக் கற்கள் காலைக் கதிரவனின் வெள்ளொளியில் தகதகவெனப் பிரகாசித்தன. தெளிந்த நீரோடையில் மெய்மறந்து நின்றபடி மலையகத்தின் வண்ணமிகு காட்சிகளை கண்களினாலே அள்ளிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம். வழியில் றம்பொட ஆஞ்சநேயர் ஆலயத்தின் மதிய பூசையில்

கலந்து ஆஞ்சநேயரைத் தரிசித்தோம். தரிசித்த பின் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். மீண்டும் இரவு 6 மணியளவில் கொழும்பு வந்தடைந்ததுடன் எமது கதிர்காமப் பயணம் இனிதே நிறைவடைந்தது.

**(15.07, 16.07 இரு நாட்களும் எமது சென்னை விமானப் பயணச்சீட்டு இறுதி செய்வது போன்ற விடயங்களுடன் கழிந்தது.)**

**காலம்: 17.07.2008 வியாழன் - காலை**

**இடம்: கொழும்பு - சென்னை**

காலையில் எழுந்து அவசரம் அவசரமாக எமது கடமைகளை முடித்து கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கி விரைந்தோம். இந்தப் பயணத்திற்காக பலாலி விமான நிலையத்திலிருந்து மூவராக புறப்பட்ட எம்முடன் கொழும்பில் மேலும் ஒன்பது பேர் இணைந்து கொண்டதுடன் பன்னிருவராக (7 பெண்கள், 5 ஆண்கள்) எமது வட இந்திய ஸ்தல யாத்திரையின் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

நிறைந்த பயணிகளுடன் 9.55க்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்தியன் எயர் லைன்ஸ் விமானம் மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் பக்குவமாகத் தரையிறங்கியது. சென்னை எழும்பூர் விடுதியில் பகல்நேர ஓய்வின்பின்னர் மாலையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் ஆகியவற்றைத் தரிசித்தபின் பெசன் நகரிலுள்ள அறுபடை வீடுகள் முருகன் ஆலயம் சென்றோம். தனித்தனிக்கோயில்களாக முருகனின் அறுபடை வீடுகளையும் ஒரே வளாகத்தினுள் தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம். ஒரு கருவறையும், அதன் முன்பாக உள்ள சிறிய மண்டபமும் கொண்ட தனிக்கோயில்கள் அவை.

செயற்கையாக உருவாக்கிய ஒரு சிறிய குன்றின்மீது மேலும் கீழும் உள்ளும் வெளியிலுமாக எட்டு லக்சுமிகளும் வீற்றிருக்கிறார்கள். மிக ஒடுங்கிய குகை மாதிரியான அமைப்பினூடாக உட்புகுந்து வரவேண்டிய பல இடங்களில் அடியேனின் பருத்த உடம்பு ஒத்துழைக்க மறுத்தது. அந்தச் சிறிய குன்றினைச் சுற்றிட காணப்படும் ஒரு வீதியும் கோயிலும் மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**காலம்: 18.07.2008. வெள்ளி காலை 6.30மணி**

**இடம்: சென்னை.**

காலை 6.30க்கு ஆரம்பித்து, திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயம், ஊசி முனையில் தவம் புரியும் மாங்காடு காமாட்சியம்மன் ஆலயம், வடபழனி ஆலயம், தேவாரப் பாடல்பெற்ற திருவான்மியூர் சிவன் ஆலயம் ஆகியவற்றை மதியத்துக்கு முன்னரே தரிசிக்க முடிந்தது.

பகல்நேர ஓய்வின் பின்னர் மாலையில் நேராக மெரீனா கடற்கரை சென்று அண்ணா சமாதி, எம்.ஜீ.ஆர் சமாதி இரண்டையும் பார்வையிட்ட பின்னர் களைப்புத் தீர இதமான காற்றில் மெரீனா கடற்கரை மணலில் நீண்ட நேர ஓய்வுடன் அன்றைய பொழுது கழிந்தது. (தொடரும்...

*ஓடாத தேரும் உழைக்காத மனிதனும் சீர் இழுக்க நேரிடும்.*

உ

# துறவிகளின் பார்வையில் விடுதலை

யாழ் வதிரிவாசன்

நீண்டநாட்களின் பின்பு ஞானச் சுடர் 2008 ஐப்பசிமாத சஞ்சிகை எனது கைக்கு தபால்மூலம் கிடைத்தமையை யிட்டு பூரிப்படைகின்றேன். ஞானச்சுடரின் ஆரம்பகால எழுத்தாளர்களுள் நானும் ஒருவன். நான் தற்பொழுது கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவியுள்ளபோதும் சந்நிதி வேலவன் என்னை மறக்கவில்லை என்பதையிட்டு பெருமையடைகின்றேன். தனது மந்தையிலிருந்து வழிதவறிப்போன ஆட்டினைத் தேடி அலையும் இயேசு கிறிஸ்துவைப்போல முருகப்பெருமானும் என்னைத் தேடிவந்தமையையிட்டு பேரு வகையும் பெருமகிழ்ச்சியும் அடைகின் றேன். ஆற்றங்கரையானின் அருள் மகிமையை நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றேன். இற்றைக்கு 30 வருடங் களுக்குமுன்பு சந்நிதியில் நான் அனு பவித்த ஒரு தெய்வீக அனுபவத்தை ஞானச்சுடர் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் சிறுவனாக இருந்தபோது வெள்ளிக்கிழமைகளில் எனது தந்தையார் சைவப்புலவர் திரு ஆ. இரத்தினசபாபதி அவர்களோடு சந்நிதி வேலவனைத் தரி சிக்கச் செல்வது வழக்கம். ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் எனது பூட்டனார் கரவெட்டியைச் சேர்ந்த திரு சபாபதி அவர்கள் "வதிரிமடம்" என்ற பெயரில் ஒரு அன்ன சத்திரம் ஒன்றை நடாத்தி நிர்வகித்து வந்தார். தற்போது சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு நேர் பின்புறமாக இடிந்த நிலையிலுள்ளது. ஒரு வெள்ளிக்கிழமை நானும் அப்பாவும் காலைப்பூசையை முடித்துவிட்டு வந்து அந்த மடத்தின் முன் முகப்பு மண்டபத்தில் காலாற அமர்ந்திருந்தோம். அப்பொழுது அந்த மடத்தின் முன்னேயுள்ள ஒரு ஆலமரத் தின்கீழ் துறவி ஒருவர் வந்து உட்கார்ந் தார். பார்ப்பதற்கு வெளிநாட்டவர்போலத் தென்பட்டார். அவரின் பெயர் ஜேர்மன் சுவாமி என்று விசாரித்தபோது சிலர் சொன்னார்கள்.


பின்பு அப்பா என்னையும் அழைத் துக்கொண்டு அந்த மகான் இருந்த இடத்துக்குச் சென்றார். Good morning swamiji, Where have you come from? (வணக்கம் சுவாமி, நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?) என்று கேட்டார். அவர் மிகவும் எளிமையான ஒரு புன்முறுவ லோடு from the same place where you were born. (நீர் பிறந்த அதே இடத் திலிருந்துதான் நான் வந்திருக்கிறேன்) என்று கூறினார். நானும் எனது அப்பாவும் திகைத்து நின்றோம். நாங்கள் கரவெட்டி, இவர் ஜேர்மனி இது எப்படிச் சாத்திய மாகும் என்று எனது அப்பா குழப்பத் துடன் சிந்தித்து நின்றார். பின்பு அந்த மகான் என்னைக் காட்டி Who is this little gentleman? (இந்தச் சிறிய கனவான் யார்?) என்று எனது அப்பாவைக் கேட்டார். He is my son, Swamiji. (இது எனது மகன் சுவாமி) என்று அப்பா கூறினார். உடனே அவர் He too has come from

பெற்றோரைக் கனம் பண்ணினால் எல்லா நன்மைகளும் உன்னைத்தேடி வரும்.

the same place. (இவனும் அதே இடத்திலிருந்துதான் வந்திருக்கிறான்) என்று கூறினார். எனது அப்பாவின் சங்கடம் அதிகமாகியது. அவரின் சங்கடத்தைப் புரிந்துகொண்ட அந்தத்துறவி மீண்டும் புன்னகைத்தவாறே We have all come from our mother's womb. (நாங்கள் எல்லோரும் எங்கள் தாயின் கருவூரிலிருந்து வந்திருக்கிறோம்) என்றார். அதன்பின்புதான் எனது அப்பாவின் சங்கடம் நீங்கியது. பின்பு எனது அப்பா அவரைப் பார்த்து Why are you wearing this dirty verti? (இந்த அழுக்கு வேட்டியை ஏன் அணிந்திருக்கிறீர்கள்?) என்று கேட்டார். அதற்கு அவர் My son this dirty verti is not an indication of my poverty but my liberty. (இந்த அழுக்குவேட்டி எனது வறுமையின் அடையாளம் அல்ல, எனது விடுதலையின் அடையாளம்) என்று சாதாரணமாகச் சொன்னார்.

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பு அந்த மகான் உச்சரித்த அந்த "விடுதலை" என்ற சொல்லின் அர்த்தம் எனக்கு அப்போது விளங்கவில்லை. இப்போது 42 வயதில் அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை என்னால் பூரணமாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

அதாவது இந்த உலகியல் வாழ்வின் பந்த பாசக் கட்டுக்களிலிருந்து அவர் பெற்றுக்கொண்ட அந்த விடுதலையைத்தான் அவர் Liberty என்ற சொல்லினாற் குறிப்பிட்டுள்ளார் என்பதனை நான் தெளிவாக இப்போது உணருகின்றேன்.



**ஆக்கங்கள் வழங்கியோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுடன் கௌரவிக்கப்பட்டவர்களில் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், இராசையா ஸ்ரீதரன் அவர்களும் காணப்படுகின்றனர்.**

உ

# வேண்டுதல்கள்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

பாரதியார் பாடிய பக்திப்பாடல்களிலே அவர் இறைவனிடம் பலவற்றை வேண்டிப் பாடியுள்ளார்.

**காணி நிலம் வேண்டும் – பராசக்தி**
**காணி நிலம் வேண்டும்**

என ஆரம்பித்து அங்கு இனிய சூழலும் அழகிய வீடும் வேண்டுமென்றும் அங்கே கூடிவாழ ஓர் அன்பு மனைவி வேண்டுமென்றும் கேட்டு அவர் பாடிய பாடல் பிரபலமான ஒன்று. இப்படிக் காணிநிலம் கேட்டவர்

**எனக்கு வேண்டும் வரங்களை**
**யிசைப்பேன் கேளாய் கணபதி,**
**மனத்திற் சலன மில்லாமல்**
**மதியி லிருளே தோன்றாமல்**
**நினைக்கும் பொழுது நின்மவுன**
**நிலைவந் திடநீ செயல்வேண்டும்**

என இறைவனுடன் ஒன்றித்து நிற்கும் நிலையையும் வேண்டியுள்ளார். இதனைக் கேட்டவர் அதனைத் தொடர்ந்து

**கனக்குஞ் செல்வம் நூறுவய**
**திவையுந் தரநீ கடவாயே**

எனவும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பாரதியாரின் வேண்டுதல்களைப்பற்றி எழுதத் தொடங்கினால் அது பல புத்தகங்களாக நீளும். அவரது பக்தி பற்றியும் வேண்டுதல்கள் பற்றியும் பலர் ஆய்வுசெய்துள்ளனர். அவரது பக்திப் பாடல்களைச் சுவைத்தபோது எனது மனதிலே தோன்றியவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

காணி, வீடு, பொருள், கல்வி, கவியாற்றல், நீண்டஆயுள் முதலிய பலவற்றை அவர் இறைவனிடம் வேண்டியிருந்தாலும் உடலில் உயிர் இருப்பதுபோல் இவ் வேண்டுதல்களுள்ளேயும் ஓர் உயிர்க்கரு ஊடுருவி நிற்கிறது.

**தனியொ ருவனுக் குணவிலை யெனின்**
**ஜகத்தினை யழித்திடுவோம்**

என்று பாடியவரல்லவா பாரதி. அந்த எண்ணவூற்று அவரது வேண்டுதல்களுள்ளேயும் விரவிக் கிடக்கிறது. “எல்லோரும் வாழவேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும், நாடு செழிக்க வேண்டும்” என்ற சிந்தனை ஒவ்வொரு வேண்டுதலிலுமே அடிநாதமாகக் கிடக்கும்.

உதாரணமாக “காணிநிலம் வேண்டும்” என்ற பாடலையே எடுத்துக்கொள்வோமே.

இறுதியில் "இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" எனத்தான் பாடலை முடித்துள்ளார். விநாயகர் நான்மணிமாலையில் வரும் அவரது கோரிக்கைகள் அற்புதமானவை.

**கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்**
**மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,**
**விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்**
**யாவுமென் வினையா லிடும்பை தீர்ந்தே**
**இன்பமுற் றன்புட னிணங்கிவாழ்ந் திடவே**
**செய்தல் வேண்டும் தேவ தேவா**

என அவர் விநாயகரிடம் வேண்டுவது எப்படி இவ்வையத்தைத் தனது பாட்டுத் திறத்தாலே பாலிக்க விரும்பினார் என்பதையும் தெளிவாக்குகிறது. அப்பாடலிலேயே தொடர்ந்து

**'பூமண் டலத்தில் அன்பும் பொறையும்**
**விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்**
**சாவு நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்**
**இன்புற்று வாழ்க' என்பேன். இதனைநீ**
**திருச்செவி கொண்டு திருவுள மிரங்கி**
**'அங்ஙனே யாகுக' என்பாய், ஐயனே!**

எனவும் வேண்டியுள்ளார்.

இவை அவர் வெளிப்படையாகவே உலக நன்மைக்காக வரங்கேட்டுப் பாடியவற்றுள் சில. இவர் தனக்காகக் கேட்கும் சில வரங்களை எடுத்துப் பார்த்தாலும் அவை பொது நன்மைக்காகவே வேண்டப்பட்டதாக இருப்பதைக் காணலாம்.

பாரதியார் பல பாடல்களிலே தனக்குச் செல்வம்வேண்டுமெனக் கேட்டுப் பாடியுள்ளார். இவர் வறுமையில் வாடியவர். எனவே இறையருளால் செல்வம் வந்துசேருமேயானால் உல்லாசமாக வாழலாம் என எண்ணியிருப்பார் என்றே அப்பாடல்களைப் பார்க்கும்போது தோன்றும். அவர் செல்வத்தை வேண்டி நிற்கும் காரணத்தையும் சில பாடல்களிலே கூறியுள்ளார்.

**செல்வ மெட்டு மெய்தி – நின்னாற்**
**செம்மையேறி வாழ்வேன்**
**இல்லை என்ற கொடுமை – உலகில்**
**இல்லையாக வைப்பேன்**

என அவர் திருமகளிடம் கூறுவதிலிருந்து செல்வத்தை இறைவனிடம் ஏன் யாசித்தார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். திருமகளே, உன்னருளால் அஷ்ட ஐஸ்வரியங்கள் எனக்கூறப்படும் எட்டுச் செல்வங்களையும் நான் அடைந்து செழுமைபெற்று வாழ்வேன். அப்படி வாழும்போது இல்லை என்ற கொடுமையை உலகத்திலே இல்லாமல் செய்துவிடுவேன், உன்னருளால் கிட்டும் செல்வம் உலகம் முழுவதும் உள்ள இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் என அவர் உறுதிபடப் பாடுவதிலிருந்து அவரது வேண்டுதல் உலகம் பயனடைவதற்காகவே என்பது தெளிவாகிறது.

*எப்போதோ செய்த தர்மம் எப்போதும் வாழ வைக்கும்.*

**வல்லமை தாராயோ – இந்த**

**மாநிலம் பயனுற வாழ்வதற்கே**

என்ற வேண்டுதலிலிருந்து அவர் நீண்ட ஆயுளை வேண்டிநின்றதும் மாநிலம் பயனடையும் படியாக வாழ்வதற்காகவே என்பது புலப்படுகின்றது. பராசக்தியிடம் சில வரங்கள் கேட்பேன் என இறைஞ்சி அவர்

**கல்லை வயிரமணி யாக்கல் – செம்பைக்**

**கட்டித் தங்கமெனச் செய்தல் – வெறும்**

**புல்லை நெல்லெனப் புரிதல் – பன்றிப்**

**போத்தைச் சிங்கவே றாக்கல் – மண்ணை**

**வெல்லத் தினிப்புவரச் செய்தல் – என**

**விந்தை தோன்றிடவிந் நாட்டை – நான்**

**தொல்லை தீர்த்துயர்வு கல்வி – வெற்றி**

**சூழும் வீரமறி வாண்மை**

**கூடுந் திரவியத்தின் குவைகள் – திறல்**

**கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் – இவை**

**நாடும் படிக்கு வினைசெய்து – இந்த**

**நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் – கலி**

**சாடுந் திறனெனக்குத் தருவாய்**

எனவும் கேட்கின்றார். தனது நாட்டை மேன்மையுறச் செய்யுந் திறனை வேண்டி நிற்கின்றார். இந்தப் பாடலில் அவர் பல வரங்களைக் கேட்கின்றார். அப்படி அவர் தனக்கு உடலுறுதியையும் பாடுந்திறனையும் செல்வத்தையும் நூறுவயதையும் வெற்றியையும் தருமாறு கேட்டாலும் அதனால் நாடு நலம்பெறவேண்டும் மக்கள் துயர் தீர்ந்து மகிழ்வாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும். உலகமே மேன்மையுற வேண்டும் என்பனவே அவரது வேண்டுதல்களின் நோக்கங்களாக இருந்திருக்கின்றன.

பாரதியார் தனது தேசமக்கள் நலிவுற்றுக் கிடப்பதைக் கண்டு வேதனைப்பட்டவர். நாட்டின் அடிமை விலங்கை உடைக்க வேண்டுமென எழுச்சிகொண்டவர். தனது தேசமக்கள் சுதந்திரம் பெற்று சிறந்தோங்கி வாழவேண்டுமென ஆசைப்பட்டவர், சகல உயிர்களையும் நேசித்தவர். இதனால் அவரது வேண்டுதல்களிலும் பொதுநலமே நோக்காக உள்ளது.

எமது பிரார்த்தனைகளிலும் உலகம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்பதையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். உலகம் மகிழ்வாக சிறப்புற்றிருந்தால் நாமும் மகிழ்வாக வாழலாம்.

## யானையின் மணி ஓசை முன்

தாமரைத் தடாகத்துக்குள் இருந்த சிவபெருமானைக் கண்ட கிருஷ்ணபகவான் மைத்துன "மைத்துனரே, ஏன் சேற்றுக்குள் புதைந்து இருக்கிறீர்கள்" என்று கேட்க. "சத்தம் போடாதே சனியன் என்னைத் தேடுகிறான் அதுதான் மறைந்து இருக்கிறேன்" என்றார். கிருஷ்ணர் சிரித்துக்கொண்டு சனியன் பிடித்தபடியால்த்தானே நீர் சேற்றுக்குள் போனீர் என்றார்.

**கோபம் கண்களை மறைத்து ஒளியை இருளாக்குகின்றது.**

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்
# கட்டுரைத்தொடர் - 24

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்**

ஆறாம் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரமாக அமைந்துள்ளது. இத் தந்திரத்தில் சிவகுரு தரிசனம் முதல் அபக்குவன் வரை பதின்னான்கு உப தலைப்புக்களும் நூற்றி முப்பத்தொரு பாடல்களும் காணப்படுகின்றன. ஞானம் பெறும் சாதனங்களை உணர்த்தும் பகுதியாக இத் தந்திரம் காணப்படுகிறது. சிவ குரு தரிசனம் கிடைக்கப்பெற்று நற்குருவின் வழிகாட்டலின்பேரில் திருவடிப்பேறு பெறுதலே வாழ்க்கையின் நோக்கம் எனக் கூறப் பட்டுள்ளது. ஞாதுரு (காண்பவன்), ஞானம் (காணும் அறிவு), நேயம் (காட்சிப்பொருள்) என்பவற்றின் விளக்கம் கூறப்பட்டுள்ளது. துறவு, தவம் என்பவை பற்றியும் விளக்கப் பட்டுள்ளது. உண்மைத் தவவேடத்தின் இலக்கணம், போலி வேடத்தின் தன்மை, ஞானவேடம், சிவவேடம் என்பன பற்றியும் இத்தந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. குருவும் சற்குருவாக அமைதல் வேண்டும். சீடனும் பக்குவமான சீடனாக இருத்தல் வேண்டும். பக்குவனுடைய குணங்களும் அபக்குவனுடைய தன்மைகளும் இங்கு கூறப் பட்டுள்ளன. சற்குரு நெறி நிற்றலும் வீடு பேறு அடைதலுமே இத் தந்திரத்தின் சாராம்சமான கருத்தாகும்.

சைவசமயம் இறைவன் வெளிப் படும் இடங்களாகக் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. இங்கு கூறப்பட்டுள்ள குரு ஞானகுருவே ஆவார். சிவனது மூர்த்தி பேதங்களில் பதின்னான்காவது மூர்த்தமாகத் தட்சணாமூர்த்தி வடிவம் காணப்படுகிறது. யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரிய சிவனுடைய வடிவம் இதுவே ஆகும். சகல கலை வித்தைகளுக்கும் என்றும் குறையாத நிதி, பவப்பிணியைப் போக்கும் பரம புருஷனான வைத்தியர், சகல லோகத்திற்கும் ஆசாரியார் ஆகிய குரு தட்சணாமூர்த்திக்கு நமஸ்காரம் எனச் சங்கரர் சிவனுடைய தட்சணா மூர்த்தி வடிவத்தைப் போற்றித் துதிக்கிறார்.

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்க வல்ல திறமையாளன் எவனோ அவனே குரு எனக் குரு வணக்க சுலோகம் ஒன்று கூறுகிறது. இறைவனின் திருவருளால்தான் அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற குரு நமக்குக் கிடைப்பார் என இந்து சமயத் திருநூல்கள் கூறுகின்றன. ஆத்ம ஞானம் தானாக விளங்காது. அதை விளங்க வைக்க குருவின் துணைதேவை. இறைவனின் திருவருள் மானுட வடிவில் தோன்றுவதே குரு வடிவம் ஆகும்.

ஜலத்திலுள்ள தாமரை கதிரவன் கிரணம்பட்டு மலர்வதுபோல ஆசாரிய சம்பந்தம் இருந்தால்தான் ஞான மலர்ச்சியான மோட்சம் ஒருவருக்கு கிட்டும். குருவை நம்பு, முற்றிலும் நம்பு, வாழ்க்கைத் துயரத்தினின்றும் விடுதலை அடைவாய் என்றும்

மனமும் புலனும் ஒழுங்குபட்டால் குருவை உன் உள்ளத்திலேயே காண்பாய் என்றும் சங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகின்றார்.

மணிவாசகரை இறைவன் குருந்த மரநிழலில் குருவடிவம் தாங்கியே ஆட் கொண்டார் என்பதை

**"கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க"**
**"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"**
**"காட்டாதன எல்லாம் காட்டி**
**கேளாதன எல்லாம் கேட்பித்து"**

என்ற திருவாசக வரிகள் எடுத்து விளக்குகின்றன. சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம் குருவின் சிறப்பினை எடுத்து விளக்குகிறது. ஆன்மா ஐம்புலன் கள் வழியே செல்வதால் தன்னையும் தலைவனையும் அறியாது நிற்கும் என்றும், ஐம்புலன்களின் நின்றும் நீங்கி ஒருமுகமான தவநிலையில் நின்றால்த்தான் ஆன்மாவால் உண்மைப் பொருளை உணரமுடியும். தவநிலையில் உள்ள ஆன்மாவுக்கே இறை அருளால் குருவின் உபதேசம் கிடைக்கப் பெறும். குருவின் உபதேசத்தால் பற்றறுத் தல், ஞான போதனை என்பன பெற்று ஆன்மா நற்சாதனைகளைச் செய்யமுடியும் என்பதனைச் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம் கூறுகிறது.

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்**
**டன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே**

சூரியனின் ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றமுடியாதது போல அருள் வடிவமாகிய குரு இல்லாமல் ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் தோன்றாது என்பதை

**ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்**
**பானு வொழியப் படின்**

என்ற திருவருட்பயன் பாடல் எடுத்துவிளக்குகிறது.

உள்ளத்தினுள்ளே உறைந்து நின் றருளும் சிவபரம்பொருளே குருநாதனாகக் காட்சி அளிக்கின்றார் என்பதை சிவகுரு தரிசனம் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே பக்தி ஆகும். இத்தகைய பக்தியை அகத் திலே உண்டாக்கி மந்திர உபதேசங்களால் குருநாதன் அகப்புறக் குற்றங்களை நீக்கு வார். சத்தாகிய இறைவனையும் அசத் தாகிய பாசத்தையும் சதசத்தாகிய ஆன்மா இரண்டையும் சார்ந்திருக்கும் நிலையையும் இறைவனே குருவாக வந்து உணர்த்தி அருளினார் என்பதைப் பின்வரும் திருமந் திரப் பாடல் விளக்குகிறது.

**பத்திப் பணித்துப் பரவும் அடி நல்கிச்**
**சுத்தவுரையால் துரிசற சோதித்துச்**
**சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலாற்**
**சித்தம் இறையே சிவகுருவாமே**

*பெற்றோரை மதிப்பவன் வேறு பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை.*

சிவனிடத்துப் பக்தியும் அதனால் பெறப்படும் ஞானமும், ஞானத்தைப் பெற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் கூடிய வைராக்கியமும் ஆன்மா வீடுபேறடைவதற்குரிய சாதனங்கள் ஆகும். இத்தகைய பக்தி வைராக்கியத்தினால் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட" என்ற தெய்வ வாசகம் தந்த மணிவாசகனாரின் வாக்கிற்கு அமைய அவன் நான் ஆகினேன் என்ற பாவனை உண்டாகும். அப் பாவனையால் சீவனுக்குள்ளே சிவ மணம் பூக்கும் நிலை ஏற்படும். அதனால் வீடுபேற்றுக்குரிய வித்தாகிய திருவடி உணர்வு அகத்திலே தோன்றும். வீடுபேற்றுக்கு காரணமாகிய ஞானமாகிய பயிர் சக்தியின் அருளால் எளிதாக வளர்ச்சி பெற்று முத்தி அடைவதற்கு துணையாக இருக்கும்.

**பக்தியும் ஞான வைராக்கியமும் பர**
**சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்தலால்**
**முக்தியின் ஞானம் முளைத்தலால் அம்முளை**
**சக்தி அருள் தரில் தான் எளிதாமே**

இறைவனது திருவடிகளைத் தொழுதலாகிய உண்மை அறிவே தொழுபவர்களை இறைவனாக்குவிக்கும். இறை உலகமாகிய மோட்ச உலகில் கொண்டு சேர்ப்பிக்கும். ஆன்மா மலத்தால் அடைபட்டுக் கிடக்கின்ற கூட்டினை அவிழ்த்து மீட்பிக்கும் அத்திருவடி ஞானம் வளமான எண்வகைச் சித்திகளையும் மோட்சத்தையும் கொடுக்கும்.

மலம் என்பது ஆன்மாவை இறைவனுடன் சேராதபடி தடுத்து நிற்கும் அழுக்காகும். அவையே ஆணவம், கன்மம், மாயை எனப்படும். சித்திகள் என்பன அணிமா, லகிமா, கரிமா, மகிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. திருவடியுணர்வு ஆருயிர்களை மும்மலப் பிணிப்பினின்றும் செம்மையுற விடுவிக்கும். அவ்வுணர்வே கிடைத்தற்கரிய திருவருட் சித்திகளை எய்துவிக்கும். அதுவே சிவலோக வாழ்வினைச் சேர்ப்பிக்கும். அவ்வுணர்வே சிவமாம் பெருவாழ்வையும் கூட்டுவிக்கும்.

திருவடி ஞானம் சிவமயமாக ஆக்கும். திருவடி ஞானம் சிவலோகத்தில் சேர்க்கும். திருவடி ஞானம் சீவனைச் சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும் நீக்கும். திருவடி ஞானமே அணிமாதி சித்திகளையும், முத்திப் பேற்றினையும் அளிக்கும்.

**திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிறைமல மீட்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே**

நினைப்பவரைக் காக்கும் மந்திரமாகவும், தீராத நோயினைத் தீர்க்கும் பெரிய மருந்தாகவும் இருப்பது எம்பெருமானாகிய சிவனின் இணையடிகளே என்பதை,

**"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்**
**தீராத நோய் தீர்த்தருள வல்லான்"**

என ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

***மூடனுக்கு உபதேசித்தால் நட்டம் வருவிக்கும்.***

எந்தை பிரானாகிய அம்மையப்பரின் இணையடிகளே உடல்நோய், உளநோய், உயிர்நோய் ஆகிய மூவகை நோய்களையும் நீக்கக் கூடியவையாகும். உடல், உள்ளம், உயிர், உணர்வு ஆகிய அனைத்திற்கும் அழகினைத் தருவதும் இதுவே ஆகும். சிவனின் இணையடிகளே தூய ஞானநெறியாக நின்று உதவுகிறது. மந்திரமாகவும் பிறவிநோய்க்கு மருந்தாகவும் திருவருளைப் பெறுவதற்குரிய வழிகாட்டியாகவும் அடைந்தார் பெறும் பயன் எய்தும் புண்ணியத் தலங்களாகவும் நன்மையைத் தரும் அழகாகவும், வீடுபேற்றினை அளிக்கும் நெறியாகவும் இருப்பது சிவபிரானது திருவடிகளே ஆகும் என்பதைப் பின்வரும் தமிழ் மந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**மந்திரமாவதும் மாமருந்தாவதும்**
**தந்திரமாவதும் தானங்களாவதும்**
**சுந்தரமாவதும் தூய்நெறியாவதும்**
**எந்தை பிரான்றனி ணையடிதானே**

ஆன்மா தற்போதம் இழந்து சிவ ஞானத்தால் இறையுணர்வில் அழுந்தி நிற்றலை உணர்த்துவது ஞாதுரு ஞான நேயம் எனப்படும். அறிவானாகிய தன்னையும் அறிவாகிய கருவியினையும் மறந்து அறியத்தகு பொருளாகிய இறையுணர்வில் ஆன்மா ஏகனாகி ஒன்றி நிற்றலை இப்பகுதி உணர்த்துகிறது. தன்னையும் இறைவனையும் மறந்து அறியத்தகு பொருளாகிய இறையுணர்வில் ஆன்மா ஏகனாகி நிற்றலை இப்பகுதி உணர்த்துகிறது. தன்னையும் இறைவனையும் தனது உண்மை ஞானத்தாற் கண்டு தான் என்னும் பூவை அவனது திருவடியில் சாத்தினால் நான் என்றும் அவன் என்றும் வேறுபடுத்திக் காணும் உணர்வுமாறி நானே அவன் என்னும் நல்லுணர்வு உண்டாகும்.

மானுடப்பிறவியெடுத்த நம்முடைய முகத்தில் இருப்பது ஊனக்கண். உலகக் காட்சிகளைக் காண்பதற்காகத் தரப்பட்ட ஊனக்கண்ணைப் பயன்படுத்தி அகத்திலே இருந்து ஒளிவீசும் ஞானக்கண்ணைத் திறத்தல் வேண்டும். இதேபோலச் செவிகளின் ஊடாக இறை ஞானத்தைத் தரவல்ல உபதேச மொழிகளைக் கேட்கவேண்டும். திருப்பெருந்துறையிலே குருவடிவம் தாங்கி மணிவாசகனாரை ஆட்கொண்ட பரமசிவன் அவரிடமிருந்த பசு ஞானம், பாச ஞானம் என்பவற்றை நீக்கிப் பதிஞானம் கிடைக்கப் பெற்ற சிறப்பினைக்

**காட்டாதன எல்லாம் காட்டிப்**
**பின்னர் கேளாதன எல்லாம் கேட்பித்து**
**மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்**
**எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே**

எனத் திருவாசகத்தின் திருச்சதகப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

உலகப் பொருள்களை அறியாத ஞானக்கண், கேளாது கேட்ட உபதேசமொழி, குறைதல், நிறைதல் இல்லாத சிவபோகம், பிரிதலும் கூடுதலும் இல்லாத சேர்க்கையாகிய சிவசிவ ஐக்கியம், நாத முடிவான ஞானம், ஆகிய அனைத்தையும் நந்தியெம்பெருமான் தனக்குக் காட்டி அருளினார் எனத் தான் பெற்ற சிவானுபூதி அனுபவத்தைத் தவயோகி பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

*உனக்குக் கஷ்டம் வரும்போது சொல் மனம் லேசாகி விடும்.*

**காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்**
**கோணாத போகமும் கூடாத கூட்டமும்**
**நாணாத நாணமும் நாதாந்த போதமும்**
**காணாயென வந்து காட்டினன் நந்தியே**

அநாதியான இறைவன் உயிர்கள் அடைய நெறியையும் நெருஞ்சில் முள் போன்று ஒதுக்கித் தள்ள வேண்டிய செயல் களையும் படைத்திருக்கின்றான். அறநெறி யில் நின்று தவறுகிறவர்கள் நெருஞ்சில் முள் குத்துவது போன்ற துன்பத்தை அடைவர். அன்பு நெறியாகிய இல்லறத் தையும், அதன் முதிர்வாகிய அருள் நெறி யாகிய துறவறத்தையும் இரு கால்போல அகம் புறம் எனச் சிறப்பித்து இந்துசமயத் திருநூல்கள் கூறியுள்ளன. இத்தகைய நெறிகளில் நில்லாது தீநெறி நிற்போர் அடையும் துன்பங்கள் போல நெருஞ்சில் முள்ளையும் இறைவனே படைத்தருளி னான். நெருஞ்சில் சாதாரணமாக கண்ணுக் குப் புலப்படாத ஒரு முள். ஆனால் பட் டால்ப் பெரும் துன்பத்தைத் தரும். இதே போல அறநெறியில் தவறாது நடப்பவர் களுக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்பட மாட்டாது.

**நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்**
**நெறியின் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்**
**நெறியின் வழுவாது இயங்க வல்லார்க்கு**
**நெறியின் நெருஞ்சில் முள் பாயகில்லாவே.**

(தொடரும்...



**கட்டுரையாளர்களை கௌரவிக்கும் நிகழ் வில் இரா. செல்வ வடிவேல் அவர் களுக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர் கள் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கும் நிகழ்வு.**

உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக.

**நாவலர் பக்கம்:** உ (தொடர்ச்சி...

# திருவிளையாடற் புராண வசனம்

**ஆறுமுகநாவலர்**

**படலம்: 2**

## வெள்ளையானை சாபந் தீர்த்த படலம்

காசியிலே, துருவாச முனிவர் சிவாகம விதிப்படி சிவலிங்கம் ஸ்தாபித்து பூசைசெய்து தோத்திரம் பண்ணி வந்தார். ஒருநாள் சிவபெருமானுடைய திருமுடி யினின்றும் ஒரு தாமரைப்பூ வீழ்ந்தது. துருவாச முனிவர் அதைத் தம்முடைய இரு கரங்களாலும் பக்குவமாக ஏந்தி கண்களிலும் சிரசிலும் ஒற்றிக்கொண்டு சுவர்க்கலோகம் போனார்.

அப்பொழுது, இந்திரன் அசுரர் களைக் கொன்று வெற்றிவீரனாக தன் நக ராகிய அமராவதிக்குத் திரும்பிக் கொண்டு இருந்தான். வெற்றி மாலைகள் அணிந்து, தேவசேனைகள் ஆரவாரம் செய்ய, வேதங் கள் ஓத, வாத்தியங்கள் முழங்க, தேவ மகளிர் இனிமையான குரலில் பாட, வெண் கொற்றக்குடை நிழலில் வெள்ளையானை மேல் பவனி வந்தான். அப்போது, தேவர்கள் அருகேவந்து தங்கள் மனசுக்கு இயைந்த படி கையுறைகளைக் (அன்பளிப்புக்களைக்) கொடுத்து வணங்கி நின்றார்கள். துருவாச முனிவர் இந்திரனுக்கு ஆசிகூறி தம் கையிலிருந்த தாமரைப்பூவை நீட்டினார். இந்திரன் செருக்கினாலே ஒரு கை நீட்டி வாங்கி வெள்ளையானையின்மேல் வைத் தான். வெள்ளையானை தன்மேல் வைக் கப்பட்ட தாமரைப்பூவை கீழே தள்ளி காலினாலே மிதித்தது.

அதுகண்ட துருவாச முனிவர் பெரும் கோபமுற்று, “செல்வச் செருக்கு உடைய இந்திரா! என்ன காரியம் செய்தாய்? தேவர்களின் அன்பளிப்புக்களை மதித்து ஏற்றுக்கொண்ட நீ சர்வலோக நாயகனான சிவனின் முடிமேலே சாத்தப் பட்ட தாமரைப்பூவை வழிபடாது யானை மிதித்து சிந்தும்படி செய்தாயே! மூடா! இந்த சிவத்துரோகத்திற்காக உன்னுடைய சிரசு (தலை) பாண்டியன் ஒருவனுடைய வளையினாலே சிதறக்கடவது. வெள்ளை யானை காட்டுயானையாகக் கடவது” என்று சபித்தார்.

தேவர்கள் பயந்து நடுநடுங்கி துருவாச முனிவரை வணங்கி, “சுவாமி! இந்திரனும் வெள்ளையானையும் கொடும் பாவம் செய்தமையால் சபித்துள்ளீர்கள். தாங்கள் கருணை கூர்ந்து இந்தச் சாபத்தை விலக்கிக்கொள்ள வேண்டும்” என இரந்து நின்றனர். துர்வாசர் திருவுளம் இரங்கி, “சிவநிந்தனை பரிகாரத்தினாலே நீங்காது. இந்திரனுக்கு தலையளவாக வந்தது முடியளவாகப் போகக் கடவது. வெள்ளை யானை காட்டுயானையாகி, நூறு வருடங்களின் பின் முன்போலக் கடவது” என்று பிறிதொரு சாபமிட்டார். (இந்திரன் மகுடபங்கம் அடைந்த வரலாறு பின்னர் சொல்வோம்)

வெள்ளை யானை காட்டுயானை யாகி, மற்றக் காட்டு யானைகளோடு எங்குந் திரிந்தது. நூறு வருடங்கள் செல்ல கடம்ப வனத்துள்ப் புகுந்து பொற்றாமரை வாவி

*பொறுமையே மனிதனுக்கு வேண்டிய நன்மையைத் தருகிறது.*

யைக் கண்டது. அப்போது முன்னைய நல்லறிவு தோன்றி பொற்றாமரை வாவி யிலே ஸ்நானம் செய்ய, அதன் காட்டு யானை வடிவம் நீங்கிப் பழைய வடிவம் தோன்றியது.

சிவபெருமானுடைய திருவருளி னாலே சொக்கலிங்கப்பெருமான் சந்நிதி கண்டு வணங்கியது. தும்பிக்கையினாலே பொற்றாமரை வாவித் தீர்த்தத்தினை உறிஞ் சிச் சென்று அபிஷேகம் செய்தது. பொற்றா மரைப் பூக்களைப் பறித்துச் சாத்தியது. இவ்வாறு சிலகாலம் தவறாது செய்துவர சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டு, "வேண் டும் வரம் யாது" என்று வினாவியருளினார்.

வெள்ளையானை வணங்கி தனக்கு ஏற்பட்ட சாப விபரங்கள் அனைத்தையும் கூறித் தான் இங்கேயே தங்கியிருக்க அருள்புரியுமாறு கேட்டது. சோமசுந்தரக் கடவுள் வெள்ளையானை மேல் அன்பு கொண்டு, "இந்திரன் என்மேல் மெய்யன்பு உடையவன். அவனைத் தாங்குவது என்னைத் தாங்குவது போலாகும். அதனால் நீ சுவர்க்கம் செல்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளி விடைகொடுத்து அனுப்பினார்.

வெள்ளையானை தேவலோகம் சென்று, இந்திரனைத் தாங்கி இனிதே வாழ்ந்திருந்தது.

**படலம்: 3**

## திருநகரங் கண்ட படலம்

கடம்பவனத்தின் கீழ்த்திசையிலே சந்திர குலத்தில் பிறந்த குலசேகர பாண் டிய ராசனுக்கு இராசதானியாய் உள்ளது "மணவூர்". அந்நகரத்திலே சிவத்தொண்டு களை மெய்யன்போடு செய்யும் "தனஞ் சயன்" என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மணவூரிலிருந்து மேற்திசையிலுள்ள பல ஊர்களுக்கும் போய் வாணிபஞ் செய்வது வழமை. ஒருநாள் இவ்வாறு ஊர் திரும்பும் போது இருள் செறிந்து இரவாயிற்று. தனியாக அங்கு இருளில் நின்ற தனஞ் சயன், பேரிருளைப் போக்கி ஒளிதோன்றும் இடம் ஒன்றுகண்டு அதிசயித்தான். அங்கு விரைந்த தனஞ்சயன் சொக்கலிங்கப் பெருமானைக்கண்டு வணங்கி பேரானந்தம் கொண்டு சற்று விலகியிருந்தான். அன்று சோமவாரமாகையினால், தேவர்கள் அங்கு வந்து நான்கு சாமத்திலும் விசேட பூசை செய்தார்கள். சோமவார விரதம் அனுட்டிக் கும் தனஞ்சயன் தான் கோயில் புறத்தே இருந்துகொண்டு, விழித்திருந்து, தேவர்கள் செய்த பூசைகளைக் கண்டு தானும் சோமசுந்தரக் கடவுளை வணங்கி நின்றான். விடிந்ததும் அங்கு தேவர்கள் யாரையும் காணவில்லை. சோமசுந்தரர் மட்டும் தனியே அங்கிருந்தார். தான் கண்ட இந்த அதி சயத்தை குலசேகர பாண்டிய மன்னனிடம் கூறுவதற்காக விரைந்து ஊர்வந்து சேர்ந் தான். கடம்பவனத்திலே தான் கண்ட அத்தனை அதிசயங்களையும் ஒன்றுவிடா மல் மன்னனிடம் கூறினான். இதைக்கேட்ட குலசேகர பாண்டியன் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, அந்த அற்புத நினைவுடனேயே இருந்தான்.

அன்றிரவு சோமசுந்தரர் குலசேகர பாண்டியன் கனவிலே தோன்றி, "கடம்ப வனத்தைத் திருத்தி நகரமாக்கு" எனச் சொல்லி மறைந்தருளினார். விழித்தெழுந்த பாண்டியன் மந்திரிமாரையும் உடனழைத் துக்கொண்டு கடம்பவனம் சென்று, சோம

சுந்தரரைக் கண்டு வணங்கித் துதித்து நின்றான். ஏவலாளர்கள் கடம்ப வனப்பகுதியைத் துப்புரவு செய்தனர். "இங்கே நகரமுண்டாக்குவது எவ்வாறு" என தன் மந்திரிமாருடன் ஆராய்ந்து கொண்டிருந்தான். அப்போது சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்தர் வேடங்கொண்டு பாண்டியன் முன் சென்றார். பாண்டியன் இருக்கை விட்டெழுந்து ஆசனங்கொடுத்து நமஸ்கரித்து நின்றான். சித்தரானவர் தாம் ஆதிகாலத்தில் அருளிச் செய்த சிவாகம வழித்தோன்றிய சிற்பநூல் விதிப்படி ஆலயம் - மண்டபம் - கோபுரம்- நகரம் எவ்வாறு அமைக்கவேண்டுமென விதித்து மறைந்தருளினார்.

பாண்டியன் சிற்பநூல் வல்லுனர்களைக் கொண்டு, சித்தராய் வந்த சிவபெருமான் விதித்தபடியே பதுமண்டபம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், யாகசாலை, மடப்பள்ளி ஆகியவற்றை உண்டாக்கினான். சொக்கலிங்க மூர்த்திக்கு வலப்புறத்தே மீனாட்சியம்மை திருக்கோயிலும், அத்துடன் திருமதில்கள், கோபுரங்கள், திருவீதிகள் என்பனவும் அமைத்தான். கோயிலைச் சுற்றியே வீடுகளும், வீதிகளும், பூந்தோட்டங்களும் சோலைகளும் அமைந்தன. வடகீழ்த்திசையில் தனக்கு மாளிகையும் அமைப்பித்தான்.

நகர நிர்மாண வேலைகள் அனைத்தும் முடிந்ததும் நகரத்தை சாந்தி செய்ய நினைத்தான் குலசேகர பாண்டியன். அவனது எண்ணத்தை அறிந்து கொண்ட சோமசுந்தரக் கடவுள் தமது சடாமுடியிலிருந்து கங்கைநீரை சிறிது சிந்தும்படி செய்தருளினார். அந்நீர் நகரம் முழுக்கப் பரவி சாந்திபெற்ற "மதுர" மயமான தன்மையினாலே அந்நகரம் "மதுரா நகரம்" எனப் பெயர் பெற்றது. (இதுவே பின்னாளில் "மதுரை" என்றாயிற்று) சிவாகம விதிப்படியான நித்திய, நைமித்திய கிரியைகளை ஆற்றுவதற்காக காசியிலிருந்து பிராமணர்களை வரவழைத்து, அங்கேயே குடியமர்த்தினான். ஏனைய கோயிற் கடமைகளுக்காகவும் பலரையும் பணிக்கமர்த்தி அனைத்தும் விதிமுறைப்படி நடக்க வழி செய்தான்.

பாண்டியன் சுப தினத்திலே தனது மாளிகையில் குடியேறி நீதி தவறாது அரசு புரிந்து வந்தான். உரிய காலம் வர அவனது மகன் "மலயத்துவசன்"க்கு முடிசூட்டி அரசனாக்கி மகிழ்ந்து மேலும் சிலகாலம் வாழ்ந்திருந்து சோமசுந்தரரின் திருப்பாதங்களைச் சென்றடைந்தான்.

(தொடரும்....

## அன்பைக் கொடுத்து அன்பைப் பெறு

இறைவன் அறச்செம்மையுடையார்பால் அன்பு வைக்கிறான். பக்குவப்பட்டு அருட்செம்மையுடையார்பால் அருள் வைக்கின்றான்.

ஆன்மாக்கள் இறைவனிடம் அன்பாகிய வித்தை விதைத்தால் அருளாகிய பழம் பழுக்கும். நாம் இறைவனிடம் அன்பு வைக்க வேண்டும். அவன் நம்பால் அருள் வைக்கின்றான்.

பணத்தைக் கொடுத்துப் பண்டத்தைப் பெறுவதுபோல் அன்பைச் செலுத்தி அருளைப்பெறவேண்டும் எனத் தெளிந்துகொள்ளுங்கள்.

**உன் பலவீனத்தோடு போராடி உன்னைப் பலசாலி ஆக்கலாம்.**

உ

# தேவாரங்களில் அறம்பற்றிய சிந்தனைகள்

**திரு இ. சாந்தகுமார் அவர்கள்**

தேவாரங்களில் காணப்படும் அறம் பற்றிய கருத்துக்கு வித்திட்டவர்கள் வேத காலத்து ரிஷிகளும் உபநிடத காலத்து ரிஷிகளும் முனிவர்களும். அன்று கூறி வைத்த கருத்துக்கள் பிற்பட்ட தேவாரங் களில் சிறப்பாக நாயன்மார்கள்மூலம் எடுத் தாளப்பட்டன. இவை குருசீட முறையில் அறம்பற்றிய சிந்தனை வலுப்பெற்றது.

அறமாவது பாவம் அனைத்தையும் பற்றறுப்பது என்பது இந்து அறிவியலின் அடிப்படையாகப் பேசப்பட்டுள்ளது. கழகக் கையகராதியில் அறம் என்பதன் பொரு ளாவது கடமை, தானம், கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியச்செயல், அறக்கடவுள், அறக்காடு எனப்பல பொருளில் வழங்கும் எனத் தமிழ் அகராதி கூறுகின்றது.

நல்ல குணங்களாக தமக்கும் பிறர்க்கும் நன்மைதரும், ஆனந்தம் தரும், செயல்களில் தன்னை நிலைபெறச் செய் தல் ஒழுக்கம், எனவும் ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் மேலான தாகக் கருதப்படும் நிலையில் அவற்றின் மூலம் சேவையுணர்வை வளர்த்து வரு மிடத்து அவை அறச்செயல்கள் ஆகவும் இவையிரண்டின் முதிர்ச்சியும் நிறைவும் 'தருமம்' என்னும் மாபெரும் செயற்றிறன் கொண்ட முடிபாகவும் தெய்வீக சக்தியாக வும் அனுபவத்தில் இவை காணப்படு கின்றன. சாதாரணமாக ஒருவன் வழங்கும் ஈகை, கொடை, தானம் என்ற பண்புகளை யும் கடந்து உலகெலா மாறுவதாகி, உடனாகி, வேறாகி, நீதியாகி, அறமாகி, இறைமையாகி, நிற்குமொன்றாக வழி படற்குரியதாக அமைகின்றது. அந்நிலை யில் அறமே ஆண்டவன் அவனே அறம் வளர்க்கும் நாயகனாக உருவகிக்கப் படுகின்றானோ என்ற சிந்தனையும் விரிவு படுகின்றது.

**"ஆன்ற மெய் அறம் வளர்க்கும்**
**மூன்றுகண் முனித்தலைவனை"**

திருக்கலம்பகம் உரைக்கின்றது.

**"பண்டு நால்வர்க்கு அறம் உரைத்தவன்....."**

எனத் தேவாரமும் சிவனைச் சிறப்பித்த திறமும் உணரக் கூடியதாக உள்ளது.

**"அறவா நீ ஆடும்போது உன்னடிக்கீழ் இருக்க...."**

என காரைக்கால் அம்மையாரும்

**"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்**
**அருளெனும் குழலியும் அமையும்......**
**தெருலுரும் உயிரும் சிவனைச் சேரும்"**

எனவும்

**"ஆதலின் மைந்தர்கள் அறத்தை யாற்றுநீர்**
**தீதினை விலக்குதிர் சிவனையுன்னியே...."**

சூரிய அறிவு படைத்திருந்தாலும் வீண்பெருமை பேசாதே.

எனவரும் பாடல் அடிகளில் அறமே பிறப்பையும் பிறவாமையை அடைவிக்கும் என்னும் பாணியில் - தவம், விரதம், சடங்குகள் என்னும் வழிபாட்டு ஒழுக்கத்தைப் போன்று அறம் செய்தலும் பிறர்க்கு சமூகசேவை செய்யமுடியாவிட்டாலும் தீமை செய்யாமலிருந்தாலும் கூட அறத்தின் பாற்படுத்தும் நியமங்களாகக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன என்ற கருத்தினைக்கொண்டு தேவாரத்தின் அறம் பற்றிய சிந்தனைகளை நோக்கலாம்.


இறைவனே அறத்தின் மூலன் என்றும் அறத்தின் வடிவினன் என்பதையும்

**"அறவன் சேவடி யடைந்தனம்**
**அல்லல் ஒன்றிலமே"** எனக் கூறுகின்றார்.

இறைவன் ஆன்மாக்களின் நன்மை கருதியும் அவர்கள் உடைய இறுதி இலட்சியத்தினை அடைவிக்கும் வகையில் அறத்தினை போதிக்கின்றார்.

**"அழிந்த சிந்தை அந்தனாளர்க்**
**அறம் பொருள் இன்பம் வீடு**
**மொழிந்த வாயாள் முக்கனாதி**
**மேயது முது குன்றே"**

எனக் கூறுகின்றார்.



**ஆச்சிரமம் ஆற்றும் சமூகப்பணிகளின் வரிசையில் 30.01.2009 அன்று கட்டுரையாளர்களை கௌரவித்த நிகழ்வின்போது மருதங்கேணி பிரிவுக்குட்பட்ட பல்கலைக்கழக மட்டத்திற்கு தெரிவான 07 மாணவர்களுக்கான பெறுமதி மிக்க ஆங்கில அகராதியை ஆச்சிரமத்தின் சகல பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் இலங்கை வங்கி இளநிலை அதிகாரி திரு த. கணேசமூர்த்தி அவர்கள் பிரதேச ஊழியரிடம் கையளிக்கும் நிகழ்வு.**

*அறிவாளிக்கும் இயற்கையை உணர்ந்தவனுக்கும் துன்பமே வராது.*

உ

(தொடர்ச்சி...

# 2008ஆம் ஆண்டு தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| திரு சி. சிவசுப்பிரமணியம் ஆனந்தநிலையம் கரவெட்டி | | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம்"செல்வம்ஸ்" சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| தெ. யோகநாதன் | சுண்ணாகம் | 500. 00 |
| திலகரெட்ணம் மூலம் யோகரமணன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| வே. பாண்டியர் | கைதடி | 1000. 00 |
| பி. டிவேஸ் | கைதடி | 1000. 00 |
| பெரியதம்பி பற்குணராசா | உடுவில் | 1000. 00 |
| திருமதி சின்னையா கரணவாய் | கரவெட்டி | 2000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி தம்பசெட்டிவீதி | பருத்தித்துறை | 10000. 00 |
| செல்வராசா யோகராணி | உரும்பராய் (டென்மார்க்) | 5000. 00 |
| திருமதி S. கமலாம்பிகை | சுண்ணாகம் | 500. 00 |
| K.K. வாசன் கே.கே.எஸ் றோட் | கொக்குவில் | 5000. 00 |
| பஞ்சலிங்கம் ஜமுனா | இணுவில் | 1000. 00 |
| சுப்பிரமணியம் நடராசா குடும்பம்<br>திரு அமிர்தலிங்கம் குடும்பம்<br>திரு சுதாகரன் குடும்பம் | புலோலி மத்தி | 10000. 00 |
| திருமதி தங்கலெட்சுமி தேவராஜா | புத்தூர் மேற்கு | 3000. 00 |
| S. புஷ்பநாயகி | வயாவிளான் | 10000. 00 |
| S. ஆறுமுகதாஸ் | வயாவிளான் | 3000. 00 |
| க. கதிர்காமப்பிள்ளை V.M. றோட் | பருத்தித்துறை | 3000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி | 2000. 00 |
| சி. மகாலிங்கம் இராசவீதி | நீர்வேலி | 3000. 00 |
| Dr G. உதயசீலன் சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 2000. 00 |
| சு. பொன்னம்மா மணலாவத்தை | நெல்லியடி வடக்கு | 5000. 00 |
| மு. இரத்தினபூபதி | மீசாலை | 1000. 00 |
| ஏ. தில்லையம்பலம் வீரப்பதிராஜன் | கரணவாய் | 1000. 00 |
| திருமதி இந்துமதி பாலகிருஷ்ணன் வீரப்பதிராஜன் கரணவாய் 60k. அரிசி | | 1000. 00 |
| திரு க. குருபரன், குகன், குமரன் தொண்டைமானாறு (அவுஸ்திரேலியா) | | 25000. 00 |
| வைத்திலிங்கம் இராமகிருஷ்ணா | கொழும்பு | 4000. 00 |
| N. இரட்ணம் | அச்சுவேலி தெற்கு | 3000. 00 |
| மா. சண்முகநாதன் | கரணவாய் மத்தி | 3000. 00 |
| திரு திருமதி முருகதாஸ் குடும்பம் | சாவகச்சேரி | 1000. 00 |
| இலங்கநாதன் இந்துமதி | கனடா | 10000. 00 |

| | | | |
|---|---|---|---|
| செல்வரெட்ணம் துஷிதன் | | சிறுப்பிட்டி மேற்கு | 10000. 00 |
| ச. பத்மநாதன் | தெற்குத்தோப்பு | புத்தூர் | 5000. 00 |
| சின்னத்துரை சோதிமுத்து | மகாத்மா வீதி | நெல்லியடி | 4000. 00 |
| நவரெட்ணம் செங்கோடன் | (மாவிட்டபுரம்) | மீசாலை | 15000. 00 |
| S. கிரிதரன் குடும்பம் | | பிரான்ஸ் | 5000. 00 |
| சி. கிருபாகரன் | | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| திருமதி விக்னேஸ்வரி | | கொழும்பு | 1000. 00 |
| சிவப்பிரகாசம் கருணாகரன் | | கரணவாய் மத்தி | 5000. 00 |
| ஆ. கோகுலன் | | உரும்பராய் | 3000. 00 |
| கு. லோகேந்திரன் | மில் ஒழுங்கை | மல்லாகம் | 1000. 00 |
| க. அரியரெட்ணம் மூலம் கோமதி நவரூபராசா | | அமெரிக்கா | 5000. 00 |
| க. சஞ்சீபன் | | ஊரெழு | 1மூடை அரிசி |
| திருமதி கனகேஸ்வரி | | ஊரெழு | 1000. 00 |
| சிவராசா குடும்பம் | துன்னாலை | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| இரத்தினசோதி ஜசிந்தன் | | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 5000. 00 |
| யோ. போகராஜ் | | வல்வெட்டித்துறை | 8000. 00 |
| M. ராஜ்குமார் | | கோண்டாவில் | 1000. 00 |
| திரு சிவானந்தன் | நெடியகாடு | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திரு ஆறுதிருமுருகன் குடும்பம் | | இணுவில் | 10000. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி (மரக்கறி வகையில்) | 25000. 00 |
| அ. மகாலிங்கம் | வத்தளை | கொழும்பு | 4500. 00 |
| ஏ. அனுசாந்தன் | | குப்பிளான் | 2000. 00 |
| திருமதி பொன்னுத்துரை ஐயர் | | செல்வச்சந்நிதி (கனடா) | 5000. 00 |
| திரு ஆறுமுகம் குடும்பம் | | செல்வச்சந்நிதி (கனடா) | 100டொலர் |
| K. சிவராசா | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| நடராசா பாக்கியம் | | | 1000. 00 |
| சு. சத்தியேந்திரன் | | திருநெல்வேலி | 20k. அரிசி |
| தனேந்திரன் சச்சின் | அல்லைப்பிட்டி | பிரான்ஸ் | 2000. 00 |
| செங்கோ குடும்பம் | | இடைக்காடு | 1000. 00 |
| செ.க. ஸ்ரீஸ்கந்தராசா உபஅதிபர் | | இடைக்காடு | 2000. 00 |
| சி. சிவயோகநாதன் பகீரதன் | | கோண்டாவில் கிழக்கு | 10000. 00 |
| சி. தில்லைமணி | மின்சாரவாரியம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| இராகவன் தம்பி | ரொறண்ரோ | கனடா | 43250. 00 |
| சண்முகவதனி | | நாவலப்பிட்டி | 1500. 00 |
| சு. இராஜகோபால் | | ஊரெழு | 1000. 00 |
| திருமதி சந்திரா வைரவநாதன் | | கனடா | 10000. 00 |
| திருமதி ஞா. பரமநாதன் | | | 1000. 00 |

(தொடரும்...

ஏக்கமும் தூக்கமும் ஊக்கமுள்ளோருக்கு இல்லை.

உ

# மூடர்

**வாரியார் சுவாமிகள்**

**அரகரா வெனா மூடர்:**

ஹரன்- பாவங்களைப் போக்குபவன். சிவ நாமங்களுள் சிறந்த நாமம் இது. துயரங்கள் இன்றி வாழவேண்டுமென்பதே உயிர்களின் நோக்கம். துயரங்கள் நீங்க வேண்டுமானால் இந்த ஹரஹர என்ற திருநாமம் எங்கும் ஒலிக்க வேண்டும்.

**"எல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமுந் துயர் தீர்கவே"**

என்று அருளிச் செய்தார் திருஞானசம்பந்தர்.

புனிதமாகிய அரநாமத்தைக் கூறாது அல்லற்படும் மாந்தர்களின் அறிவின்மையைக் கருதி அடிகள் வருந்துகின்றனர். துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தைத் தரவல்லது இத் திருநாமம். இதனை அறியாது துன்ப நீக்கத்துக்கு வேறுவேறு சாதனங்களை மேற்கொள்வது, கரும்பிருக்க இரும்பைக் கடிப்பது போலும் என்க.

ஹரஹர என்று அனுதினமும் உள்ளம் உருகி உரைப்பவர்க்கு அரிய காரியம் அகில உலகங்களிலும் இல்லை. அமரத்துவத்தையளிக்கவல்லது. பிறவாத பெற்றியைத் தரும்.

**அரகர வென்ன அரியதொன் றில்லை**
**அரகர வென்ன அறிகிலர் மாந்தர்**
**அரகர வென்ன அமரரும் ஆவர்**
**அரகர வென்ன அறும்பிறப் பன்றே**

**-திருமந்திரம்-**

"கந்தவுலகிலே முருகவேளுடைய கொலுவில் அடியார்கள் "அரகரா" (அரோகரா) என்று ஒலிக்கும் ஒலி கடல்போல் முழங்கும்" என்று கொலுவகுப்பில் அடிகள் கூறுகின்றார்.

**"வருசிவ னடியவர் அரகர எனமுறை**
**வழங்கு கடல்போல் முழங்க ஒரு பால்"**

**திருவெணீறிடா மூடர்:**

சிவஞானமயமானது திருநீறு. "சத்திதான் யாதோ வென்னில் தடையிலா ஞானமாகும்" என்ற சித்தியாரது திருவாக்கின்படி ஞானமே சத்தியாகும். ஆதலின் திருவருள் சத்தி சொரூபமானது. "பராவணமாவது நீறு" என்றார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். திருநீற்றினை அணிந்து கொள்வார்க்கு நோயும் பேயும் விலகும் எல்லா நலன்களும் உண்டாகும். சர்வ மங்கலங்களும் பெருகும். தீவினை கருகும்.

எல்லாவற்றையும் தூய்மை செய்வது பசுவின் சாணமேயாகும். அதனால் ஆகிய திருநீறு, உள்ளத்தையும் உடம்பையும் தூய்மை செய்யவல்லது. நிறைய

தவம் புரிந்தவர்க்கே திருநீற்றில் மிக்க அன்பு உண்டாகும். தவம் செய்யாத பாவியருக்குத் திருநீற்றில் அன்பு உண்டாகாது.

எத்தனை பாவங்களைப் புரிந்தவராயினும், பெரியோர்கள் இகழ்கின்ற ஐம்பெரும் பாவங்களைச் செய்தவராயினும், விபூதியை அன்புடன் தரித்து நல்வழிப்படுவாராயின் முன்செய்த பாவங்களினின்றும் விடுபட்டு செல்வம் பெற்று, உலகமெல்லாம் போற்றும் பெருமையடைவார்கள்.

**யாது பாதகம் புரிந்தவ ராயினும் இகழும்**
**பாத கங்களில் பஞ்சமா பாதக ரெனினும்**
**பூதி போற்றிடில் செல்வராய் உலகெலாம் போற்றத்**
**தீது தீர்ந்தனர் பவுத்திர ராகியே திகழ்வார்**

**-உபதேச காண்டம்-**

சிவதீட்சை பெற்று ஒவ்வொருவரும் முறைப்படி திருநீறு பூசி இறைவன் திருவருளைப் பெறவேண்டும்.

திரிபுண்டரமாகத் திருநீறு பூசும்போது, இடையில் துண்டுபடுதல், ஒன்றுடன் ஒன்று சேருதல், அதிகமாக விலகுதல், வளைதல் முதலிய குற்றங்களின்றி அணிதல் வேண்டும். நெற்றி, மார்பு, தோள் ஆகிய இடங்களில் ஆறு அங்குல நீளமும், ஏனைய அங்கங்களில் ஒவ்வோரங்குல நீளமுமாகத் தரித்தல் வேண்டும். மூன்று கீற்றாக அழகாக அணிதல் சிறப்பு.

மூன்று வேளையும் இவ்வாறு திருநீறு திரிபுண்டரமாகப் புனைதல் வேண்டும். முடியாதுபோனால் ஒருவேளையேனும் முறைப்படி திருநீற்றினைத் திரிபுண்டரமாகத் தரித்தவர் உருத்திர மூர்த்தியேயாவர். இவ்வண்ணம் உயர்ந்த திரிபுண்டரமாகத் திருநீற்றினை அணிந்து பதி தருமம் புரிவோர் நிகரில்லாத மும்மூர்த்தி மயமாவார் என்று வேதங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறந்த சாதனமாகிய திருநீற்றினைப் புனைந்து திருவருள் நலத்தைப் பெறாதவர்களை மூடர் என்பதில் என்ன தடை?

**அடிகள் பூசியா மூடர்:**

இறைவனுடைய திருவடிகளைப் பூசித்தலே பிறவியின் பயனாகும். இறைவன் தந்த கரணங்களால் அவரைப் பூசிக்கவில்லையானால் நன்றி மறந்த பாவம் எய்தும்.

பூஜா என்ற சொல் தமிழில் ஐகார ஈறுபெற்றுப் பூஜை என்று திரிந்தது. பூ- மலங்களைப் பூர்த்தி செய்து, ஜா- சிவஞானத்தை உண்டாக்குவது.

பூஜை செய்கின்ற நேரமே நம்முடைய நேரம். பூஜை செய்கின்ற மனிதப் பிறப்பே உயர்ந்த பிறப்பு. பூஜை புரியாத நாள் வீணாளாகும்.

**"உம்பர்கள் ஸ்வாமி நமோநம எம்பெரு மானே நமோநம**
**ஒண்டொடி மோகா நமோ நம என நாளும்**
**உன்புக ழேபாடி நானினி அன்புட னாசார பூசைசெய்**
**துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே"**

**-திருப்புகழ்-**

பூஜை செய்யத் தொடங்குமுன் இந்தத் திருப்புகழ் அடிகளைக் கூறி இறைவனைத் தியானிக்க வேண்டும்.

**அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே, நீ சாகும்வரை அறிவுக்கதவு திறந்திருக்கட்டும்.**

**கரையேற அறிவுநூல் கலாமூடர்:**

பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்த உயிர்கள் ஆசாரியனாகிய மீகாமனோடு கூடிய சாத்திரமாகிய கப்பலில் ஏறவேண்டும் என்க. ஏறினால் முத்தியாகிய கரை ஏறலாம்.

உலகிலுள்ள நூல்கள் யாவும் நம்மை உய்விக்காது. கற்கத் தகுந்த நூல்களையே கற்கவேண்டும். அதனாலேயே திருவள்ளுவர் "கற்க கசடற கற்பவை" என்றனர். அறிவு நூல்களாவன; பன்னிரு திருமுறைகளும் பதின்னான்கு மெய்கண்ட நூல்களும் அதன் வழி நூல்களுமாகும். சிவஞானபோதம் முதலிய ஞான சாத்திரங்களே நமது ஐயந்திரிபு மயக்கங்களை அகற்றிச் சிவப்பேற்றை அளிக்கும்.

அநபாயன் என்ற சோழமன்னன் சீவகசிந்தாமணி என்ற அவநூலைப் படித்தபோது, அமைச்சராகிய சேக்கிழாரடிகள் "ஏ மன்னர் பெருமானே! இது அவநூல். இதனை நீ பயில்வதனால் பயனில்லை. சிவநூலைப் படிக்கவேண்டும். கரும்பு இருக்க இரும்பு கடித்தல் கூடாது" என்று அறிவுரை கூறினார்.

ஆதலின், அட்டைப் பகட்டுடன் கூடி வெளிவந்துலாவும் அறிவை மயக்கும் நூல்கள் பல. அறநெறியைத் தாங்கி நிற்கும் நூல்கள் சில. ஆதலின் அறநெறியைத் தாங்காத நூல்களை வாங்கிப் படிக்காமல், ஆன்றோர்கள் கூறிய அறிவு நூல்களைப் படித்து உலகம் உய்வதாக.

**நெறியிலே நிலா மூடர்:**

நெறி என்பது வழி என்க. ஒரு ஊருக்குப் போகவேண்டும் என்று நடப்பவன், கண்ணிற்கண்ட வழிகளில் எதுவாயினும் அதிலே நடக்கமாட்டான். எந்த வழியிற் சென்றால் குறிப்பிட்ட இடத்திற்கு போய் சேரலாமோ அந்த வழியில்த்தான் நடப்பான். அதுபோல், பரகதியை நாடிவந்த நாம் உலகில் காணப்படும் அவநெறிகளிற் செல்லாது, தவநெறியிற் செல்லுதல் வேண்டும். அந்த தவநெறி இறைவன்பால் வேண்டிப்பெறுதல் வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்துறையூரில் இறைவன்பால் தவநெறியை வேண்டிப் பெற்றனர்.

"தவநெறி தனைவிடு தாண்டு காலியை" என்றார். கூந்தலூர்த் திருப்புகழில் கால்போன வழியிலே நடக்கும் பேதையைப் போல் மனம்போன வழியிலே சென்று இடர்படுவோர் மூடர்கள் ஆவார்கள்.

**அறம் விசாரியா மூடர்:**

அறம் எது? அறம் அல்லாதது எது? என்று ஆராய்ந்து அறத்தைக் கடைப்பிடித்து, அறப் பண்புடன் வாழ்தல் வேண்டும். அறம் உயிர்க்கு உறுதிசெய்வது. "அறனை மறவேல்" என்றார் ஔவைப் பிராட்டியார். இறைவனுக்கு அறமே வடிவாகிறது.

இறைவன் சூரபத்மனுக்கு எண்ணில்லாத வரங்களை வழங்கியபோது, 1008 அண்டங்களையும் ஆள்வாய்- அறநெறியினின்றும் வழுவுவாயென் நமது சக்தி உன்னை வெல்லும் என்று அருளிச் செய்தனர். ஆதலில் அறநெறியினின்றும் வழுவுதல் கூடாது.

உலகுக்கு அறிவுரை பகரவந்த ஔவையார் தொடக்கத்தில் "அறம் செய்ய விரும்பு" என்று கூறியதையும், திருவள்ளுவர் நீத்தார் பெருமை கூறிய பின் "அறன்

வலியுறுத்தல்'' என்ற அதிகாரத்தினைக் கூறியதையும் உற்று நோக்குக.

அதிகார இயைபு கூறவந்த பரிமேழலகர், "அம் முனிவரால் உணர்த்தப்பட்ட (அறம் பொருள் இன்பம் என்ற) அம் மூன்றினுள், ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்து'' என்று கூறுமாறு காண்க.

**சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு**

**-திருவள்ளுவர்-**

**நரகேழிற் புரள வீழ்வர்:**

மேலே கூறிய மூடர்கள் ஏழு நரகங்களில் புரண்டு துன்புறும் பொருட்டு வீழ்வார்கள்.



**கௌரவிப்பு நிகழ்வின்போது நல்லை ஆதீன முதல்வருடன் கௌரவிக்கப்பட்டவர்களில் திரு க. கனகராசா, திரு சிவ. ஆறுமுகசாமி மற்றும் திரு க. ஆனந்தராசா ஆகியோர் காணப்படுகின்றனர்.**

உ

# ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங்களை [2006 வைகாசி - 2008 மார்கழிவரை] வழங்கியோரை கௌரவிக்கும் நிகழ்வு 30.01.2009



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப் பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு தொடர்ந்து ஆக்கங்கள் வழங்குவோரைக் கௌரவிக்கும் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 30.01.2009 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

**தலைமையுரை:**

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கிய திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் தனதுரையில் இம்மலரானது பல சிறப்புக்களுடன் மாதாந்தம் வெளிவருவது போற்று தற்குரியது. இதற்கு மூல வேராக ஆச்சிரமமும், ஆக்கங்களை வழங்கிவருகின்ற சான்றோரும் ஆவார்கள். அவ்வகையில் மலர் வெளியிட்டகாலம் 1998 - 2008 வரை மூன்று முறை ஆக்கங்களை அளித்தோர் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். இச்செயற்பாடானது வேறெங்கும் காணமுடியாதுள்ளது. இச்செயல்மூலம் கட்டுரையாளர்களை ஊக்கப் படுத்துவதோடு வளர்ந்துவரும் இளம் சமுதாயத்திற்கும் ஊன்றுகோலாக ஞானச்சுடர் மலர் பேணப்படுகின்றது என்று கூறி நிகழ்வினை வழிநடாத்தினார்.

**ஆசியுரை:**

ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை சிறப்பித்துக் கூறியதோடு இம் மலரின் வளர்ச்சி 11வருடம் கடந்து 12ஆம் ஆண்டு காலடி வைப்பதென்பது ஒரு பெரிய சாதனையாகும் என்று கூறியதோடு தொடர்ந்து மலருக்குரிய ஆக்கங்கள் வழங்குவோரும் மனம் சலிப்படையாது வழங்குவதற்கு இந்நிகழ்வானது சான்றாக அமைகின்றது. கடந்த பதினொரு வருடத்தில் மூன்றாவது முறையாக இந்நிகழ்வு இங்கே நடைபெறுவது போற்றுதற்குரியது என்று கூறி தனது ஆசியுரையை நிறைவுசெய்தார்.

**வாழ்த்துரை:**

புராண வித்தகர் திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள் தமது வாழ்த்துரைமூலம் ஆச்சிரமம் ஆற்றும் பணிகள் யாவும் மிக நேர்த்தியாகவும் மற்றவர்கள் போற்றுதற்குரியன வாகவும் விளங்குகின்றது. இப்பணிகள்மூலம் சந்நிதி வேற்பெருமானின் அருளாட்சி இங்கு பூரணமாக செயற்படுகின்றது என்று கூறியதோடு ஆச்சிரமத்தின் பணிகள் மென்மேலும் மெருகேற வேண்டும் என்று தனது வாழ்த்துரைமூலம் வாழ்த்தி வேண்டினார்.

**சிறப்புரை:**

ஞானச்சுடர் மலரின் வளர்ச்சிப் படிகள் எனும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரியரும் எழுத்தாளருமாகிய ஐ. சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்தம் உரையின் மூலம் ஆரம்பகால ஞானச்சுடர் மலர் தொட்டு இற்றைவரை வெளிவந்து கொண்டிருக்கும் மலர்களின் பலவிதமான வளர்ச்சியினை சபையில் உள்ளவர்களுக்கு எடுத்துக்கூறியதோடு தானும் ஒரு எழுத்தாளன் என்ற வகையில் இந்நிகழ்வானது ஒரு காத்திரமான செயற்பாடு என்றுகூறி இப்படியான நிகழ்வுகள் இங்கே மட்டுமல்லாமல் பல மலர் வெளியீடுகளின்போதும் இடம்பெறுவதன்மூலம் கட்டுரையாளர்கள் புதுப்பொலிவுடன் வலம்வருவார்கள் என்பது திண்ணம் என்று உறுதிபடக்கூறியதன்மூலம் தனது எண்ணக்கருத்தை வெளிப்படுத்தி தனது சிறப்புரையை நிறைவு செய்தார்.

சிறப்புரையினைத் தொடர்ந்து ஞானச்சுடர் மலருக்கு தொடர்ந்து ஆக்கங்களை வழங்குவோர் வரிசையில் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் தனது ஆக்கங்கள் தொடர்பான அனுபவங்களை சிறப்பான முறையில் பகிர்ந்து கொண்டதுடன் ஞானச்சுடர் மலரின் சிறப்பினையும் எடுத்துக்கூறினார். அடுத்து கட்டுரையாளர் வரிசையில் திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் தனது கருத்துக்களையும், ஆக்கங்கள் எவ்வாறான எழுத்தாற்றலுடன் நேர்த்தியாக வரவேண்டும் என்பதையும், மக்களுக்கு இலகுதமிழில் கருத்துக்கள் சென்றடைய வேண்டுமெனவும் விளக்கிக் கூறினார்கள்.

தைமாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தம் நிகழ்த்த மலருக்காகிய மதிப்பீட்டுரையினை அதிபர் ஆ. சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து 2006 வைகாசி- 2008 மார்கழி வரை ஆக்கங்களை வழங்கியோரை நான்கு பிரிவாகப் பிரித்து பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

*பெரும் செல்வமும் திருப்தியும் ஒன்றி வாழ்வதில்லை.*

1. கோபுர கேடயமும் பொன்னாடையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டோர்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**
**திரு காரை எம்.பி. அருளானந்தன்**
**திரு சிவ. சண்முகவடிவேல்**
**திரு இராசையா ஸ்ரீதரன்**
**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்**
**திரு செ. கந்தசத்தியதாசன்**

2. தாமரைப்பூ கேடயமும் பொன்னாடையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டோர்.

**திரு இரா. செல்வவடிவேல்**
**திருமதி சந்திரலீலா நாகராசா**
**திரு கு. அப்பாத்துரை**
**திரு இ. சாந்தகுமார்**
**திரு நா. நல்லதம்பி**
**திரு மூ. சிவலிங்கம்**

3. வட்டக்கேடயமும் பொன்னாடையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டோர்.

**திரு த. சுகந்தன்**
**திரு க. நித்தியதசீதரன்**
**திரு க. தெய்வேந்திரம்**
**திரு கு. நவரெத்தினராசா**
**திரு R.V. கந்தசாமி**
**திரு க. கனகராசா**
**திரு ஐ.கோ. சந்திரசேகரம்**
**திரு பொன். சுகந்தன்**
**திரு நயினை விஜயன்**
**திரு T. நாகராசா**
**திரு ஆலயமணியன்**
**திரு கு. குணாளன்**
**திரு இரா. ஸ்ரீநடராசா**
**திரு சிவ. ஆறுமுகசாமி**
**திரு க. ஆனந்தராசா**
**திரு Dr V. பாலகிருஷ்ணன்**
**திரு ஐ. அரசபிள்ளை**
**திரு ஐ. சண்முகலிங்கம்**

4. பொன்னாடை வழங்கிக் கௌரவிக்கப்பட்டோர்

**செல்வி துஷ்யந்தி சந்தரகுலம்**
**திரு செல்லத்தம்பி சுரேந்திரா**
**திரு K.K. யோகேந்திரன்**
**திரு ஆ. தில்லையம்பலம்**

அடுத்து தைமாத ஞானச்சுடர் மலர் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. ஆச்சிரம சுவாமிகள் மக்களுக்கு ஆச்சிரமத்தின் படிநிலை வளர்ச்சிகள்பற்றி கூறியதோடு ஆக்கங்களை வழங்குவோருக்கு சில வேண்டுகோள்களையும் முன்வைத்து அன்றைய நிகழ்வினை சிறப்பித்த அனைவருக்கும் ஆச்சிரம சார்பில் நன்றி கூறியதுடன் தொடர்ந்து 63 நாயன்மார் குருபூசையுடன் மாகேசுவர பூசையும் நடாத்தப்பட்டு நிகழ்வுகள் இனிதே முடிவடைந்தது.

*பணக்காரரை அழிப்பதன்மூலம் ஏழைகளுக்கு உதவமுடியாது.*

ஞானச்சுடர்

உ

(தொடர்ச்சி...

# ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*70. நூல் பல கல்*

ப-ரை. நூல்பல- (அறிவை வளர்க்கிற) நூல்கள் பலவற்றையும், கல்- நீ கற்றுக்கொள்.

*71. நெற்பயிர் விளை*

ப-ரை. நெற்பயிர்- நெல்லுப்பயிரை, விளை- (நீ வேண்டிய முயற்சி செய்து) விளைவி.

*72. நேர்பட ஒழுகு*

ப-ரை. நேர்பட- (உன் ஒழுக்கம் கோணாமல்) செவ்வைபட, ஒழுகு- நீ நட.

*73. நைவினை நணுகேல்*

ப-ரை. நை- (பிறர்) கெடத்தக்க, வினை- (தீ) வினைகளை, நணுகேல்- (நீ ஒருபோதும்) சாராதே.

*74. நொய்ய உரையேல்*

ப-ரை. நொய்ய- (பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல்- (நீ ஒருபோதும்) சொல்லாதே.

*75. நோய்க்கு இடங் கொடேல்*

ப-ரை. நோய்க்கு- வியாதிகளுக்கு, இடங்கொடேல்- (அவபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங்கொடாதே.

*76. பழிப்பன பகரேல்*

ப-ரை. பழிப்பன- (அறிவுடையார்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழி சொற்களை, பகரேல்- நீ பேசாதே. இழிசொற்களாவன: பொய், குறளை, கடுஞ்சொல் பயனில் சொல் என்கின்ற நான்குமாம்.

*77. பாம்பொடு பழகேல்*

ப-ரை. பாம்பொடு- (பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற) பாம்பைப் போன்றவர்களுடனே, பழகேல்- நீ சவகாசஞ் செய்யாதே.

*78. பிழைபடச் சொல்லேல்*

ப-ரை. பிழைபட- வழுக்கள் உண்டாகும்படி, சொல்லேல்- (நீ ஒன்றையும்) பேசாதே.

*79. பீடு பெற நில்*

ப-ரை. பீடு- பெருமையை, பெற- பெறும்படியாக, நில்- (நீ நல்லவழியிலே) நில்.

*80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்*

ப-ரை. புகழ்ந்தாரை- உன்னைத் துதி செய்து அடுத்தவரை, போற்றி- (கைவிடாமற்) காப்பாற்றி, வாழ்- நீ வாழு.

(தொடரும்....

உ

# சந்நிதியான் ஆச்சிரமம் வாழி நீடு.....

**விகடகவி மு. திருநாவுக்கரசு அவர்கள்**

பஞ்சமும் பசியும் வாட்ட
பசித்துடல் துடிதுடிக்க
தஞ்சமெமக் இல்லை யென்று
தவித்துளம் பதைபதைக்க
கஞ்சிக்கும் வழி அறியார்
காசு பணம் கண்டறியார்
நெஞ்சத்தில் கவலை கொண்டு
நித்தமும் வாழ்ந்திடுவார்
துஞ்சியே மாழ்வது அன்றி
துணையில்லை என்றவர்க்கு
அஞ்சிட வேண்டாமென்று
ஆதரிக்கும் ஆச்சிரமம்

பசியுடன் வருவோற் கெல்லாம்
பாய் விரித்து அமர வைத்து
ஆசிகள் பலவும் நல்கி
அன்புடன் வரவேற்று நின்று
நேசித்து உபசரித்து நாளும்
நீரதும் பருகத் தந்து
புசித்திடப் பருப்பும் சோறும்
பூசனிச் சாம்பாரும் ஊற்றி
பசியதைப் போக்கும் பாங்கு
பாருக்கோர் உவமையன்றோ?
ஆசிகள் பலவும் பெற்றீர்
அற்புதத் தொண்டு வாழி!

அன்பதும் பண்பும் சேர
ஆற்றிடும் சேவைகண்டோம்
இன்புறு இச் சேவைக்கீடு
ஈழத்தில் எங்கு கண்டீர்
துன்பத்தா‌ல் துவண்டு போகும்
துணையிலா ஏழைகட்கு
அன்னமிட்டுப் பசியைப் போக்கும்
அற்புதச் சேவையன்றோ?
எண்ணரும் இச் சேவை தன்னை
ஈசனார் உவந்தே ஏற்பர்
நன்று நன்றுமது சேவை
நாநிலம் வியக்கு தன்றோ!

வெற்றி ஒரு வெடி. அது தானாக வெடிக்காது, நீதான் அதற்கு தீமூட்ட வேண்டும்.

அன்பதும் சிவமும் வேறென்று
அறிவிலார் அறியச் சொல்வார்
அன்பது சிவமே என்று
அறிவுளோர் அறியச் சொல்வார்
அன்பொடு அன்னம் இட்டால்
அது சிவத் தொண்டே என்றார்
அன்பின்றி அன்னம் இட்டால்
ஆகும் பலன் எதுவுமில்லை
அன்பொடு குழைத்துச் சோற்றை
அருகிருந்து அன்பாய் ஊட்ட
அன்பர்க்கு அன்பனான அண்ணல்
ஆறுமுகன் காப்பான் உம்மை

ஆரிந்த சேவைக் கெல்லாம்
அதிபதி என்று கேட்டால்
பேரின்றி சேவை செய்யும்
பெருமக்கள் ஒன்றுகூடி
தேரினில் பவனி வந்த
தெய்வமாம் முருகன் என்றார்
பாரினில் இது போன்றோரை
பார்ப்பதே அரிது என்பேன்

பேர் ஊரைச் சொல்லா வண்ணம்
பெரும் தொண்டு செய்தால் மட்டும்
கார் மேக வண்ணன் கந்தன்
கருணைமா மழை பொழிவானன்றோ
ஊர் பேரைச் சொல்லிச் செய்தால்
உலகத்தார் புகழ்வரன்றி
சீர் மேவு சிவலோகத்திற்கு
செல்வது அரிதாம் கண்டீர்

வாழ்க உம் அரிய தொண்டு
வானவர் வியந்து போற்ற
வாழ்க நற் தொண்டர் எல்லாம்
வயிறார உணவு நல்கி
வாழ்க நும் சைவத் தொண்டு
வையகத்திற் கோர் உவமையாக
வாழ்க சீர் அடியார் எல்லாம்
வையகத்து நிலைத்து வாழி.

உ

# செய்திச் சிதறல்

- திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர் அருள்திரு நமசிவாய மூர்த்திகளின் மகரத் தலைநாள் குருபூசைவிழா 24.01.2009 தொடக்கம் 02.02.2009வரை தொடர்ந்து 10 நாட்கள் நிகழ்வு இடம்பெற்றது.

- ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் நூல் கண்காட்சி 10.02.2009 அன்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்களின் "நாடகம் நாட்டியம்" நாடகநூல் வெளியீடும் அவைக்காற்றுகையும் நிகழ்வு யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் 11.02.2009 அன்று இடம்பெற்றது.

- அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் சைவப்புலவர் தேர்வு வழிகாட்டல் வகுப்புக்கள் 14.02.2009 அன்று தொடக்கம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் சைவப்புலவர் சங்கத்தின் 48ஆவது ஆண்டுநிறைவும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் 01.03.2009 அன்று நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

- யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வருடாந்தம் நடாத்தும் புண்ணிய நாச்சியார் தின நிகழ்வு 19.02.2009 அன்று நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

- சந்நிதியான் ஆச்சிரமத்தில் 20.02.2009 வெள்ளிக்கிழமையன்று நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என வாராந்த வெள்ளி நிகழ்வில் கூடியிருந்த அடியார்கள் அனைவரும் இணைந்து அமைதிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

- சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தியை முன்னிட்டு உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் "ஆளுமை" பற்றிய தலைப்பில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் கருத்துக்களை வழங்கினார்.

- சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஓராண்டு தினத்தையொட்டி அன்னாரது வாழ்க்கைவரலாறு நூல் வெளியிடப்படவுள்ளது.

*உண்மையான வள்ளல் எவனோ அவனே உண்மையான அரசன்.*

அந்நூலுக்கு பிரசுரிக்கக்கூடிய விடயங்களை தந்துதவுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டியுள்ளது.

- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளராக 13 வருடமாகக் கடமையாற்றிய உயர்திரு தி. சிவதெட்சணா மூர்த்தி வடமாகாணப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

- தேசிய கலை இலக்கிய போட்டிகள் பிரதேச செயலகங்கள் ஊடாக 3 பிரிவாக நடாத்தப்பட உள்ளன. போட்டியில் பங்குபற்றுபவர்கள் பிரதேச கலாச்சார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு விபரங்களை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

- நாட்டில் அமைதிவேண்டி இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து நல்லை ஆதீனத்தில் 22.02.2009 அன்று இந்துக் குருமார்கள், ஆதீன குருமுதல்வர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரும் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட தினங்கள்

**பங்குனி**

**03.03.2009** **மாசி 19 செவ்வாய்**
கார்த்திகை விசேட உற்சவம்

**26.03.2009** **பங்குனி 13 வியாழன்**
வருடாந்த சகஷ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8மணி சங்குப்பூசை
10மணி சங்காபிஷேகம்
11மணி சண்முக அர்ச்சனை
பகல் 12மணி விசேட உற்சவம்


**28.03.2009** **பங்குனி 15 சனி**
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8மணி சங்குப்பூசை
10மணி சங்காபிஷேகம்
11மணி சண்முக அர்ச்சனை
பகல் 12மணி விசேட உற்சவம்

**30.03.2009** **பங்குனி 17 திங்கள்**
கார்த்திகை விசேட உற்சவம்

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சிலர் அமைதியான முறையில் மௌன மாகவும் அடக்கமாகவும் வழிபாடு செய்வார் கள். இன்னும் சிலர் முருக நாமங்களை உச்சரித்தும் தேவார திருவா கங்களை ஓதியவாறும் வழிபடுவார்கள், வேறு சிலர் உரிமையுடன் கதைத்து கண்ணீர்விட்டு தமது துன்பங்களை சந்நிதியானிடம் ஒப்பு வித்து உணர்வுபூர்வமாக வழிபாடு செலுத்து வார்கள். இன்னும் சிலர் இதைவிட ஒருபடி மேலே சென்று வாய்விட்டுப்பேசி, தேவை ஏற்படின் அதட்டி மிகவும் நெருக்கமான உறவுக்காரருடனோ அல்லது நண்ப ருடனோ உரையாடுவதுபோன்று தமது பக்தியை வெளிப்படுத்துவதையும் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனாலும் சந்நிதியான் இவர்கள் எல்லோரது வழிபாடுகளையும் அகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அவர் களுக்கு அருள்பாலித்துவருவதை நாம் காணமுடிகிறது. அதுமட்டுமல்ல தமது அடியார்கள் அறியாமற் செய்கின்ற தவறு களை மன்னித்து வழிப்படுத்துகின்ற ஒரு

மக்கள்தொகை அதிகம்தான், ஆனால் அதில் மனிதர்கள் சிலரே.

கருணைத் தெய்வமாகவும் சந்நிதியான் விளங்குகின்றான்.

இதேபோன்று சந்நிதியானை வழிபட வருகின்ற அடியவர்களும் சந்நிதியான் மீது கொண்ட மிகுந்த பக்தியினால் ஆலயத்திற்கு ஒவ்வாத எவ்விதமான செயற்பாடுகளையும் அங்கே செய்வதில்லை. மேலும் அந்த ஆலயத்தை கேளிக்கைக்கான ஒரு இடமாகவும் கருதிச் செயற்படுவதில்லை.

அவ்வாறு அல்லாமல் சந்நிதியில் ஒருவர் தெரிந்தே தவறுகளைச் செய்தாலோ அல்லது ஆணவத்துடன் செயற்பட்டாலோ அந்தச் செயற்பாடுகள் நீண்டகாலம் அங்கே தொடர்ந்து நீடிப்பதில்லை. அந்தச் செயற்பாடுகளைச் செய்தவர்கள் இறுதியில் மற்றவர் பார்த்து பரிதாபப்படக்கூடிய நிலைக்குத்தான் தள்ளப்படுவார்கள். காலம் காலமாக இது சந்நிதியில் நடைபெற்று வருவதை நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். அது மட்டுமல்ல தற்பொழுதும் எமது கண்முன்னாலேயே இவ்விதமான சம்பவங்கள் நடைபெறுவதையும் நாம் காணமுடிகின்றது.

1950ஆம், 1960ஆம் ஆண்டு தசாப்த காலங்களில் ஆலயங்களில் உற்சவ நிகழ்வுகளின்பொழுது நாதஸ்வரக்கச்சேரி, தவில்க்கச்சேரி என்பன இடம்பெற்றதுடன் ஆலயச்சூழலில் வானுயரச் சப்பறம் கட்டி மற்றும் வாழை, மூங்கில் முதலானவற்றால் சோடனை செய்தும் திருவிழாக்களை கோலாகலமாக நடாத்தி மகிழ்கின்ற ஒரு சாதகமான சூழ்நிலை நிலவியது.

இவ்வாறான திருவிழாக்களில் எல்லா வயதுப்பிரிவினரும் பங்குபற்றி பார்த்து மகிழுகின்ற ஒரு மகிழ்ச்சியான காலகட்டமாகவும் அது விளங்கியது. உற்சவ காலங்களில் ஆலயங்களில் எல்லோரும் ஒன்றுகூடி ஆண்டவனை மகிமைப்படுத்தல், சிறப்படையச் செய்தல் என்ற வகையில் இவ்வாறான விழாக்கள் எல்லா மட்டத்தினராலும் வரவேற்கப்பட்ட ஒரு விடயமாகவே விளங்கியது.

இவ்வாறான விழாக்களின் உச்சக்கட்டமாக வல்வை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் கிருபானந்த வாரியாரின் இசைச் சொற்பொழிவு, சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் இசைக்கச்சேரி, வல்வை முத்துமாரியம்மன் ஆலயத்தில் L.R. ஈஸ்வரி, கோவை சௌந்தரராஜன் ஆகியோரின் பக்திப்பாடல், ராஜசுலேசனா குழுவினரின் நடன நிகழ்ச்சி என தென்னிந்தியாவிலிருந்தும் புகழ்பூத்த கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு ஆலயங்களுக்கும் வருகைதந்து உற்சவ நிகழ்வுகளை சிறப்படையச் செய்ததும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயற்பாடுகளால் ஆலய உற்சவங்களில் மக்கள் கூட்டம் அலை மோதுகின்ற ஒரு சூழல் அப்பொழுது நிலவியது.

மேலும் 1970ஆம் ஆண்டு தசாப்தத்தில் இறக்குமதித் தடைச்சட்டங்களால் செத்தல் மிளகாய் போன்ற உப உணவுப் பொருட்களின் விலைகள் மிக உச்ச நிலைக்குச் சென்றதால் யாழ்ப்பாணத்து விவசாயிகள் யாழ்ப்பாணத்திலும், வன்னி நிலப்பரப்பிலும் இவற்றை செய்கை பண்ணி குறுகிய காலத்தில் செல்வந்தர்களாக மாறுவதற்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது. இதனால் இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வன்னி நிலப்பரப்புக்குச்சென்று குடியேறியதையும் அவர்களுடைய சந்ததி

***மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முயற்சிக்காதே.***

யினர் இன்றும் வன்னியில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் இவ்விடத்தில் வெளிப் படுத்துவது பொருத்தமானது. மேலும் இத்தகைய சமுதாய மாற்றங்களை வெளிப் படுத்தும் வகையில் "வெளிக்கிடடி விசுவமடுவுக்கு" போன்ற நாடகங்களும் மற்றும் "அண்ணே றைற்" போன்ற ஓரங்க நகைச்சுவை நாடகங்களும் உற்சவ காலங்களில் சில இடங்களில் மேடை ஏற்றிய நிகழ்வுகளையும் நாம் மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது.

இவ்வாறு சமுதாயத்தில் ஏற்பட்டுச் சென்ற பல்வேறு மாற்றங்களின் ஓர் அங்க மாக இன்னொரு நிகழ்வும் ஆலய உற் சவங்களில் அக்காலத்தில் பிரபல்யம் அடையத்தொடங்கியது. ஆம் ஆலய உற் சவங்களில் இரவுத் திருவிழாக்களில் மேளக்கச்சேரியைத் தொடர்ந்து "சின்ன மேளம்" என்ற பெயரில் இளம் பெண்களின் நாட்டிய நிகழ்ச்சிகள் அறிமுகமாகியது.

இந்த நாட்டிய நிகழ்வு தென் இந்திய ஆலயச்சூழலில் ஆடற்கலை களாக நிகழ்த்தப்பட்டதாக நாம் அறிய முடிந்தாலும் யாழ்ப்பாணத்தில் சின்ன மேளம் என்ற பெயரில் நிகழ்த்தப்பட்ட இந்த நாட்டிய நிகழ்வுகள்பற்றி பல விமர் சனங்கள் தெரிவிக்கப்பட்டன. போட்டித் திருவிழாக்களை நடாத்துதல், அதிகளவு மக்களை ஒன்றுகூடச் செய்தல் என்ற குறு கிய நோக்கங்களின் அடிப்படையில் எமது கலாச்சாரத்திற்கு ஒவ்வாத தரம் குறைந்த நாட்டிய நிகழ்வுகளும் நடாத்தப்பட்டதால் இந்தச் சின்னமேளங்களுக்கு எதிராக சில இடங்களில் எதிர்ப்புக்களும் தெரிவிக் கப்பட்டன.

இவ்வாறான விமர்சனங்கள் இருந்த பொழுதிலும் அந்தந்தக் காலங்களில் பிரபல்யமான செயற்பாடுகளை தங்கள் தங்கள் திருவிழாக்களில் செயற்படுத்தி திருவிழாக்களை சிறப்பாக்க வேண்டும் என்று திருவிழாவை நடாத்துபவர்கள் சிந்திப்பதையும் பெரிய தவறாகக் கொள்ள முடியாதெனவும் இன்னும் சிலர் கருத்துக் களை முன்வைத்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில்த்தான் ஏனைய ஆலயங்களைப்போலவே சந்நிதி ஆலயத்தின் உற்சவத்திலும் இந்தச் சின்ன மேள நிகழ்வை நடாத்துவதற்கு சிலர் விரும்பியிருந்தாலும் அவ்வாலயத்தில் இவ் வாறான நிகழ்வுகளை நடாத்துகின்ற வழக் கம் இல்லாதபடியால் அதனை அங்கே நடாத்துவதற்கு யாரும் முயற்சிக்கவில்லை.

ஆனாலும் 1960ஆம் ஆண்டு தசாப் தத்தில் ஒரு திருவிழாவின்பொழுது இத் தகைய வழக்கங்களையும் பொருட்படுத் தாது ஒரு சிலர் இவ்வாறான சின்னமேள நிகழ்வு ஒன்றை சந்நிதியில் நடாத்துவதற்கு திட்டமிட்டனர். அதற்கு ஆலய பூசகர் ஒருவரும் சம்மதம் தெரிவித்த நிலையில் சந்நிதி ஆலயத்தில் சின்னமேள நிகழ்வு ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

அங்கே பெரியமேளக்கச்சேரி முடிவடைந்து சின்னமேளம் ஆரம்பமாவதற் கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எதிர்பார்த்ததுபோல் சின்ன மேளமும் ஆரம்பமாகிவிட்டது. சின்னமேளம் ஆரம்பமாகி அதில் நாட்டியம் ஆடுபவர்கள் வழமைபோல் தாம் பாடுகின்ற அந்த முதற் பாட்டினையும் பாட ஆரம்பித்துவிட்டார்கள். ஆம் பாடலைப் பாடிமுடியவும் அங்கே அந்த அதிர்ச்சி தரும் நிகழ்வு நடந் தேறியது.....

(தொடரும்...

**வலுவான காரணங்கள் வலுவான செயல்களை உருவாக்குகின்றன.**

உ

# வண்ணமயில் மீதேறி வந்தெமக் கருளுவாயே!

திரு எம்.கே. இளையப்பு அவர்கள்

மின்னனைய வுருவுற்ற மெல்லிடைநல் வள்ளியை
மேவியணை கின்ற முருகா!
விஞ்சுபுகழ் கொண்டதெய் வானை யெனு மம்மையை
முதலே வரித்த முதலே!
உன்னை யெக் கணமும் உள்ளத் தயர்க்கிலேம்
உலகை வலம் வந்த உரனே!
உள்ளொன்று வைத்தியாம்புறம் பொன்று ரைக்காத
உசிதகுண மதனை யீவாய்
இன்னலா வெம்மையே னிவ்வாறு எண்ணற்ற
இம்சைப் படுத்து கின்றாய்
இவ்வளவு காலமுஞ் சோதித்த சோதனைகள்
இன்னமும் போத விலையோ
வண்மைகொள் சந்நிதியில் வள்ளி தெய்வானை யொடு
வாழ்வு கொள் கந்தவேளே
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயில்மீதேறி
வந்தெமக் கருளுவாயே!

ஐய' நின்னடிமையாம் அருணிறைவு மன்பன் நீ
அடியவர்கள் தலைவனன்றோ
அநுதினமும் முனையுளத்தகலா திருத்தவும்
அநுரத மும்ப ணியவும்
கையாறி ரண்டுறுங் கருணை முகமாறுடைய
கந்தனே கார்த்தி கேயா
களி பொங்க வெம்முளங் குளிருற்று நடமாடக்
காட்சி தந்தருளுவாயே
செய்ய வேல்வீரனே செங்கதிரையீசனே
செட்டியே செந்தி லிறையே
செப்புதிரு வேரகம் சேருமொரு மூலனே
செய்குவாய் அருளை ஐயா
வளமான சந்நிதியில் வள்ளி தெய்வானை யொடு
வாழ்வு கொள் கந்த வேளே
வடிவேல் கரம் கொண்டு வண்ணமயில் மீதேறி
வந்தெமக் கருளுவாயே!

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# திருமறைக்காடு [வேதாரண்யம்]

திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

"வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்று சமயச் சான்றோரால் போற்றப்படும் திருமறைக் காட்டுறைப் பெரு மான் எழுந்தருளியுள்ள ஸ்தலம் வேதாரண் யம். "திருமறைக்காடு" என்று தமிழிலும், "வேத ஆரண்யம்" என வடமொழியிலும் வழங்கப்பெறும் இத்தலம் திருச்சிக்குக் கிழக்கே நாகபட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள கரையோரத்து திருக்கோயில் ஆகும். திருச்சி, தஞ்சாவூர், நாகபட்டினம், திருத்துறைப்பூண்டி ஆகிய நகரங்களில் இருந்து நேரடி பேருந்து சேவை அடிக்கடி உண்டு.

திருக்கோயிலில் காட்சியளிக்கும் பரஞ்சுடர் லிங்க வடிவாகவும், திருமணக் கோலத்து மணவாளராகவும், "யாழைப் பழித்த மொழியாள்" உடன் உறைபவராக வும் எழுந்தருளியுள்ளார். "வேதாரண்யம் விளக்கழகு" என்பர். சொல்லுக்கு ஏற்றபடி மாலைவேளை வழிபாட்டின்போது வரிசை யாக சரவிளக்குகள் ஏற்றி வழிபாடு செய் வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கோயில் திருக்கதவைப், "பண்ணினேர் மொழியாழ் உமை பங்கரோ" என அப்பர் பெருமான் திறக்கப் பாடியதும், "சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்" என திருஞானசம்பந்தரால் மூடப்பாடியதுமான அற்புதம் நிகழ்ந்த பழம்பெரும் பதி.

அகத்தியர் விசுவாமித்திரர் போன்ற முனிவர்களும் முசுகுந்தச் சக்கரவர்த்தி போன்ற புராண காலத்து மன்னர்களும், பின்னர் வாழ்ந்த சேர சோழ பாண்டிய மன்னர்களும் வழிபட்ட திருத்தலம் இது என ஸ்தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

எரிந்து அணையவிருந்த தீபத் தினைத் தூண்டிய காரணத்தால் அந்த எலியை மாபலிச்சக்கரவர்த்தியாக்கிய பெருமையினை, திருநாவுக்கரசுப் பெருமான் தனது திருத்தாண்டகத்தில், "தூண்டு சுடர ணைய சோதி கண்டாய்" என்ற சொல்லின் வாயிலாக மெய்ப்பித்ததை அறிகிறோம்.

சைவத் திருமுறைகள் இத் தலத்தை மறைக்காடு, மறைவனம், வேத வனம், தென்கைலாயம் என்று போற்றிப் புகழ்கின்றன. தேவாரத்தின் ஏழு திருமுறை களிலும் பதிகம் பெற்ற சிறப்பு இத்தலத் துக்குண்டு. சேரமானுடன் சுந்தரர் வந்து தரிசித்துச் சென்ற ஸ்தலம்.

இறைவனின் திருவிளையாடல் களை "திருவிளையாடற் புராணமாக" தொகுத்துத் தந்த பரஞ்சோதி முனிவர் தோன்றி- வாழ்ந்து- மறைந்த பெருமை இந்த நகருக்கும் ஸ்தலத்துக்குமுண்டு. தாயுமானவர் அவதரித்ததும், திருஞான சம்பந்தர் "கோளறு பதிகம்" பாடிய ஸ்தல மும் இதுவே.

இறைவனின் திருமணங்காண கைலயங்கிரியில் முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் குவிந்தமை யால் வடதிசை தாழ்ந்தும் தென்திசை உயர்ந்தும் சமநிலை அற்றுப்போனது.

நீதி என்பது மனிதனுக்குரிய பண்பு.

"எனது திருமணக் கோலத்தை மறைக்காட்டிற் காண்பிக்கிறேன். தென்திசை செல்வாயாக" என இறைவன் அகத்தியரைப் பணிக்க, அகத்தியரும் தென்திசை சென்று திருமறைக்காட்டில் அமர்ந்திருந்தார். அகத்தியருக்கு வாக்களித்தபடி பெருமான் திருமணக்கோலத்தை காண்பித்தருளிய திருத்தலம் வேதாரண்யமாகும்.

**இறைவன்: மறைக்காட்டீஸ்வரர், வேதாரண்யேசுவரர்**
**இறைவி: யாழைப் பழித்த மொழியம்மை**
**தீர்த்தம்: வேத தீர்த்தம் (எதிரே உள்ள கடல்)**

சுதையினாலான துவார பாலகர்களைத் தொழுது உட்சென்றால் நேராக மூலவர் தரிசனம். மூலவர் வேதாரண்யேசுவரர் சிவலிங்கத் திருமேனியாக உள்ளார். லிங்கமூர்த்தியின் பின்புறம் "மறைக்காட்டுறையும் மணாளர்" திருமணக்கோலத்தில் அழகே உருவாக அம்பிகையுடன் அமர்ந்திருக்கிறார். இம்மணாளருக்கு ஆண்டுக்கு ஒருமுறை திருமஞ்சனம். திருமஞ்சனம் முடிந்ததும் சந்தனக்காப்பு சாத்தப்படும். அது அடுத்த திருமஞ்சன வேளையிலேதான் (அடுத்த ஆண்டு) களையப்படும். ஆகவே மணாளர் சந்தனம் கமகமக்க ஆண்டு முழுவதும் காட்சி தருவார் என்பது விசேட செய்தி. சித்திரை மாதத்து வளர்பிறைச் சப்தமி உச்சிப் பொழுதில் அகத்தியருக்கு இறைவன் இந்தத் திருமணக்கோலத்தைக் காட்டி அருளினான்.

இத்தலத்தில் கிழக்கு நோக்கியபடி அமர்ந்துள்ள அம்பிகையின் பெயர் "யாழைப் பழித்த மொழியம்மை" என்பதாகும். அம்பிகையின் குரல் சரஸ்வதியின் வீணையைவிட இனிமையாக இருந்ததால் அம்பிகைக்கு இப்பெயர் ஏற்பட்டதாக ஸ்தல புராணம் விரித்துக் கூறுகிறது. இதை மெய்ப்பிக்குமாப்போல் இத்தலத்தில் சரஸ்வதியின் கையில் வீணையில்லாமல், தவக்கோலத்தில் சுவடியினைக் கையில் ஏந்தியபடி வீற்றிருப்பதைக் காணலாம். சுற்றுப் பரிவார மூர்த்தங்கள் ஆறுமுகர், அன்னபூரணி, துர்க்கை, தியாகேசர், வீரகத்தி விநாயகர், பைரவர், சூரிய சந்திரர், பள்ளி அறை ஆகியன காணப்படுகின்றன. வெளிப்பிரகாரத்தில் சேர- சோழ- பாண்டியரது தனித்தனிச் சந்நிதிகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து "சின்னத்தம்பி நாவலர்" என்பவர் இத்தலத்துப் பெருமான் மீது "மறைசை அந்தாதி" பாடியுள்ளார்.

ஐந்து நிலைகள் கொண்ட கோபுர வாசலின் இரு மருங்கும், "யாழ்ப்பாணம் வரணி ஆதீனத்தாரால் இக்கோபுரம் கட்டப்பட்டது" என பளிங்குக் கல்லில் பொறித்துள்ளார்கள். இதைப் பார்த்ததும் ஆர்வ மேலீட்டினால் வயது முதிர்ந்த ஒரு அர்ச்சகரை அணுகி விசாரித்தோம். இன்றும்கூட யாழ்ப்பாணம் வரணி ஆதீனத்துப் பரம்பரையினரின் நிர்வாகத்தில், தமிழ்நாடு இந்து அறநிலையத்துறையினருடன் இணைந்து கோயில் நிர்வாகம் நடைபெறுவதையும் அறிய முடிந்தது.

அந்த அர்ச்சகர் எங்களைக் கோயில் வெளிவீதியின் பின்புறம் அழைத்துச் சென்றார். வீதிக்குச் செங்குத்தாக (அதாவது கிழக்கு மேற்காக) உள்ள அகன்ற வீதியில் காணப்படும் "குருக்கள் குடியிருப்பு" அது. அந்த வீதியின் பெயர் இன்றும் "யாழ்ப்பாணத்தார் வீதி" என்றே

*மனிதனை உருவாக்குவதில் துன்பமும் சமமான இடத்தைப் பெறுகின்றது.*

அழைக்கப்படுகிறது. இரு பக்கமும் ஏறக்குறைய ஒரே அமைப்புகொண்ட அந்தக் கால "அக்கிரகாரத்து வீடுகளை" ஒத்த தாகவே இருந்தது.

அவற்றில் அநேகமானவை வைரமான பனைமர கோப்புசங்கள் கொண்ட வீடுகளாகவே இருந்தன. இதற்கான பனை மரங்களெல்லாம் யாழ். வரணியிலிருந்து கொண்டுவரப்பட்டதாக தனது பேரன்- பூட்டன் சொன்ன விபரங்களையும் எம்மோடு பகிர்ந்து கொண்டார். அவரது கூற்று உண்மையானது என்பதைப்போல, கோயில் சுற்றாடலில் உள்ள பழைய வீடுகளும் மரங்களும் வரணியூர் பனைமர கோப்புசங்கள் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

மறைக்காட்டீஸ்வரரையும், யாழைப் பழித்த மொழியாளையும் மீண்டும் மனதில் நிறுத்தி வணங்கித் துதித்து அப்பால் நகருகிறோம்.

பி.கு:

கோபுர வாசலில் "யாழ்ப்பாணம் வரணியூர் ஆதீனத்தார் கட்டியது" என்று இருந்தமையும், வரணியூர் ஆதீனத்து கட்டுப்பாட்டில் இன்னமும் அக்கோயில் அமைந்திருப்பதுவும், இத்தனைக்கும் யாழ்ப்பாண பனைமரங்கள் சாட்சியங்கூறி நிற்பதுவும் எல்லாம், தமிழ்நாட்டின் எந்தத் திருக்கோயிலிலும் ஏற்படாத ஒரு வகையான புல்லரிப்பும் பெருமிதமும் இங்கு ஏற்படுகிறது. அது இந்த மண்ணுக்கே உரிய வாசனையோ!

**"யாழைப் பழித்தன்ன மொழி மங்கையொரு பங்கன்**
**பேழைச் சடைமுடிமேல் பிறை வைத்தானிடம் பேணில்**
**தாழைப் பொழிலூடே சென்று பூழைத்தலை நுழைந்து**
**வாழைக் கனி கூழைக் குரங்குண்ணும் மறைக்காடே"**

**-சுந்தரர்-**

## பங்குனி மாதத்திற்குரிய குருபூசை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | 05.03.2009 | மாசி 21 வியாழன் | கச்சியப்பச் சிவாச்சாரியார் குருபூசை |
| 02. | 11.03.2009 | மாசி 27 புதன் | திருவள்ளுவர் குருபூசை |
| 03. | 12.03.2009 | மாசி 28 வியாழன் | எறிபத்த நாயனார் குருபூசை |
| 04. | 24.04.2009 | பங்குனி 11 செவ்வாய் | தண்டியடிகள் குருபூசை<br>பரமகுரு சாமிகள் குருபூசை |
| 05. | 26.03.2009 | பங்குனி 13 வியாழன் | குழந்தைவேல் சுவாமிகள் குருபூசை |
| 06. | 28.03.2009 | பங்குனி 15 சனி | செல்லப்பா சுவாமிகள் குருபூசை |
| 07. | 31.03.2009 | பங்குனி 18 செவ்வாய் | நேச நாயனார் குருபூசை |

**கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது.**

உ

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

06-03-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "இலக்கியம் காட்டும் வாழ்க்கைநெறி"

**வழங்குபவர்:-** செல்வன் T. ஹர்ஷன் அவர்கள்

[முகாமைத்துவபீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்]

---

13-03-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம் காட்டும் சைவநெறி"

**வழங்குபவர்:-** திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள்

[புதிய உயர்கலைக் கல்லூரி]

---

20-03-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "தேவி பாகவதம்" (தொடர்)

**வழங்குபவர்:-** திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

27-03-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 135ஆவது மாத வெளியீடு

## பங்குனி – 2009

**வெளியீட்டுரை:-** திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[அதிபர், யா/ தொண்டைமானாறு வீ.ம.வி]

**மதிப்பீட்டுரை:-** திரு காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள்

[ஆசிரியர், கனகரெத்தினம் மகா வித்தியாலயம்]

பதிவு இல, Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

# 2009



**JANUARY**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 5 | 12 | 19 | 26 |
| Tu | | 6 | 13 | 20 | 27 |
| We | | 7 | 14 | 21 | 28 |
| Th | 1 | 8 | 15 | 22 | 29 |
| Fr | 2 | 9 | 16 | 23 | 30 |
| Sa | 3 | 10 | 17 | 24 | 31 |
| Su | 4 | 11 | 18 | 25 | |

**FEBRUARY**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 2 | 9 | 16 | 23 |
| Tu | | 3 | 10 | 17 | 24 |
| We | | 4 | 11 | 18 | 25 |
| Th | | 5 | 12 | 19 | 26 |
| Fr | | 6 | 13 | 20 | 27 |
| Sa | | 7 | 14 | 21 | 28 |
| Su | 1 | 8 | 15 | 22 | |

**MARCH**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | 30 | 2 | 9 | 16 | 23 |
| Tu | 31 | 3 | 10 | 17 | 24 |
| We | | 4 | 11 | 18 | 25 |
| Th | | 5 | 12 | 19 | 26 |
| Fr | | 6 | 13 | 20 | 27 |
| Sa | | 7 | 14 | 21 | 28 |
| Su | 1 | 8 | 15 | 22 | 29 |

**APRIL**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 6 | 13 | 20 | 27 |
| Tu | | 7 | 14 | 21 | 28 |
| We | 1 | 8 | 15 | 22 | 29 |
| Th | 2 | 9 | 16 | 23 | 30 |
| Fr | 3 | 10 | 17 | 24 | |
| Sa | 4 | 11 | 18 | 25 | |
| Su | 5 | 12 | 19 | 26 | |

**MAY**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 4 | 11 | 18 | 25 |
| Tu | | 5 | 12 | 19 | 26 |
| We | | 6 | 13 | 20 | 27 |
| Th | | 7 | 14 | 21 | 28 |
| Fr | 1 | 8 | 15 | 22 | 29 |
| Sa | 2 | 9 | 16 | 23 | 30 |
| Su | 3 | 10 | 17 | 24 | 31 |

**JUNE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | 1 | 8 | 15 | 22 | |
| Tu | 2 | 9 | 16 | 23 | 30 |
| We | 3 | 10 | 17 | 24 | |
| Th | 4 | 11 | 18 | 25 | |
| Fr | 5 | 12 | 19 | 26 | |
| Sa | 6 | 13 | 20 | 27 | |
| Su | 7 | 14 | 21 | 28 | |

**JULY**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 6 | 13 | 20 | 27 |
| Tu | | 7 | 14 | 21 | 28 |
| We | 1 | 8 | 15 | 22 | 29 |
| Th | 2 | 9 | 16 | 23 | 30 |
| Fr | 3 | 10 | 17 | 24 | 31 |
| Sa | 4 | 11 | 18 | 25 | |
| Su | 5 | 12 | 19 | 26 | |

**AUGUST**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | 31 | 3 | 10 | 17 | 24 |
| Tu | | 4 | 11 | 18 | 25 |
| We | | 5 | 12 | 19 | 26 |
| Th | | 6 | 13 | 20 | 27 |
| Fr | | 7 | 14 | 21 | 28 |
| Sa | 1 | 8 | 15 | 22 | 29 |
| Su | 2 | 9 | 16 | 23 | 30 |

**SEPTEMBER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 7 | 14 | 21 | 28 |
| Tu | 1 | 8 | 15 | 22 | 29 |
| We | 2 | 9 | 16 | 23 | 30 |
| Th | 3 | 10 | 17 | 24 | |
| Fr | 4 | 11 | 18 | 25 | |
| Sa | 5 | 12 | 19 | 26 | |
| Su | 6 | 13 | 20 | 27 | |

**OCTOBER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 5 | 12 | 19 | 26 |
| Tu | | 6 | 13 | 20 | 27 |
| We | | 7 | 14 | 21 | 28 |
| Th | 1 | 8 | 15 | 22 | 29 |
| Fr | 2 | 9 | 16 | 23 | 30 |
| Sa | 3 | 10 | 17 | 24 | 31 |
| Su | 4 | 11 | 18 | 25 | |

**NOVEMBER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | 30 | 2 | 9 | 16 | 23 |
| Tu | | 3 | 10 | 17 | 24 |
| We | | 4 | 11 | 18 | 25 |
| Th | | 5 | 12 | 19 | 26 |
| Fr | | 6 | 13 | 20 | 27 |
| Sa | | 7 | 14 | 21 | 28 |
| Su | 1 | 8 | 15 | 22 | 29 |

**DECEMBER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mo | | 7 | 14 | 21 | 28 |
| Tu | 1 | 8 | 15 | 22 | 29 |
| We | 2 | 9 | 16 | 23 | 30 |
| Th | 3 | 10 | 17 | 24 | 31 |
| Fr | 4 | 11 | 18 | 25 | |
| Sa | 5 | 12 | 19 | 26 | |
| Su | 6 | 13 | 20 | 27 | |